இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c
குறைந்த வெப்பநிலை 24 °c
மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

காஷ்மீர் எல்லையில் ஊடுருவல் முறியடிப்பு பக். 6

ஒபாமாவின் நடவடிக்கையை ஜோமனி வரவேற்கின்றது பக். 7

மோசமான நிலையில் சங்குப்பிட்டி – கேரதீவு வீதி பக். 9

கம்பீர் இடம்பெறாதமை அதிர்ச்சி பக். 23

உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 055 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 07, திங்கள் 20.01.2014

முறையான விசாரணைக்கு சொல்ஹெய்ம் வலியுறுத்து

கொழும்பு, ஜன.20

மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பில் முறையான விசாரணை தேவை என்று தெரிவித்துள்ளார் ஓ.ஈ.சி.டி. அபிவிருத்தி உதவிக் குழுவின் தலைவரும், நோர்வே சுற்றாடல், சர்வதேச அபிவிருத்தி முன்னாள் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்.

மன்னார் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் நேற்று டுவிட்டர் ஊடாக அவரிடம் வினவப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"நாகரிகமடைந்த அனைத்து நாடுகளிலும் பெரும் புதை குழிகள் கண்டுபிடிக்கப் பட்டன. இவை குறித்து முறையான விசாரணைகள் நடைபெற்றன. குறிப்பாக அவர்கள் யார்? எவ்வாறு இறந்தார்கள் என்ற கேள்விகளுக்கு விடை காண்பதற்கே இந்த விசாரணைகள் நடத்தப்படுகின்றன." மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதை குழி தொடர்பிலும் இத்தகைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மையை வெளிக் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ-சி)

தவறான வழியில் இனி போகாதீர்கள்

தமிழ் மக்களுக்கு மஹிந்த அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன. 20

நீங்கள் இனிமேல் தவறான வழியில் போகாதீர்கள் என்று தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. எந்த இனமும் இன்னொரு இனத்தை அடி பணிய வைக்க முடியாது. அடக்கி ஒடுக்கி வைக்க முடியாது. அப்படியான சூழ்நிலைக்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெல்லிப்பழையில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புற்றுநோய் வைத்தியசாலையைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சமாதான சூழல்

இந்தப் புற்றுநோய் வைத்திய சாலை அமைப்பதற்கான நிதியை திரட்டும் நடை பயணத்தை மேற்கொண்ட இரு இளைஞர்களுக்கும், நாட்டு மக்களின் கௌரவத்தை சமர்ப்பிக்கின்றேன். தெய்வேந்திர முனையிலிருந்து, பருத்தித்துறை வரையில் நடைபயணம் மேற்கொண்டு இந்த நிகழ்வுக்காக மக்களுடைய ஆதரவைப் பெற்று அவர்கள் (குறித்த இரு இளைஞர்கள்) நடந்து வரக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. எனவே வெளிநாட்டவர்கள் என்ன

21 ஆம் பக்கம் பார்க்க

இராணுவத்தின் பிரசன்னத்தால் தமிழரின் சுயகௌரவம் பாதிப்பு

ஜனாதிபதியிடம் முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 20

வடக்கு மக்களின் உள்ளார்ந்த சுயகௌரவத்தைப் பாதிக்கும் வகையிலேயே இங்கு இராணுவப் பிரசன்னம் அமைந்துள்ளது. இதனால் எமது பொருளாதாரத்துக்கும் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனைவிட எமது உள்ளார்ந்த சுய கௌரவத் தையும் இராணுவப் பிரசன்னம் பாதித்திருக்கிறது என ஜனாதிபதியிடம் நேரடியாகச் சுட்டிக்காட்டினார் வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

இராணுவக் குறைப்புக்கான காலவரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் இதன்போது அவர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையைத் திறந்து வைத்த பின்னர், விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் உரை

21 ஆம் பக்கம் பார்க்க



'உதயன்' பத்திரிகைக்கு 'உன்னத சேவைக்கான உயர்விருது' வழங்கப்பட்டுள்ளது. கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் அமைப்பினால் நேற்று வழங்கப்பட்ட இந்த விருதை 'உதயன்' குழுமத் தலைவர் ஈ.சரவணபவன் பெற்றுக்கொண்டார். 'ஒரு வருடத்துக்குள் சர்வதேச ரீதியாக உதயனுக்கு வழங்கப்பட்ட இரண்டாவது உயர்விருது இதுவாகும். கடந்த நவம்பர் 27 ஆம் திகதி பிரான்ஸில் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பினால் துணிச்சல்மிகு ஊடகத்துக்கான உயர்விருது உதயனுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சிகிச்சை நிலையத்துக்கு வடக்கு முதல்வர் அடிக்கல்

நேற்று தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன. 20

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் புற்று நோயைக் குணப்படுத்தும் அதிநவீன றேடியோ தெரபி சிகிச்சை நிலையத்துக்கான அடிக்கல்லை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று நட்டார். தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்த பின்னர், இந்தப் புதிய சிகிச்சை நிலையத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

தென்பகுதியின் தெய்வேந்திர முனையிலிருந்து பருத்தித் துறை முனை வரையிலான

21 ஆம் பக்கம் பார்க்க

கவலைப்படுவதா மகிழ்வதா?

மஹிந்தவின் குழப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 20

விக்னேஸ்வரன் எல்லா மேடைகளையும் தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்துவதை நினைத்து சந்தோசப்படுவதா அல்லது கவலைப்படுவதா என எனக்குத் தெரியவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முதலமைச்சர் முன்னிலையிலேயே நேற்றுத் தெரிவித்தார்.

தெல்லிப்பழை புற்றுநோய்

21 ஆம் பக்கம் பார்க்க

காணாமற்போனோர் தொடர்பான இடைக்கால அறிக்கை விரைவில்

ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஜன.20

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள மூவர டங்கிய ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை விரைவில் வெளியிடவுள்ளது. இதனை ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் நேற்று உறுதிப் படுத்தினார்.

இந்த விடயம் சம்பந்தமாக இறுதி அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் கட்டம் கட்டமாக இடைக்கால அறிக்கைகளை வெளியிட்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பரிந் துரைகள் முன்வைக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் இந்த ஆணைக் குழு தற்போது மேலதிக விசாரணைகளுக்

21 ஆம் பக்கம் பார்க்க

ரயில் தடம் புரண்டதால் சேவைகள் நேற்று பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 20
வவுனியா - மாத்தறை சேவையில் ஈடுபடும் ரயில் புனாவ பகுதியில் தடம் புரண்டதால் கொழும்பு - கிளிநொச்சிக்கான ரயில் போக்குவரத்துச் சேவை நேற்று முற்றாகத் தடைப்பட்டது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.
வவுனியாவிலிருந்து மாத்தறை நோக்கி பயணம் செய்த அதிவேக ரயில் வவுனியா - மதவாச்சி ரயில் நிலையத்துக்கு இடைப்பட்ட புனாவ பகுதியில் நேற்றுக் காலை தடம்புரண்டது.
இதனை அடுத்து கிளிநொச்சிக்கான ரயில் போக்குவரத்து தடைப்பட்டது. இதேவேளை நேற்று இரவு ரயில் பாதை சீர் செய்யப்பட்ட நிலையில் ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளதாக வவுனியா ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார். (ஐ-400)

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம உரிமை வழங்க வேண்டும்

அமைச்சர் வாசுதேவ யாழில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 20
தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இலங்கையில் தாய்மொழிகளாகக் காணப்படுகின்றன. எனவே இரண்டு மொழிகளுக்கும் சமமான உரிமையை நாம் வழங்க வேண்டும். எமது தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு இதுவே அவசியம். இவ்வாறு தெரிவித்தார். தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.
தேசிய மொழிகள் மற்றும்சமூக ஒருமைப் பாட்டு அமைச்சு மற்றும் யாழ். மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து நடத்திய 2014 ஆண்டுக்கான தைப் பொங்கல் விழா நேற்று நல்லூர் ஆலய முன்றலில் நடை பெற்றது.
விழாவுக்கு வருகை தந்த விருந்தினர்கள் பாரம்பரிய கிராமிய நடனத்துடன் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்திற்கு அழைத்து செல்லப்பட

டதைத் தொடர்ந்து மண்டபத்தில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் அவர் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது:
நாட்டின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகளாக இவ்வாறான நிகழ்வுகள் கொண்டாடப் படுகின்றன. இதன் மூலம் அவர்களுடைய பாரம்பரிய, கலாசாரங்கள் வெளிப்படுத்தப் படுவதுடன் இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியும்.
வட பகுதியிலும், தென்பகுதியிலும் இருக்கக் கூடிய கலாசாரங் களுக்கிடையி லான வேறுபாடு கிடையாது. மொழிகள் மாற்றாக இருந்தாலும் அவை இரண்டும் தாய் மொழியாகக் கொள்ளப்படுகின்றன. இரண்டு மொழிகளுக்கும் சமமான உரிமை உள்ளது.
எங்களுடைய வரலாறு, பாரம்பரியக் கலாசாரம் என்பவற்றைக் கொண்டே நாம் வாழ்கின்றோம். மாவட்ட ரீதியாக அந்தந்த கலாசாரங்களுக்கு ஏற்ப நிகழ்வுகள் நடத்தப் படுகின்றன. யாழ்ப்பாணத்தின் கலாசாரத்துக்கு அமைவாக தைப்பொங்கல் விழா இங்கு கொண்டாடப் படுகின்றது. இதன் ஊடாக நாம் எமது ஒருமைப் பாட்டினை வெளிப்படுத்து வோம் - என்றார்.
(ஐ-14-10)

நிதர்சனின் குடும்பத்துக்கு நிதியுதவி

கிளிநொச்சி, ஜன. 20
கிளிநொச்சி திருநகர் தெற்கில் கடந்த 4 ஆம் திகதி திடீரென உயிரிழந்த சிறுவனான வீர லிங்கம் நிதர்சனின் குடும்பத்துக்கு மேலும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற உழவர் பெருவிழாவில் வைத்து வடக்கு மாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் ஒரு லட்சம் ரூபா நிதியை சகோதரியிடம் வழங்கினார்.
காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய பரிபாலன சபையின ரால் வழங்கப்பட்ட நிதியையே வடமாகாண விவசாய அமைச்சு மேற்படி குடும்பத்தின் சுய தொழிலுக்காக வழங்கியுள்ளது.
உயிரிழந்த சிறுவனின் தந்தையாரான சுப்பிரமணியம் வீரலிங்கம் (வயது - 45) புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கொழும்பு சிறைச் சாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
இதனைத் தொடர்ந்து 15 வயதே ஆன உயிரிழந்த சிறுவன் தனது மூன்று சகோதரிகளையும், தாயையும் பராமரிக்கும் பொருட்டு தனது கல்வியை இடை நிறுத்தி தச்சுத் தொழிலில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.
(க-18)

நான்கு இந்தியர்கள் கைது

தென்மராட்சி, ஜன. 20
இந்தியாவில் இருந்து உல்லாசப் பயணிகள் வீசாவில் வந்து தங்கியிருந்த இந்தியர் நால்வரை பளைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். இவர்கள் பளைப் பகுதியில் சாத்திரம், குறி சொல்வதில் ஈடுபட்டிருந்த வேளையே பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.
இவர்கள் நால்வரையும் நேற்று கிளிநொச்சி நீதிவான் எஸ். ஜகாப்தீன் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். (ஐ-400,9)

அமைச்சரின் வருகைக்காக ஊழியர்கள் நேற்றுத் தவம்

யாழ்ப்பாணம், ஜன. 20
அமைச்சர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகளின் வருகைக் காக நேற்று சுமார் 3 மணித்தியாலங்கள் நல்லூர் ஆலய முன்றலில் அரச உத்தியோகத்தர்கள் தவம் கிடந்தனர்.
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு மற்றும் யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து 2014 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழாவை நேற்று ஏற்பாடு செய்திருந்தன.
இந்த நிகழ்வில் விருந்தினர்களாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவநாணயக்கார, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச மட்ட உயர் அதிகாரிகள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.
இந்த நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் உரிய நேரத்தில் அமைச்சர்கள் வரவேயில்லை.
இதனால் விடுமுறை நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை அரச உத்தியோகத்தர்கள் மணிக் கணக்காகக் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. பொறுமை இழந்த சிலர்தமது வீடுகளுக்கும்சென்றதையும் அவதானிக்க முடிந்தது.
நண்பகல் 12.30 மணிக்குப் பின்னர் அமைச்சர் வாசுதேவ நிகழ்விடத்துக்கு வந்து சேர்ந்தார். தொடர்ந்து ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் கலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன் போதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வருகைக்காக கலை நிகழ்வுகளை நீட்டிக்கொண்டே சென்றனர். பிற்பகல் 3 மணியளவில் அமைச்சர் வந்து சேர்ந்தவுடன் நிகழ்வுகள் முடிவுற்றன. இதனால் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டோரும் சினம் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.
(ஐ-14-10)

விபத்தில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 20
விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்டபல்கலைக்கழக மாணவர்கள் குழுவாக மோட்டார் சைக்கிள்களில் ஏ-9 வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை குறுக்கே வந்த ஓட்டோவுடன் விபத்துக்குள்ளானதில் 4 பேர் படுகாயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு முன்பாக ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
குழுவாக மோட்டார் சைக்கிள்களில் பயணித்துக்கொண்டிருந்த வேளை குறுக்கே வந்த ஓட்டோவுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினர். இதன் போது இரண்டு பல்கலைக் கழக மாணவர்களும் ஓட்டோவில் பயணித்த இருவரும் என நால்வர் காயமடைந்தனர்.
காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.
இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் களான இராசநாயகம் மேகதீபன் (வயது - 23), எம். கயாட் (வயது -23) ஆகியோரும் சாவகச்சேரி பெருங்குளத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மதிமுகன் (வயது - 33), சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த செல்வரத்தினம் விமலதாஸ் ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (ஐ-14-9)

முதலமைச்சரின் கேள்விக்கு மஹிந்த மழுப்பலான பதில்

யாழ்ப்பாணம், ஜன. 20
வடக்கில் படைக் குறைப்புக் குறித்து முதலமைச்சரால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகளுக்கு, ஏற்கனவே இராணுவக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாக மாத்திரம் தெரிவித்து மழுப்பினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
தெல்லிப்பழையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வைத்திய சாலையைத் திறந்து வைத்த பின்னர் விசேட அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. வடக்கின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பங்கெடுக்கும் முதலாவது பொது நிகழ்வாக நேற்று இந்த நிகழ்வு அமைந்திருந்தது.
நிகழ்வில் உரையாற்றிய முதலமைச்சர், வடக்கு மக்களின் சுயகௌரவத்தைப் பாதிக்கும் வகையில் இராணுவப் பிரசன்னம் மற்றும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு இருப்பதாகக் குறிப்பிட்டார். எனவே இராணுவக் குறைப்பு தொடர்பில் கால வரையறை செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.
மேலும், தமிழ் மக்கள் கடந்த மாகாணசபைத் தேர்தலில் சமஷ்டிக் கோட்பாட்டை ஆதரித்து வாக்களித்துள்ளனர். எனவே அதிகாரப்பகிர்வை ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் முதலமைச்சர் கோரியிருந்தார்.

அமைச்சர்கள் பதிலளிப்பு

முதலமைச்சர், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, மைத்திரிபால சிறிசேன ஆகியோரே அந்தக் கோரிக்கைகளுக்கு பதிலளித்தனர்.
இதன போது .இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் வந்து பேசுமாறு அமைச்சர்கள் கோரினர். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கெடுத்துள்ள தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிடுகையில், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கு கொள்வதில் நாட்டம் காட்டவில்லை என்று தெரிவித்திருந்தார்.

மழுப்பிய ஜனாதிபதி

தீர்வு தொடர்பில் அமைச்சர்கள் பேசியிருப்பதால் அதைப் பற்றி நான் பேசவில்லை என்று நழுவிய ஜனாதிபதி, வடக்கில் முன்னர் இருந்ததை விட இராணுவத்தினர் குறைக்கப்பட்டுள்ளனர். முழு நாட்டிலும் இராணுவம் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்து முதலமைச்சரின் கோரிக்கைக்கு மழுப்பலான பதிலையே வழங்கினார்.
(ஐ-5)

பருத்தித்துறை நவீன சந்தையில் மரக்கறி விற்பனை

வடமராட்சி, ஜன. 20
பருத்தித்துறை நவீன சந்தையில் மரக்கறி வியாபாரம் அண்மையில் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா. ரவீந்திரனால் ஆரம்பித்து வைக்கப் பட்டது.
புதிய சந்தையில் மரக்கறி வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நகரின் மத்தியில் தெற்குப் புறமாக அமைக்கப் பட்டிருந்த தற்காலிக மரக்கறிச் சந்தை மூடப்பட்டுள்ளது.
அத்துடன் நகரில் நவீன சந்தையைத் தவிர வேறு எங்கும் மரக்கறி விற்பனை செய்யக் கூடாது என்று பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகரசபை தெரிவித்துள்ளது.
(வ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களைக் கடத்தியவர்கள் பிணையில் செல்ல அனுமதி

கிளிநொச்சி முல்லைத்தீவு ஏ.35 வீதி வழியாக தனியார் பயணிகள் பஸ்ஸில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளைக் கடத்திய இரு சந்தேக நபர்கள் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணைகளில் செல்ல கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி குமாரசுவாமிபுரத்தில் இருந்து கடந்த 16ஆம் திகதி சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகள் பஸ் பயணிகள் ஆசனத்தின் கீழ்ப் பகுதியிலும், நடுப் பகுதியிலும் மறைத்து வைத்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்திச் செல்லப்பட்டபோது கடந்த 17ஆம் திகதி கிளி நொச்சிப் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

குறித்த பஸ்ஸும் மரப் பலகைகளும் கைப்பற்றப்பட்ட தோடு அதன் சாரதியும் நடத்துநரும் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அன்

> "-"
>
> பஸ் பயணிகள் ஆசனத்தின் கீழ்ப் பகுதியிலும், நடுப் பகுதியிலும் மறைத்து வைத்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்திச் செல்லப்பட்டபோது கடந்த 17ஆம் திகதி கிளி நொச்சிப் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

றையதினம் மாலை கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றத்தில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலை யில் சந்தேக நபர்களை முன் னிலைப்படுத்தினர். இரண்டு சந்தேக நபர்களை யும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் செல்ல நீதிவான் அனுமதித் தார். (க-55)

மதுபோதைக்கு தண்டனை

ஏ-35 வீதியில் மதுபோதையில் இடையூறு விளைவித்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இரண்டு மாதகாலம் சமூகப் பணியில் ஈடுபடுமாறும் கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சி ஏ-35 வீதியில் மதுபோதையில் காணப்பட்ட நபரொருவர் சென்றவர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டார். இவரைக் கைது செய்த கிளி நொச்சி பொலிஸார் கிளி நொச்சி நீதிமன்றில் முன்னி லைப்படுத்தினர்.

குறித்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் அதனைச் செலுத்தத் தவறினால் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிப்பதோடு இரண்டு மாதகால சமூகப் பணியில் ஈடுப வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தர விட்டது. (க-55)

எமக்கு பதவி உயர்வு கிடைக்குமா?

ஏக்கத்தில் வடமாகாண சிற்றூழியர்



யாழ்ப்பாணம், ஜன.20

வடக்கு மாகாண சபையிலுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் மிக நீண்ட காலங்களாக வகுப்பு II இல் கடமை புரிந்து வரும் அலுவலகப் பணியாளர் பலரும் தமக்கு உரிய காலங்கள் கடந்தும் இதுவரையும் பதவியுயர்வு வழங்கப்படவில்லை என முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மேற்படி அமைச்சுக்கள் திணைக்களங்களில் தாம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக வகுப்புII இல் தொடர்ந்து கடமையாற்றி வருவதாகவும் தம்மை வகுப்பு I இற்கு பதவி உயர்த்துவதற்கான சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டு நீண்ட காலமாகியும் வடக்கு மாகாண சபை அதிகாரிகள் தம்மை இது வரை பதவியுயர்த்துவதற்கான நடவடிக்கை எதனையும் மேற் கொள்ளவில்லை எனவும் சிற்றூழியர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஏனைய மாகாண சபைகளில் கடமை புரியும் இவ்வாறான ஊழியர்களுக்கு இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ள போதிலும் வடக்கு மாகாண சபை ஊழியர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டு இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாண சபையில் பதவியுயர்வு கிடைப்பது முயற்கொம்பே என உணர்ந்த சிற்றூழியர் சிலர் உயரதி காரிகளின் "செல்வாக்கில்" கிழக்கு மாகாண சபைக்கு இடமாற்றலாகி அங்கு சென்று இந்தப் பதவி உயர்வைப் பெற்றுள்ளதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, இந்த விடயத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களாவது இனிக் கவனமெடுத்து இவர்களுக்கான பதவியுயர்வும் சம்பள ஏற்றமும் சீராகக் கிடைக்க ஆவன செய்து தர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட ஊழியர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

தொழில் வாய்ப்பு கிடைக்காத மாற்றுத் திறனாளிகள்

சிலாவத்தைக் கிராமத்தில் பரிதாபநிலை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிலாவத்தைக் கிராமத்தில் தொழில்வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் 130 மாற்றுத் திறனாளிகள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள சிலாவத்தை கிராமத்தில் போர் மற்றும் விபத்துக்கள், பிறப்பு ஆகிய காரணங்களால் மாற்றுத் திறனாளிகளாகக் காணப்படும் 130 பேர் உள்ளனர். ஆனால் இவர்களுக்கான தொழில்வாய்ப்புக்கள் கிடைக்காததால் இவர்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர்.

இந்த நிலையில் சிலாவத்தைக் கிராமத்தில் மாற்றுத் திறனாளி களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அரிசி ஆலை தற்போது இயங்குவதில்லை. இதற்கு காணி மற்றும் கட்டட வசதிகள் இல்லாமையே காரணமெனக் கூறப்படுகின்றது. தற்போது இந்த அரிசி ஆலையை நம்பி வாழ்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தவிடயம்தொடர்பாக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சகிலா விடம் கேட்டபோது அரிசி ஆலையை இயக்குவதற்குத் தற்காலிக இடம் ஒன்றைக் கோரிய போதிலும் அதிகாரிகள் அதனை வழங்குவதற்கு பின்னடித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (க-55)

கிளிநொச்சியில் இடம்பெற்றது வாள் வெட்டுச் சம்பவம்

படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் அனுமதி

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் வாளினால் வெட்டிக் காயப்படுத்தப்பட்ட நபரொருவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் கடந்த 17 ஆம் திகதி 9 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் புகுந்து அந்த வீட்டில் குறித்த நபரைக் கடுமையாகத் தாக்கியதுடன் வாளினாலும் வெட்டிப் படுகாயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் 52 வயதான த.கனகரத்தினம் என்பவரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரின் மகன், படையினரின் பண்ணையில் பணி புரிந்து வருகின்றார் என்றும் மது போதையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.(க-55)

குருநகர் சவக்காலை சந்தி படையினரும் அகன்றனர்

குருநகர், ஜன.20

குருநகர் கடற்கரை வீதியில் சவக்காலைச் சந்திக்கு அருகில் நிலை கொண்டிருந்த படையினர் அங்கிருந்து அகன்று சென்றுள்ளார்கள்.

அவர்கள் அங்கு அமைத்திருந்த தகரக் கொட்டகையையும் கழற்றி எடுத்துச் சென்றுள்ளார்கள். அவர்கள் இங்கு தங்கியிருந்த போது அருகில் அமைந்துள்ள குருநகர் பிரதேச வைத்தியசாலையின் மலசல கூடங்களை தமது அவசிய தேவைகளுக்குப் பயன்படுத்தியமையால் அசௌகரியமான நிலை ஏற்பட்டிருந்தது.

தற்போது அது நீங்கியுள்ளதாக இங்கு வந்து செல்லும் நோயாளர்கள் தெரிவித்தனர். (ஒ-51)

எங்களின் பசு மாடுகளின் மூலம் தென் பகுதிக்கு பால் விநியோகம்

வடக்கு விவசாய அமைச்சர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.20

எமது பகுதிகளில் மாடுகளைப் பிடித்து பண்ணை அமைத்து இராணுவம் தென்பகுதிக்குப் பால் வழங்கிக் கொண்டிருக்க நாம் அங்கிருந்துவரும் பால்மா பைக்கற்றுக்களுக்குக் கூடுதல் விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ்.சத்திரச்சந்தி ஞான வைரவர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கோமாதா பட்டிப் பொங்கல் பூசைகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேலும் கூறியதாவது:

எமது கலாசாரத்துக்கு அமைவாக உழவுக்கு உறுதுணையாக சூரிய பகவானுக்கும் காளைகளுக்கும் பசுமாடுகளுக்கும் நன்றி செலுத்தும் விழாவாக தமிழ் மக்கள் பொங்கல் நாளை உழவர் நாளாகக் கொண்டாடுகின்றனர். எமது உணவுப் பழக்கங்களும் இப்போது மாறிவிட்டன.

உடலுக்குச் சிறந்ததான பசும் பாலை நாம் கவனத்தில் கொள்வதில்லை. பால் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாக தொழிற்சாலைகளை எமது மண்ணில் ஏற்படுத்த வர்த்தகப் பெருமக்கள் முன்வரவேண்டும். அரசு எமது விவசாய நிலங்களை பறித்து நீர்வளத்தையும் சிதைக்கும் வகையில் சுவீகரிக்கப்படும் காணிகளில் கரும்புச் செய்கையை மேற் கொள்ளவுள்ளது.

> "-"
>
> பால் பொருள் களின் உற்பத்தியை அதிகரிக் கக் கூடியதாக தொழிற் சாலை களை எமது மண்ணில் ஏற்ப டுத்த வர்த்தகப் பெருமக்கள் முன்வரவேண்டும்.

நாம் எமக்கான உணவு உற்பத்திகளை மேற்கொள்ள குறைந்த அளவிலான நீரைப் பயன்படுத்த முடியும். கரும்புச் செய்கைக்கு மிகவும் கூடுதலான நீர்பயன்படுத்தப்பட வேண்டும். தென்பகுதியில் நீர்வளம் உண்டு. இங்கே அது அரியதாகவே உள்ளது. நாம் எமது விவசாய நிலங்களையும் நீர்வளத்தையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும்.

நாம் எமது கலாசாரம், பண்பாடுகளைப் பேணிக் காக்க வேண்டும். எமது அடையாளமாக கலாசாரமும் பண்பாடுமே உள்ளன. இன்று வழி தவறிச் செல்லும் நாம் இதனைப் புரிந்து கொண்டு அவற்றைப் பேண வேண்டும் - என்றார். (வ-7)

உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது உழவர் பெருவிழா

வடமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

அக்கராயன், ஜன.20

உழவர் பெருவிழா தமிழர்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

வடமாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கிளிநொச்சியில் தெரிவிப்பு.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் முதன்மைவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

பொங்கல் விழாக்காலத்தில் தான் உழவர் பெருவிழாக்களும் இடம்பெறுகின்றன. எமது கடந்தகாலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர் காலத்தையும் சித்தரிக்கும் போது மனோநிலை தாழ்ந்து சென்று வீழ்ந்து கொண்டிருக் கின்றது. ஆகவே மனோ நிலையை விழாமல் இருப்ப தற்கு நாம் வழி செய்ய வேண்டும்.

வடமாகாணசபை உருவாக்கப்பட்டதன் பின்னர் முதலாவது பொங்கல் விழா கடந்த 14 ஆம் திகதி கொண்டாடப் பட்டது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற தமிழரின் முது மொழிக்கு அமைவாக தைப் பொங்கல் நன்றாகவே ஆரம் பத்தைக் கொடுத்துள்ளது. வவுனியாவில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஒழுங்கு படுத்தலில் உருவாக்கப்பட்ட முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோருக்கான சுகாதார பராமரிப்பு நிலையமொன்றைத் திறந்து வைத்தேன். சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் அந்த நிகழ்வு இடம்பெற்றது. கிளி நொச்சியில் அமைச்சின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும் உழவர் பெருவிழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

> "-"
>
> வடமாகாணசபை உருவாக் கப்பட்டதன் பின்னர் முதலாவது பொங்கல் விழா கடந்த 14 ஆம் திகதி கொண்டாடப் பட்டது. தை பிறந்தால் வழி பிறக் கும் என்ற தமிழரின் முது மொழிக்கு அமைவாக தைப் பொங்கல் நன்றாகவே ஆரம் பத்தைக் கொடுத்துள்ளது.

இந்த விழாவில் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள், பாற்பண்ணையாளர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்படுகின்றமை நல்ல முன்மாதிரியான விடயங்களாகும். தைப்பிறப்பு மகிழ்வாக ஆரம்பிக்கின்றமை பூரிப்பை ஏற்படுத்துகின்றது- என்றார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸி. சிறையில் வாடும் ஈழத்தமிழரைக் காக்கவும்

வைகோ மன்மோகனுக்கு அவசர கடிதம்

சென்னை, ஜன.20

ஆஸ்திரேலியச் சிறையில் வாடும் ஈழத்தமிழர்களைக் காக்க நடவடிக்கை எடுக்கு மாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித் துள்ளார்.

இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்குக்கு எழுதியுள்ள அவசர கடிதத்திலேயே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

இலங்கையில் நடைபெற்ற போரால் தங்கள் உயிர்களைப் பாதுகாக்க, ஈழத்தமிழர்கள் உலகின் பல நாடுகளுக்கும் அடைக்கலம் தேடிச் சென்றனர். இவ்வாறு பயணித்தபோது படகுகள் கவிழ்ந்து பலர் கடலுள் மூழ்கி மடிந்தனர்.

இதில், 46 ஈழத்தமிழர்கள், அடைக்கலம் தேடி ஆஸ்திரே லியாவுக்குச் சென்ற போது ஆஸ்திரேலிய அரச பாதுகாப்பு உளவு நிறுவனம், அடைக் கலம் தேடி வந்த அவர்களைச் சிறையில் அடைக்கச் செய்தது. ஈழத்த மிழ் அகதிகள், இலங் கையில் நடைபெற்று வருகின்ற தமிழ் ஈழ விடுதலைப் போராட் டத் தோடு தொடர்பு உடைய வர்கள் என்று அந்நாட்டின் பாதுகாப்பு உளவு அமை ப்பு, குற்றம் சாட்டி உள்ளது. அடிமை விலங் குகளில் இரு ந்து தங்கள் தாயகம் விடு பட, சுதந்திரம் பெறத் தமிழர்கள் ஏங் குவதும், அதற்காக அக்கறை காட்டுவதும் எந்த விதத்திலும் தவறு அல்ல. இந்த அகதிக ளால் ஆஸ்திரேலிய மக்களுக்கோ, அர சுக்கோ எந்த இடை யூறும் கிடையாது.

அனைத்து உலக ஒப் பந்தங் களின்படி தமிழ் அகதிகளைப் பாது காக்க வேண்டியகடமை ஆஸ்திரேலிய அரசுக்கு உண்டு. அதற்கு மாறாக, கடந்த நான்கு ஆண்டுகளாகச் சிறை யில் அடைத்து வைத்து இருப் பதால், அவர்கள் தாங்க முடி யாத மனத்துன்பத்துக்கும், அமுத் தத்துக்கும் ஆளாகி உள் ளனர். அதனால், இரண்டு ஆண்டு களுக்கு முன்பு ஓர் ஈழத்தமிழ் அகதி தற்கொலை செய்து கொண்டார்.

இலங்கை அரசை திருப்திப் படுத்துவதற்காக, ஆஸ் திரே லிய அரசு, தமிழ் அகதி களை இலங்கைக்கு அனுப்ப முடிவு செய்து உள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில், உரை ஆற்றிய ஆஸ்திரேலியப் பிரதமர், இலங்கை அரசுக்குச் சாத கமாக, ஜனாதிபதி ராஜபக் ஷவுக்கு ஆதரவாக, அரசு நடத் தும் தாக்குதலையும், சித்திர வதையையும் நியாயப் படுத்திப் பேசினார்.

மறுநாளே, இலங்கை அர சோடு ஆஸ்திரேலிய அரசு வணிக ஒப்பந்தம் மேற் கொண்டு இலங்கைக் கடற் படைக்கு இரண்டு கப்பல் களையும் வழங்கி இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், ஏராளமான தமிழ் அகதிகளை ஆஸ்திரேலிய அரசு இலங் கைக்கு அனுப்பியதால், அவர் களுள் பலர் துன்பத்துக்கு ஆளாகி மடிந்தனர். எனவே, தற்போது ஆஸ்திரேலியாவில் உள்ள 46 தமிழ் அகதிக ளையும் அங்கிருந்து இலங் கைக்குத் திருப்பி அனுப்ப விடாமல் தடுத்து, அவர்கள் உயிர்களைப் பாது காக்கத் தேவை யான நடவடிக்கைகளை, இந்தியப் பிரதமர் தூதரக உறவுகள் மூலமாக உடனடியாக மேற் கொள்ள வேண்டுகிறேன் - என்றுள்ளது.

(வ)

ஏனைய மீனவரையும் விடுவிக்க வேண்டும்

வாசன் வேண்டுகோள்

சென்னை, ஜன.20

தமிழக புதுச்சேரி மீனவர் களையும், அவர்களது படகு களையும் விடுவிக்க வேண் டும் என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களி டம் பேசிய அவர் இது தொடர் பில் மேலும் தெரிவித்ததாவது:- இந்தியா-இலங்கை மீன வர்கள் இடையேயான பேச்சு ஒரு வாரம் பிற்போடப்பட் டுள்ளது. இந்த ஒரு வாரத்தில் இலங்கைச் சிறையில் உள்ள தமிழகம் மற்றும் புதுச்சேரி மீன வர்கள் அனைவரையும் இல ங்கை அரசு விடுதலை செய்ய வேண்டும். அவர்களது படகுக ளையும் விடுவிக்க வேண்டும். அதேபோல இந்த கால கட்டத் தில் இந்திய மீன்வர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவதோ, கைது செய்யும் நடவடிக் கையிலோ ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஏதாவது சம்பவங்கள் நடைபெற்றால் அதற்கு இலங்கை அரசு பொறுப் பேற்க வேண்டும். அவ்வாறு நடைபெற்றால் அது ஒப்பந் தத்தை மீறிய செயலாகும்- என்றார்.

(வ)

அண்டை நாடுகளுடனான உறவை பலப்படுத்துக

பா.ஜ.க. காங்கிரஸுக்கு அறிவுரை

இலங்கை உட்பட்ட அண்டை நாடுகளுடன் உறவை வலுப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்திய எதிர்க் கட்சியான பாரதீய ஜன தாக்கட்சி காங் கிரஸ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய சபை கூடிய போது அதில் உரையாற்றிய கட்சியின் தலைவர் ரஞ்சித் சிங் இதனை வலியுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷ், சீனா, இலங்கை, ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுடன் இந்திய உறவுகளைப் பலப் படுத்திக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

(வ)

கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

தவறிவிட்டது

தியாகலிங்கம் வைகுந்தன் ,ஆகிய எனது (923214402V) இலக்கமுடைய NIC யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக் கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 6280685, 021 2222742 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

மீனவர் பேச்சில் நல்ல முடிவுஎட்டப்படும்

நாராயணசாமி நம்பிக்கை

சென்னை, ஜன.20

தமிழக-இலங்கை மீனவர்களிடையே நடை பெறும் பேச்சில் நல்ல முடிவு ஏற்படும் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

சென்னை, விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களுக்கு மத்திய இணை அமைச் சர் நாராயணசாமி பேட்டி அளித்தார். இதன் போது அவர் மேலும் தெரி வித்ததாவது:-

நடைபெற உள்ள தமிழக- இலங்கை மீனவர்களின் பேச்சில் நல்ல முடிவு ஏற்படும். அந்த பேச்சில், கடலில் மீன் பிடிப் பதற்கான எல்லை வரையறை செய்து உடன் பாடு செய்யப் படும்.

டிசெம்பரில் நடைபெற வேண்டிய மீனவர் களின் பேச்சை தமி ழக அரசுதான் தாம தப்படுத்தியது- என் றார்.

(வ)

மரண அறிவித்தல்

சோமசுந்தரம் நாகரத்தினம்

பூநகரியைப்பிறப்பிடமாகவும், பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது 3 ஆம் ஒழுங்கை கோயில்புதுக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நாக ரத்தினம் நேற்று (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் திருநிறைசெல்வி, பாலச்சந்திரன், திருயோகசெல்வ ராணி (கல்வி அமைச்சு, வடமாக ாணம் யாழ்ப்பாணம்), இரவிச் சந்திரன் (பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், சுகாதார திணைக்களம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும் குணரட்ணம், புனிதவதி காலஞ்சென்ற சண்முகராசா (ஆசிரியர், கிளிநொச்சி), சரதாம்பாள் (ஆசிரியர், ஆசிகுளம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் மாமியும் ஹம்சானந்தி (கனடா), ஜெயானந்தி (ஆசிரியர், நீர்கொழும்பு), அஜந்தன் (இலங்கை வங்கி வட பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணம்), திகம்பரன், பவதுர்க்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 5 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோயிற்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
3 ஆம் ஒழுங்கை
கோயிற்புதுக்குளம் வவுனியா
இரவிச்சந்திரன்
(மகன்)

கல்லீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் புவியியல் ஆசிரியரான
இ. கார்த்தீபனின் அன்புத் தந்தை
அமரர் இராசையா இராஜேஸ்வரன்
(கோப்பாய் மத்தி காளி கோயிலடி)

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள் கின்றோம். நீர்வேலி வடக்கு, நீர்வேலி சுடர் கல்வி நிறுவனம்

மரண அறிவித்தல்

ஆறுமுகம் சந்திரகுமார் (சின்னராசா)

(முன்னாள் களஞ்சியக் காப்பாளர் கைதடி - கமநல சேவை நிலையம்)

கைதடி தென்கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சந்திரகுமார் 18.01.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - திருப்பதிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - நல்லதங்கம் தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி கமலாதேவி சண்முகரத்தினம் காலஞ்சென்ற ஆறுமுகம் சூரியகுமாரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் Dr.பொ. சண்முகரத்தினம், திருமதி தயாபரி சூரியகுமாரன் (ஆசிரியர் கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்) ஆகியோரியன் அன்புமைத்துனரும் திருமதி நளினி கருணானந்தன் (நோர்வே), திருமதி ஜெயமாலினி சத்தியேந்திரன், திருமதி ஜெயந்தினிபகீரதன் (நோர்வே), Dr ச. பரமானந்தம், கருணானந்தன் (நோர்வே), ச. சத்தி யேந்திரன் (நீயூ பாமா ஹாட்வெயார்), ஜெ. பகீரதன் (நோர்வே), Dr ப. அட்சரேஸ்வரி ஆகி யோரின் அன்புமாமனும் சூ.கோகுல ரமணன், சூ.மயூரன் ஆகியோரின் அருமை சிறிய தந்தையும் அட்சயன், அபிசரன், அபிராமி, நிசான் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் சி. பவளகாந்தன் (லண்டன்), திருமதி பவளராணி நல்லநாதன், சி. பவளநாதன் (மாவட்ட முகாமையாளர் NAITA - வவுனியா), சி.பவளகுமாரன் (அதிபர் யா / கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி) காலஞ்சென்றவர்களான திருமதி கமலேஸ்வரி நித்தியானந்தன், ச.சிவகுமாரன் மற்றும் ச. செல்வகுமாரன் ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 021 321 1220
077 1608595

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்ப பிரணநமக

மரண அறிவித்தல்

இராசையா இராஜேஸ்வரன்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தி, காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜேஸ்வரன் (கிளாக்கர்) அவர்கள் 18.01.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயா -மணி தம்பதியரின் எகபுதல்வனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னமா தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கலட்சுமி (சிந்தனா) அன்புமனைவியும் ஜெசிந்தா, ரசிந்தா, வசந்தா, கார்த்தீபன் (யாழ். பல்கலைக்கழக மாணவன்), பிரிந்தா (யாழ். பல்கலைக்கழக மாணவி), சுகிர்தா (அலியான்ஸ் கம்பனி திருநெல்வேலிக்கிளை) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பாக்கியம் (ஈசு) மற்றும் இராசமலர், இந்திரகுமார், இருதயகுமார், இராஜசங்கர் (கனடா), இராஜகுமார் ஆகியோரின் சகோதரனும் முகுந்தன், பிரபாகரன் ஆகியோரின் மாமனாரும் சுவஸ்திகா சஞ்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் இன்று (20.12.2014) பி.ப. 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி கோப்பாய் மத்தி
077 6084929, 077 8263359

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு, உள்ளூர் சேவை பஸ்கள் இரண்டுமே ஒரே நேரத்தில் பழுது

மக்கள் போக்குவரத்தில் சிரமம்

யாழ்ப்பாணம், ஜன.20

நெடுந்தீவுக்கான உள்ளூர் போக்குவரத்துச் சேவையில் உள்ள இ.போ.ச.பஸ்கள் இரண்டும்பழுதடைந்துள்ளதால்கடந்த இரண்டு தினங்களாக பஸ் சேவைஸ்தம்பிதமடைந்துள்ளது.

ஒரே சமயத்தில் இரண்டு பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும் நிலையில், ஒன்று பழுதடையும் பட்சத்தில் உடன் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும், மற்றைய பஸ்ஸும் பழுதடைந்ததால் இரண்டும் சேவை யில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலை ஏற்படுகிறது என்றும் நெடுந்தீவு மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

பஸ் சேவை நடைபெறாதால், படகுச் சேவையை தவறவிட நேரிடுகிறது என்றும் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.(ஒ-7)

நீர் இறைக்கும் இயந்திர உபகரணத் திருட்டு அதிகரிப்பு

தென்மராட்சி,ஜன.20

தோட்ட மற்றும் வீடுகளின் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் இறைக்கும் இயந்திரங்களின் 'புட்வால்வ்' மற்றும் 'கப்ளின்' திருட்டு கைதடிக்கும் பரவியுள்ளது. கடந்த வியாழக்கிழமை இரவு கைதடி மத்தி, கைதடி வடக்கு ஆகிய இடங்களில் இருபதுக்கும் மேற்பட்ட தோட்டங்களிலும் குடியிருப்புகளிலும் கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த குழாய்களை வெளியே எடுத்துச் செப்புப் பொருள்கள் வாள்களால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

> இருபதுக்கும் மேற்பட்ட தோட்டங்களிலும் குடியிருப்புகளிலும் கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த குழாய்களை வெளியே எடுத்துச் செப்புப் பொருள்கள் வாள்களால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த வருடம் சாவகச்சேரி கல் வயலில் இவ்வாறான செப்புப் பொருள் திருட்டுக்கள் ஆரம்பமாகி மட்டுவில் சரசாலை, வேம்பிராய், மந்துவில் போன்ற இடங்களில் நூற்றுக்கு மேற்பட்ட 'புட்வால்வ்' மற்றும் கப்ளின்கள் திருடப்பட்டும் இது தொடர்பாக இதுவரை எவரும் பொலி ஸாரால் கைது செய்யப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பயிர்களுக்கு சுழற்சி முறையில் நீர் இறைக்கப்படுவதால் இரவோடிரவாக செப்புப் பொருள்கள் திருடப்படுவதால் விவசாயிகள் பயிருக்கு நீர் இறைப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

உ.கிழங்கு அறுவடை திகதியை பதிவு செய்க

அச்சுவேலி,ஜன.20

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கிழங்கை அறுவடைசெய்யஉத்தேசித்திருக்கும் திகதியைத் தமது பிரதேச உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்யுமாறும் சங்கங்கள் உறுப்பினர்களின் அறுவடைத் திகதி அட்டவணையை சமாசத்தில் சமர்ப்பிக்குமாறும் யாழ். மாவட்ட சமாசத்தின் செயலா ளர் அறிவித்துள்ளார்.

"அறுவடை செய்ய உத்தேசித்திருக்கும் திகதியை அறிந்து அவர்களின் தோட்டங்களுக்கு நேரில் சென்று உருளைக்கிழங்கை சதொச நிறுவனம் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கு வசதியாகவே உத்தேச அறுவடைத் திகதி திரட்டப்படுகின்றது" என்று சமாசத்தின் செயலாளர் ஜே.என்.ஜெயகிருஷ்ணன் தெரிவித்தார். (வ-11)

சந்தைக்குப் பாதுகாப்பு

கொட்டடி மீன் சந்தை பாதுகாப்பான முறையில் கம்பி வலையால் அமைக்கப்பட்டுள்ளது. சந்தைக்குள் பறவைகள் சென்று மீன்களை எடுத்துச் செல்வதாலும் மற்றும் அவை எச்சம் போடுவதாலும் நுகர்வோர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கினர். எனவே சந்தையின் பாதுகாப்புக்காக தற்போது கம்பியினால் வலை அமைக்கப்பட்டுள்ளது. (வ-17)

உ.கிழங்கு கொள்வனவுக்கு முன்வந்தது 'சதொச'

அச்சுவேலி, ஜன.20

யாழ்.மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உருளைக் கிழங்கு முழுவதையும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் கொள்வனவு செய்வதற்கு முன்வந்துள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் உருளைக்கிழங்கு கொள்வனவு ஆரம்பமாகின்றது.

அறுவடை செய்யப்படும் தோட்டங்களுக்கு நேரில் சென்று எந்தவிதமான கழிவுகளும் இன்றி கிலோ ஒன்று 70 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. உருளைக்கிழங்கின் சந்தை விலை அதிகரிக்கும் போது கொள்வனவு விலையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர் சங்கங்களின் சமாசத்தின் நிர்வாகிகள் உள்ளடக்கிய குழு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் யாழ்.மாவட்ட கமநல சேவை ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன் ஆகியோ ரைச் சந்தித்துப்பேச்சு நடத்தப் பட

டது. அதை அடுத்து அரச அதிபர் மற்றும் கமநல சேவை ஆணையாளர் ஆகியோர் சதொச நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உருளைக் கிழங்கு கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் எந்த விதமான கழிவும் இல் லாமல் விவசாயிகளின் தோட்டங்களுக்கு நேரில் சென்று உருளைக் கிழங்கை கொள்வனவு செய்வதோடு அதற்கான கொடுப் பனவையும் உடனே வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு வாய்ப்பாக உள்ளது என்று உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் செய லாளர் ஜெ. என்.ஜெயகிருஷ் ணன் தெரிவித்தார்.

> கழிவுகளும் இன்றி கிலோ ஒன்று 70 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. உருளைக் கிழங்கின் சந்தை விலை அதிகரிக்கும் போது கொள்வனவு விலையும் அதிகரிக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் காலபோகத்தில் 200 ஏக்கர் வரை உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்பட்டுள்ளது. விவசாயிகள் அறுவடை செய்து வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதாயின் ஏற்றுக் கூலி, இறக்குக்கூலி மற்றும் மூடை ஒன்றுக்கு குறிப்பிட்ட அளவு நிறைக்கழிவு, தரகு என பல்வேறு விதமான செலவுகளை எதிர்கொள்வதோடு விலையும் உரிய அளவில் இல்லாமல் இருக்கலாம்.

யாழ்.மாவட்ட விவசாயிகளின் உருளைக்கிழங்கு அறுவடை செய்யும்போது வெளிநாட்டில் இருந்து உருளைக்கிழங்கை இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்துவதோடு அதற்கான இறக்குமதி வரியை அதிகரிப்பது என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டதை அடுத்தே யாழ்.மாவட்ட விவசாயிகள் கால போகத்தில் ஆர்வத்தோடு உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த வருடம் விளைச்சலும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாமல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (வ-11)

வெறுங்கையுடன் திரும்பிய திருடர்

கைதடி, ஜன.20

நள்ளிரவு வேளை கூரை பிரித்து தபாலகத்தினுள் புகுந்த திருடர்கள் கையில் ஒன்றும் அகப்படாததனால் கடிதங்கள் சிலவற்றைக் கிழித்தெறிந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிய சம்பவம் ஒன்று கடந்த வாரம் கைதடி தபால கத்தில் இடம்பெற்றுள்ளது.

இரவுவேளை ஓடு பிரித்து உள்நுழைந்த இந்தத் திருட்டுக் கும்பல் சல்லடை போட்டு தேடிய போதும் ஒன்றும் அகப்படாத நிலையில் அங்கிருந்த இரும்புப் பெட்டியின் இரகசிய இலக்கத்தை அறியாது விடியும் வரை இரும்புப் பெட்டியை போட்டுச் சுற்றி

விட்டு கலைத்த நிலையில் கோப மேலீட்டால் கடிதங்கள் சிலவற்றைக் கிழித்தெறிந்து விட்டு ஒன்றுமே கைக்குக் கிடைக்காத நிலையில் வெறுமனே திரும்பியுள்ளனர். மறுநாள் காலை அலுவலகம் வந்த ஊழியர்கள் இதனை அவதானித்து சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த வருடமும் இவ்வாறு திருடர்கள் நுழைந்து கையில் அகப்பட்டதை எடுத்துச் சென்றதை அடுத்து தபாலக நிர்வாகம் புதிய இரும்புப் பெட்டகத்தை வாங்கி முத்திரைகள், பணம் என்பவற்றை பாதுகாப்புக் கருதி வைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-288)

காலநிலை மாற்றத்தால் கடற்றொழிலாளர் பாதிப்பு

தென்மராட்சி,ஜன.20

அண்மையில் நிலவிய காலநிலை மாற்றத்தால் கடற்றொழிலில் ஈடுபடுவோர் உழைப்பின்றிய நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

தென்மராட்சி கடலோரி மற்றும் கடலில் தற்போது இறால் சீசன் காலமாக இருந்த போதிலும் கடல் நீர் வரத்து இல்லாததால் குறைந்த அளவில் பிடிபடுவதாகவும் தெரிவித்தனர்.

போதிய அளவு மழை வீழ்ச்சி இல்லாததால் அடிக்கடி இடம் பெறும் கடல் கொந்தளிப் பாலும் தினமும் தொழிலுக்குச் செல்வோர் வெறுங்கையுடன் கரை திரும்புவதாகவும் தெரிவித்தனர்.

தற்போதைய உழைப்பு இல்லாத நிலையை கருத்திற் கொண்டு சாவகச்சேரி, கச்சாய், மறவன்புலோ, தளங்கிளப்பு, கேரதீவு, கெற்பேலி, கோவிலாக்கண்டி ஆகிய தென்மராட்சி பிரதேச கடற்றொழிலாளர்கள் தமக்கு அரசிடமிருந்து நிவாரணம் பெற்றுத் தருமாறு கோரியுள்ளதாக கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மோடிக்கு சரியானவர் ராகுல் அல்ல

புதுடில்லி, ஜன.20

பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கும் நரேந்திர மோடியை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி பொருத்தமானவர் அல்ல என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"சிவ்ராஜ்சிங் சவுகான், வசுந்தரா ராஜே மற்றும் ராமன்சிங் ஆகியோர் திறமையாகச் செயற்பட்டமையால்தான் மூன்றாவது முறையாகவும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தனர். ஆனால் ராகுலால் அது முடியாது. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் அவரால் வெற்றிக் கோட்டை நெருங்கக் கூட முடியாது. ராகுல் எந்த விதத்திலும் மோடியை எதிர்ப்பதற்குப் பொருத்தமானவர் கிடையாது" என்று தெரிவித்துள்ளார். (ற)

காங்கிரஸ் ஆட்சியில் பெரும் ஊழல்கள்

புதுடில்லி, ஜன.20

இந்திய வரலாற்றில் கடந்த 10 ஆண்டுகளில்தான் மிகப் பெரிய அளவுக்கு ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று விமர்சித்துள்ளார் பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி.

"மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவே பாரதிய ஜனதா முயற்சி செய்கின்றது. ஆனால் பிரிவினையை உண்டாக்கி ஆட்சியைத் தக்க வைக்க காங்கிரஸ் நினைக்கின்றது. தேர்தல் வெற்றியை எதிர்த்துப் போட்டியிட காங்கிரஸ் கட்சி அஞ்சுகிறதா?. நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சி தோல்வியைச் சந்திக்கும். பிரச்சினை எழும்போதெல்லாம் அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்காமல், வெறுமனே குழுக்களை மட்டும் அமைக்கின்றார் பிரதமர் மன்மோகன்சிங்" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

டில்லியில் கடும் குளிர்

புதுடில்லி மற்றும் உத்தரப்பிரதேசத்தில் கடும் குளிரால் 26 பேர் உயிரிழந்துள்ளனர். புதுடில்லியில் வாட்டியெடுக்கும் குளிரால் வீதியோரவாசிகள் 11 பேர் உயிரிழந்துள்ளனர். அதையடுத்து கடும் குளிரால் வீதியோரங்களில் அவதிப்படுபவர்களுக்கு உடனடியாக உறைவிடம் அமைத்துக் கொடுக்குமாறு அந்த மாநில முதலமைச்சர் கெஜ்ரிவால் உத்தரவிட்டிருந்தார். அதேவேளை, உத்தரபிரதேச மாநிலத்தில் நிலவும் கடும் குளிரைத் தாங்கமுடியாமல் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

காஷ்மீர் எல்லையில் ஊடுருவல் முறியடிப்பு

ஸ்ரீநகர், ஜன.20

இந்தியாவின் ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப் பகுதியூடாக ஊடுருவ முற்பட்ட தீவிரவாதிகள் இருவர் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பூஞ்ச் மாவட்டம் கிருஷ்ணா காதி பகுதியில் தீவிரவாதிகள் சிலர் ஊடுருவ உள்ளனர் என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதிகளில் இரகசிய பாதுகாப்பு ஏற்பாடுகளை இந்திய இராணுவத் தரப்பு மேற்கொண்டிருந்தது. இந்தநிலையில் அந்தப் பகுதியால் ஊடுருவ முயன்ற தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் துப்பாக்கி மோதல் ஏற்பட்டது. அந்த மோதங்களில் தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டதுடன், தீவிரவாதிகள் இருவர்



உயிரிழந்துள்ளனர் என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போது காஷ்மீர் பகுதிகளில் கடும் குளிர் நிலவி வருகின்றது. அதனைப் பயன்படுத்தி எல்லைப் பகுதியூடாக தீவிரவாதிகள் ஊடுருவுவதற்கு முயற்சிப்பது வழமை. அதனால் அந்தப் பகுதிகளில் இந்திய இராணுவம் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுக்கள் கடந்த வார இறுதியில் நடைபெற்றன. இந்தநிலையிலேயே தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சி இடம்பெற்றுள்ளது. (ற)

தேர்தலில் அமோகமாக வெற்றிபெறும் பா.ஜ.க.

சுஷ்மா சுவராஜ் கூறுகின்றார்

புதுடில்லி, ஜன.20

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி 272க்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற்றும் என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் நடந்து முடிந்த 5 மாநில சட்ட சபைத் தேர்தல்களில் 4 மாநிலங்களில் தோல்வியை தண்டது காங்கிரஸ். அதுபோன்று காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றத் தேர்தலிலும் தோல்வியைச் சந்திக்கும். அந்தப் பயத்தில்தான் பிரதமர் பதவிக்கான வேட்பாளரை காங்கிரஸ் அறிவிக்கவில்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவி சோனியா காந்தி தனது கட்சியின் பிரதமர் வேட்பாளரை இன்னும் அறிவிக்கவில்லை. பிரதமர் வேட்பாளரை முன் கூட்டியே அறிவிப்பது காங்கிரஸ் கட்சியின் பாரம்பரியம் இல்லை என்று கூறியுள்ளார் சோனியாகாந்தி. தன் தலைவர் யார் என்று தெரியாமல் தொழிலாளர்கள் பணியாற்றுவது காங்கிரஸில் மட்டும் தான் நடக்கும். என்ன பாரம்பரியமோ? என்ன கட்சியோ?" என்று கடுமையாக விமர்சித்துள்ளார். (ற)

ஆட்சி அதிகாரம் எமது இலக்கல்ல

மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்

சென்னை, ஜன.20

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் இலக்கு ஆட்சி அதிகாரம் பெறுவதில்லை. மாறாக மக்களுக்கு தொண்டாற்றி சேவை புரிவதே என்று தெரிவித்துள்ளார் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்தியா கடந்த 10 ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. அந்த வளர்ச்சி இனியும் தொடரும்.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொள்ளவிருக்கும் காங்கிரஸ் கட்சி குறைந்தது 272 வேட்பாளர்களை 35 வயதிற்கும் குறைவானவர்களாக முன் நிறுத்த வேண்டும். இளைஞர்கள் கையில் பொறுப்பை ஒப்படைக்கும் வகையில் காங்கிரஸ் இந்த முடிவை எடுக்க வேண்டும்.

பிரித்தாள்வது அல்ல ஒருங்கிணைப்பதே எமது கொள்கை. நாட்டு மக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு சேவை செய்வதுதான் காங்கிரஸின் லட்சியம். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் நோக்கம் சமமான வளர்ச்சி, அனைவருக்கும் சமூக நீதி என்பதுதான்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

ஆம் ஆத்மியுடன் கூட்டணி அமைக்குமா தே.மு.தி.க.?

சென்னை, ஜன.20

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் புதிய திருப்பமாக தமிழகத்தில் ஆம் ஆத்மி கட்சியுடன் தே.மு.தி.க. கூட்டணி அமைக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள தே.மு.தி.கவின் மாநில மாநாட்டில் யாருடன் தேர்தல் கூட்டணி என்பது குறித்து அந்தக் கட்சியின் தலைவர் விஜயகாந்த் அறிவிக்கவுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த விஜயகாந்த், "என் மனதுக்குள் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். யாரும் எதிர்பார்க்காத வியூகம் அது" என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே தே.மு.தி.கவின் மாநில மாநாட்டுக்கான முழக்கமாக "ஊழலை ஒழிப்போம்" என்ற வாசகம் பிரதானமாக இடம் பெற்றிருப்பது அரசியல் வட்டாரங்களை ஆச்சரியப்படுத்தியிருப்பதுடன், பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

விஜயகாந்த் கூறிவருவது போல யாரும் எதிர்பார்க்காத வகையில், "ஊழலை ஒழிப்

போம்" என்ற முழக்கத்துடன் புதுடில்லியில் ஆட்சியைக் கைப்பற்றிய ஆம் ஆத்மியுடன் தே.மு.தி.க கூட்டணி அமைக்கக் கூடும் என்ற சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது.

ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி அமைப்பதன் மூலம் பெரும்பாலானோர் கவனத்தை ஈர்க்க முடியும் என்றும் பெருவாரியான தொகுதிகளில் போட்டியிட முடியும் எனவும் தே.மு.தி.க. கருதுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதேவேளை, தி.மு.கவுடன் தே.மு.தி.க. நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி அமைக்கும் என்று எதிர்பார்ப்பு நிலவிவந்தது. ஆனால் தி.மு.கவுடன் கூட்டணி குறித்த பேச்சுக்கள் நடைபெறவில்லை என்று தி.மு.க. அறிவித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குண்டுத் தாக்குதல்

ஆப்கன் தலைநகர் காபூலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஐ.நா. அதிகாரிகள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளனர். வெளிநாட்டவர்கள் அதிகம் வந்து செல்லும் வாசிர் அக்பர் கான் என்ற உணவகத்தின் நுழைவாயில் அருகில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு உரிமைகோரியுள்ளது. தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன், பொதுமக்களுக்கு எதிரான இது போன்ற தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார். (ற)

முயலை வீழ்த்திய ஆமை

சீனாவில் நடந்த சுவாரசியம்

பீஜிங், ஜன.20

முயலை வென்ற ஆமை என்ற கதையை நாங்கள் சிறுவயதில் கேள்விப்பட்டிருக்கின்றோம். சீனாவில் நடந்த போட்டி ஒன்றில் முயலை வென்று ஆமை முதலிடம் பிடித்துள்ள சுவாரசியமான சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

சீனாவில் அண்மைக்காலமாக பனிச்சறுக்கு விளையாட்டுகள் பிரபலமடைந்து வருகின்றன. ஹீனன் மாகாணத்தில் செல்லப் பிராணிகளுக்கான பனிச்சறுக்கு மற்றும் சக்கரமில்லா வண்டி (ஸ்லெட்ஜ்) ஓட்டும் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அதில் பூனை- நாய்கள் ஒரு அணியாகவும், சேவல்-வாத்துகள் மற்றொரு அணியாகவும் அதேபோன்று முயல்-ஆமைகள் வேறொரு அணியாகவும் போட்டிகள் நடைபெற்றன. இதில் மிகவும் சுவாரசியமாக முயலுடன் போட்டியிட்ட ஆமை வெற்றி பெற்றது.

குளிர்காலத்தில் தூங்கும் தன்மையைப் பெற்ற, ஆமை அதன் உரிமையாளரின் தூண்டுதலால் முதலிடத்தைப் பெற்றுள்ளது. (ற)

இராணுவ குடியிருப்பில் குண்டுத் தாக்குதல்

பாகிஸ்தானில் 22 இராணுவத்தினர் சாவு

இஸ்லாமாபாத், ஜன.20

பாகிஸ்தானில் இராணுவத்தினரின் குடியிருப்புத் தொகுதியில் நடத்தப்பட்ட குண்டு தாக்குதலில் 22 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 38 பேர் காயமடைந்தனர்.

வடக்கு வசிரிஸ்தானில் அமாண்டி சௌக் பகுதியில் உள்ள இராணுவக் குடியிருப்புத் தொகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வெடிகுண்டுகள் நிரப்பிய காரை மோதி தீவிரவாதிகள் வெடிக்கச் செய்துள்ளனர். ஆனால் தற்கொலைப்படை தீவிரவாதிகளால்தான் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதா என்பது குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. இந்தத் தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். (ற)

ஒபாமாவின் நடவடிக்கையை ஜேர்மனி வரவேற்கின்றது

அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவிப்பு

பெர்லின், ஜன.20

உளவு நடவடிக்கைகள் தொடர்பான சட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்த எத்தனிக்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்றோம் என்று தெரிவித்துள்ளது ஜேர்மனி.

அமெரிக்க உளவு அமைப்பான என்.எஸ்.ஏ. உலகநாடுகளின் பல்வேறு தலைவர்களுடைய தொலைபேசி உரையாடல்கள் மற்றும் மின்னஞ்சல்களை இரகசியமாகக் கண்காணித்தது என்ற தகவலை அந்த அமைப்பின் முன்னாள் பணியாளரான எட்வேர்ட் ஸ்நோடன் வெளியிட்டிருந்தார். அதையடுத்து அமெரிக்காவின் நட்பு நாடான ஜேர்மனி இந்த விடயம் குறித்துக் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தது.

இந்தச் சர்ச்சைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், நட்பு நாடுகளின் தலைவர்களின் தொலைபேசி உரையாடல்களை கண்காணிப்பதற்குத் தடை விதித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மேர்கலின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன், "ஒபாமாவின் இந்த நடவடிக்கைக்கு ஜேர்மனி ஜனாதிபதி வரவேற்புத் தெரிவித்துள்ளார். அமெரிக்கர்கள் அல்லாதோரின் உரிமைகள், தொடர்பாடல்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

செவ்வாயில் விவசாயம்

சாத்தியம் என்கின்றனர் விண்வெளி ஆய்வாளர்கள்

பிரிட்டன், ஜன.20

செவ்வாய்கிரகத்தில் விவசாயம் செய்யலாம். குறிப்பாக உணவு தானியங்களை பயிரிடலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர்.

டச்சு பல்கலைக்கழகத்தை சேர்ந்த சுற்று சூழல் விஞ்ஞானி விஜ்ஜர் வேம்லிங் இத் தகவலை வெளியிட்டு உள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"செவ்வாய் மற்றும் நிலவில் தாவரங்களை வளர்க்க முடியுமா என்ற ஆராய்ச்சிக்காக நாசா வழங்கிய செவ்வாய் மற்றும் நிலவின் செயற்கை மண்ணில் 14 தாவர இனங்களைப் பயிரிட்டு சோதனை நடத்தப்பட்டது.

இந்த சோதனை 50 நாள்கள் நடைபெற்றன. ஆச்சரியப்படத்தக்க வகையில் சில தானியங்கள் 24 மணி நேரத்தில் வளர்ந்து இருந்தன. சில இனங்கள் பூத்துக் குலுங்கின. தக்காளி மற்றும் கரட் இனங்கள் வளர்ந்து இருந்தன. சில விதைகள் முளைவிட்டு இருந்தன. மொத்தம் 840 பானைகளில் 4,200 விதைகள் பயிரிடப்பட்டன. இது போல அரிசோனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட எரிமலைமண்ணிலும் சோதனை நடத்தப்பட்டது." என்று தெரிவித்துள்ளார். (ற)

சிரியக் கிளர்ச்சியாளர் பேச்சுக்குச் சம்மதம்

டமஸ்கஸ், ஜன.20

சிரியாவில் அந்நாட்டு ஜனாதிபதி பஸார் அல் அசாத்துக்கு எதிராகப் போராடிவரும் கிளர்ச்சியாளர்கள் அமைதிப் பேச்சுகளில் ஈடுபடுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்றுவரும் சிரிய உள்நாட்டுப் போரால் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 80 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தநிலையில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையாக அடுத்தவாரம் ஜெனிவாவில் [illegible]தலைவர்களில் ஈடுபடும் இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்தநிலையில் அந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று சிரியக் கிளர்ச்சியாளர்கள் அறிவித்திருந்தனர்.

தற்போது சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்குக் கிளர்ச்சியாளர்கள் தரப்பு சம்மதித்துள்ளது. மேற்குலக நாடுகள் கொடுத்த நெருக்குதல்களின் காரணமாகவே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மின் மோட்டர்கள், கால்நடைகள் கொழும்புத்துறையில் அடிக்கடி திருட்டு

கொழும்புத்துறை, ஜன.20

கொழும்புத்துறைப் பகுதியில் நீர் இறைக்கும் மின் மோட்டர்கள் மற்றும் கால்நடைகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஓரிரு நாள்களில் இரண்டு மின் மோட்டர்கள், இரு ஆடுகள் என்பன திருட்டுப் போயுள்ளன.

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொழும்புத்துறை சனசமூக நிலையம் என்பவற்றின் பாவனைக்காகப் பொருத்தப்பட்டிருந்த மோட்டர்கள் இரவு வேளைகளில் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

அதேவேளை வீட்டு வளவில் கட்டப்பட்டிருந்த ஆடுகள் இரவு 8 மணியளவில் காணாமற் போகும் அதிர்ச்சி சம்பவங்களும் இடம்பெறுகின்றன. திருடர்கள் சத்தம் சந்தடியின்றி ஆடுகளை அவிழ்த்து மோட்டார் சைக்கிளில் கடத்திச் செல்வதாகமக்கள்தெரிவிக்கின்றனர்.

துரையப்பா வித்தியாலயத்தில் மாணவர்களின் கல்விக்குப் பயன்படுத்தப்பட்டுவந்த கணினி அண்மையில்திருட்டுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவங்களை அடுத்து இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் தந்தையர்கள் இரவுக் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

(ஒ-135)

மூன்று நாள் செயலமர்வு

யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய ஆறு கோட்டங்களைச் சேர்ந்த கோட்டக் கல்விப் பணிப்பாளர் கள் முகாமைத்துவ உதவியா ளர்களுக்கும் எதிர்வரும் 22 ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் ஆசிரிய ஆளணி தொடர்பான செயலமர்வு நடைபெறவுள் ளது. இந்தச் செயலமர்வு வட் டுக் கோட்டை தொழில்நுட்பக் கல் லூரியில் நடைபெறும். (ந-35)

மாணவனை பாம்பு தீண்டியது

பற்றைக்குள் மறைந்திருந்த விஷப் பாம்பு பாடசாலை மாண வனைக் கடித்தது. இந்தச் சம் பவம் சனிக்கிழமை இயக்கச்சி சங் கத்தால் வயலில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த விக் னேஸ்வரன் அறிவுக் குமார் (வயது-10) என்னும் மாண வனே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவராவார். (ந-9)

உருளைக்கிழங்கு உற்பத்தியாளருக்கான கலந்துரையாடல்

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்குமான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு குப்பிளான் விவசாய சம்மேளனக் கட்டடத்தில் குப்பிளான் விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் அறுவடைக்குத் தயாராகி உள்ள நிலையில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து உருளைக்கிழங்கு செய்கையாளர்களையும் கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-86)

கும்பாபிஷேகம்

புங்குடுதீவு மேற்கு சிறுப்பிட்டி நாச்சிமார் என அழைக்கப்படும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு ஸ்தூபி அபிஷேகமும் தொடர்ந்து மகாகும்பாபிஷேகமும் இடம்பெறும்.

முன்னதாக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். (ந)

மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ, 1991இல் பிறந்த, செவ்வாய் குற்றமற்ற, கி-பா-21, திருவாதிரை நட்சத்திரம், நிறமான அழகான வங்கி உத்தியோக மணமகளுக்குப் பொருத்தமுடைய மணமகன் தேவை.
தொ.பே: 071 848 6220 (43728)(7.6.3)

விற்பனைக்கு

அசோக் லேலண்ட் கொமட் 1242 மரப் பொடியுடனான லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 360 5041 (சி/7026)(4.6.3)

திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் முன்னறிவித்தல்

இத் திருப்பணிச்சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் விஜய வருடம் மாசி மாதம் 25 ஆம் நாள் (09.03.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பமாகி பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதி 75 ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் முன் மொழிய விரும்பும் தீர்மானங்கள் அல்லது எழுப்ப விரும்பும் கேள்விகளை அனுப்ப விரும்புவோர் இந்த அறிவித்தலில் இருந்து பத்து (10) நாள்களுக்குள் எங்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

சரஸ்வதி மண்டபம்,
75, லோரன்ஸ் றோட்,
கொழும்பு 4.

அ.திருநாவுக்கரசு,
செ.இராகவன்
இணைப்பொதுச்செயலாளர்கள்

(சி/11089)(3.6.4) விஜய வருடம் தை 7 ஆம் நாள் (20.01.2014)

சிவமயம்

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம் நடத்தும் மாபெரும் ஓம் நமசிவாய பிரார்த்தனை வாகன ஊர்த்திப் பவனி

பரிபாலகர் அதிவந்தனிய ஸ்ரீமத் மகேஸ்வர சிவாச்சாரியாரின் ஆசிகளுடன்

காலம்: 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு

இடம் : வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து காங்கேசன்துறை வீதி வழியாக கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் சென்றடைதல்

தலைவர் - சிவஸ்ரீ. சபா.வாகதேவக்குருக்கள் (ஒன்றியத் தலைவர்)

காங்கேசன்துறை வீதி ஊடாக பவனி வரும் பொழுது அவ்வழியில் இருக்கும் மக்கள் தங்கள் **இல்லங்களின் வாயில்களிலும், வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் ஆலயத்தினர் தங்கள் வாயில்களில் மாவிலை தோரணம் அலங்காரம் செய்து பூரணகும்பம் வைத்து வரவேற்றுப் பிரார்த்திக்கவும்.**

மேற்படி அனைவரிடமும் தரப்பட்ட **லிங்க மந்திர பத்திரத்தினையும்** சிவலிங்க ஊர்திவரும்பொழுது சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரார்த்தனை ஊர்திப் பவனியில் அனைத்து சைவமக்களும் எமது கலாசார உடைகள் அணிந்து கலந்துகொண்டு பிரார்த்தனையில் ஈடுபடுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.

(சி.10075) (45.6.3)

புதுக்கடை திறப்புவிழா

DAMRO

நிகழும் மங்கலகரமான விஜயவருடம் தை மாதம் 07ஆம் நாள் (20.01.2014) திங்கட்கிழமை மு.ப 10 மணி தொடக்கம் 11 மணிவரையுள்ள சுபவேளையில்

ஜெகாவின் புதிய காட்சியறை திறப்புவிழா (20.01.2014)

இல-16, ஸ்ரேசன் லேன், சாவகச்சேரி. (பழைய கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்)

ஜெகா எலக்ரிக்கல்ஸ்
JEHA ELECTRICALS

இல.11, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.
No.11, Thanankilappu Road, Chavakachcheri.

தென்மராட்சி மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



CAUSEWAY PAINTS

வீட்டுக்குத் தேவையான பியஸ்ரா, தம்ரோ தளபாட வகைகள், மின்சார உபகரணங்கள், பெயின்ற் வகைகள், செரமிக் வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

021 227 0160, 021 227 0819, 077 303 9444.

ச. இளங்கோ - உரிமையாளர்.

(43772)(10.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உரிய நேரத்தில் பஸ் சேவை இடம்பெற வேண்டும்

வவுனியா பெற்றோர் கோரிக்கை

வவுனியா.ஜன.20

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பஸ்கள் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபட வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சில வழித் தடங்களில் பஸ்கள் உரிய நேரத்தில் சேவையில் ஈடுபடாததால் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆண்டின் முதலாவது தவணையில் இருந்து வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இதனால் தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களும், ஆசிரியர்களும் காலை 6.30 மணி முதல் பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்றனர். ஆனால் குறித்த நேரத்துக்குப் பஸ்கள் வராமையால் நீண்ட நேரம் காத்திருக்கும் இவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதே வேளை காலம் தாழ்த்திப் பாடசாலைக்குச் செல்லும் போது பாடசாலை நிர்வாகத்தினரால் தண்டனைக்குள்ளாவதால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்படுவதுடன் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன. இதே வேளை சில பஸ்கள் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவதால் பயணிகளை ஏற்றுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

இதனால் வவுனியா, வேப்பங்குளம், நெளுக்குளம், கணேசபுரம் உட்பட பல்வேறு பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இனியாவது பஸ்கள் உரியநேரத்தில்சேவையைவழங்கவேண்டுமென பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

மோசமான நிலையில் சங்குப்பிட்டி - கேரதீவு வீதி

அக்கராயன், ஜன.20

சங்குப்பிட்டி - கேரதீவு பாலவீதி மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமான நிலையில் காணப்படுகின்றது.

பூநகரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் இந்த வீதியின் பகுதிகள் சேதமடைந்து இடிபாடுகளுடன் காணப்படுகின்றன.

இந்த வீதியில் பெரிய குழிகள் காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்படுவதுடன் வாகனங்கள் கடலுக்குள் வீழ்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஏ-32 வீதியில் புனரமைப்புப் பணிகள் பெருமளவு நிறை வேற்றப்பட்டதாக அறிவித்துள்ள நிலையில் மண்டைக் கல்பாலம் உட்பட பெரும்பகுதி வீதி இன்னமும் புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளது. தற்போது பூகரிக்கும் பல்லவராயன்கட்டுச் சந்திக்கும் இடையில் வீதிப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (க-18)

சோலை வரியை செலுத்துமாறு அறிவித்தல்

வவுனியா, ஜன.20

வவுனியா நகர சபை எல்லைக் குட்பட்ட பொதுமக்களைச் சோலை வரியைச் செலுத்து மாறு அறிவுறுத்தல்கள் வவுனியா நகர சபையினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டுக்கான சோலை வரியைச் செலுத்தக் கோரும் அறிவித்தல்களே வவுனியா நகர சபை எல்லைக்குட்பட்ட கிராமங்களிலும் ஒலிபெருக்கி மூலமாக விடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இந்த ஆண்டுக்கான சோலை வரியை இந்த மாதத்தினுள் செலுத்துபவர்களுக்கு 10 வீதக் கழிவு வழங்கப்பட வுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

தைப்பொங்கல் விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்டச் செயலகமும், வவுனியா குருமன்காடு ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி எஸ். மோகநாதன் தலைமையில் வவுனியா ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் எம்.கே. பந்துல ஹரிஸ்சந்திர கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு பிரதேச செயலர்கள் கலந்து கொள்வார்கள்.

ஆசியுரையை ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தானக் குருக்கள் வழங்கவுள்ளார். (க-402)

ரயில் நிலைய அதிபர்

வவுனியா ரயில் நிலையத்துக்கு புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்டம் நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றிய நா.தவானந்தன் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வவுனியா புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றிய த.செந்தில் நாதன் ஓய்வு பெற்றதையடுத்து இந்த மாதம் தொடக்கம் இவர் வவுனியா ரயில் நிலைய அதிபராகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது. (க-421)

மின்சாரம் வழங்கப்படாததால் கிராம மக்கள் விசனம்

வவுனியா, ஜன.20

வவுனியா மகிழங்குளம் கிராமத்துக்கு மின்சார இணைப்புக்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவது தொடர்பாக கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளம் சந்தியிலிருந்து மகிழங்குளம் நோக்கிச் செல்லும் வீதியில் மின்சார இணைப்புக்கள் பூர்த்தியடைந்த நிலையிலும் அந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படாததையிட்டு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் மகிழங்குளத்திலிருந்து குஞ்சுக்குளம் வரைக்குமான பகுதிக்கு மின் இணைப்புக் கம்பிகள்கூட இன்னமும்பொருத்தப்படவில்லை.

இந்தப் பகுதியில் சுமார் 550 குடும்பங்கள் உள்ளன. தாம் மீளக்குடியமர்த்தப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்ற போதிலும் தமக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படாதது ஏன் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதனைவிட இந்தப் பகுதியின் அயல் கிராமங்களான கிளவிகுளம், பாலமோட்டை, இலுப்பைக்குளம், ஊறணிக்குளம், நவ்வி, குஞ்சுக்குளம் போன்ற பகுதிகளில் வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இங்கும் மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

சுமார் 550 குடும்பங்கள் உள்ளன. தாம் மீளக்குடியமர்த்தப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்ற போதிலும் தமக்கு இன்னமும் மின்சாரம் இல்லை.

இந்தப் பகுதியில் உயர் மின் அழுத்தமுடைய கம்பிகள் பொருத்தப்பட்டு சுமார் ஒரு வருட காலம் ஆனபோதிலும் இன்னமும் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படாததையடுத்து அந்தப் பகுதியிலுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே விரைவில் தமக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-422)

வாய்க்கால் அமைத்தல்

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் புதுமுறிப்புக் குளத்திலிருந்து வயல்களுக்கு நீரைக் கொண்டு செல்லக் கூடிய சுமார் 220 மீற்றர் நீளமான சிமெந்திலான பிரதான வாய்க்காலை அமைத்து வருகின்றனர். (க-18)

கழிவுகள் சிந்தப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள்

வவுனியா மன்னார் வீதியில் அவலம்

வவுனியா, ஜன.20

குப்பைகளை ஏற்றிச் செல்லும் நகர சபை வாகனங்களில் இருந்து கழிவுகள் சிந்துவதால் சுகாதார ரீதியான பிரச்சினைகளைத் தாம் எதிர்கொள்வதாக வவுனியா மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவின் பல்வேறு இடங்களிலும் காணப்படும் கழிவுகள் நகர சபை வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு மன்னார் வீதியூடாக பம்மைமடுப் பகுதியில் ஓர் இடத்தில் போடப்படுகின்றன. இவ்வாறு கழிவுகள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படும்போது வீதிகளில் சிந்தப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரக் கேடுகளும் ஏற்படுகின்றன.

இதனால் மன்னார் வீதியின் அருகே உள்ள வீடுகளில் வசிப்பவர்களும், வீதியில் செல்லும் பயணிகளும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பாக நெளுக்குளம் சனசமூக நிலையத்தினரும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

மேலும் இதனை நிறுத்துவதற்கு ஆவன செய்யுமாறு பொது மக்களும் நகர சபையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

கழிவுகள் வாகனங்களில் ஏற்றிச் செல் லப்படும்போது வீதிகளில் சிந் தப்படுவதால் துர்நாற்றம் வீசு வதுடன் சுகாதாரக் கேடுகளும் ஏற்படுகின்றன.

சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம்

வவுனியா நெளுக்குளம் பகுதிக்கான சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் குழுவின் தலைவர் சு.அமிர்தலிங்கம் தலைமையில்நடைபெற்றது.

பாதீனியம், கசிப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டன. நெளுக்குளம் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள், போதைப் பொருள் மற்றும் கசிப்புப் பாவனை என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் பாதீனியம் செடிகளின் வளர்ச்சியும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. எதிர்காலத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களை மக்கள் நலன் கருதி சிறப்பான வகையில் செயற்படுவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. நெளுக்குளம் பொலிஸாரும் இதில் கலந்து கொண்டனர். (க-402)

அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக நடவடிக்கை

கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.20

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார் கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை.குகராசா.

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச சபைகளின் அனுமதி பெறாது கட்டடங்களை அமைக்கும் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்களில் வயல் நிலங்களில் கட்டடங்களை அமைத்தல், தென்னைச் செய்கையை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்குத் தடை விதிக்க வேண்டுமெனக் கூறப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கரைச்சிப் பிரதேச சபையின் கூட்டங்களிலும் அனுமதி பெறாத கட்டடங்கள் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.வை. குகராசாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கண்டாவளைப் பகுதியில் விவசாய நிலங்களில் பிரதேச சபையின் அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக அந்தப் பகுதியைச் சேர்ந்த கமக்கார அமைப்புக்கள் பிரதேச சபையிடம் மனுக்களைக் கையளித்துள்ளன. நாம் அந்தப் பகுதிக்குச் சென்று அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்களை அமைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டவர் மாட்டினார்

திருகோணமலை.ஜன.20

திருகோணமலை மாவட்டத்தில் கஞ்சா வியாபாரத்தில் முக்கிய முகவராக ஈடுபட்டு வந்த நபரொருவரை மொறவெவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் மாவட்டத்தின் பல இடங்களில் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் மோட்டார் சைக்கிளில் சுற்றுலா செல்வது போல கஞ்சா கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று அந்தப் பகுதி மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வேளை தமக்கு கஞ்சாவுடன் எதுவித தொடர்பும் இல்லை என்று கைது செய்யப்பட்ட நபர் எம்மிடம் தெரிவித்திருந்தார் என்று பொலிஸார் கூறினார்.

இதே வேளை குறித்த நபர் மகா திவுள்வெவ குளத்துக்கு அருகில் அரசுக்கு சொந்தமான காணியில் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் தனிமையாக வாழ்ந்து வருகின்றார். அப்பகுதியில் மறைவான இடங்களில் கஞ்சாச் செடிகளை நட்டு வந்துள்ளார் என்று பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து வீட்டுப் பகுதியை பரிசோதனை செய்த போது கஞ்சாச் செடிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் வேண்டுகோள்

அட்டப்பள்ளம் காளி கோயிலில் மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன்

அம்பாறை.ஜன.20

நாட்டில் போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் உருண்டோடி விட்டன. போர் காலத்திலும் முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி போரின் போதும் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு இந்த நாட்டிலுள்ள சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும்.

அவர்களை சமூக நீரோட்டத்தில் இணைந்து தமது குடும்பங்களுடன் வாழ அரசு வழி செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு. இராஜேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அட்டப்பள்ளம் காளி கோயிலின் புனரமைப்புப் பணிகளுக்காகத் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியில் ஐம்பதாயிரம் ரூபாவுக்கான காசோலையை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போருக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதாகவும் சமாதான சக வாழ்வை தோற்றுவித்துள்ளதாகவும் மார்தட்டிப் பேசும் அரசு போர் அற்ற தேசத்தில் அரசியல் கைதிகளை சிறையில் வைத்திருப்பது ஏன்? அப்படியாயின் உண்மையான ஜனநாயகம் மலர்ந்துள்ளதா? என்ற கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

இலங்கை ஒரு பல்லின நாடு. இந்த நாட்டில் வாழும் சகல இனத்தவர்களுக்கும் சகல சமயத்தவர்களுக்கும் சமத்துவமான உரிமையுண்டு என்பது எழுத்து வடிவில் மட்டுமே உள்ளது. ஆனால் செயல் வடிவில் இல்லை. இதுவே இனப்பிரச்சினைக்கான மூலகாரணமாகும். இன்று நாட்டிலுள்ள சிறுபாண்மை மக்களின் சமய வழிபாட்டிடங்கள் அழிக்கப்படுகின்றன. போர் அற்ற அன்றைய சூழலில் அதனை செய்பவர்கள் யார்? சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டுள்ளதாக பேசுபவர்கள் இத்தகைய தீய செயலில் ஈடுபடுபவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தாததன் மர்மம் என்ன என்று புரியவில்லை.- என்றார். (ச)

தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டம்

திருகோணமலை.ஜன.20

இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் திருகோணமலை நகர மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலமையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் செயற்குழுக்கூட்டத்தில் தற்போதைய சமகால அரசியல் நிலை பற்றியும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் எழுந்துள்ள நிலமைகள் குறித்தும் ஆராய்ந்து அதற்கான தீர்வுகள் பரிசீலிக்கப்படவுள்ளன.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடுமட்டக்களப்பில்நடைபெற்றது. இதற்குப் பின்னர் இந்த வருட தேசிய மாநாட்டை எங்கு, எப்போது நடத்துவது என்பது தொடர்பாகவும் எமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும், ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராய உள்ளோம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலர் சூ.கி.குலநாயகம் தெரிவித்தார். (ச)

அகற்றப்பட்டனர் மீன் வியாபாரிகள்

மட்டக்களப்பு.ஜன.20

மட்டக்களப்பில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த சட்டவிரோத மீன் வியாபாரிகள் மீது மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் தூய்மை வாரத்தை முன் னிட்டு பொதுச்சுகாதார உத்தியோகத்தர் தேவநேசன் தலைமையில் மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புதிய பாலத் தடியில் போக்குவரத்துக்கு இடையூறாக விருந்த சட்ட விரோத மீன் வியாபாரிகள் மீது மாநகர சபை மேற்கொண்டநடவடிக்கையால் மீன் வியாபாரிகள் உடன் அப்புறப்படுத்தப்பட்டனர். (ச-10)



41ஆவது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்த

நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலி

அமரர்

சந்தியாப்பிள்ளை மேரி செலஸ்ரீன்

எங்கள் அன்புத் தெய்வமே அப்பா...

ஈராண்டு சென்றாலும் நாளாக நாளாக
தீராது உங்கள் பிரிவின் வலி
கால்நூற்றாண்டு கடந்தாலும் உங்கள்
கருணை முகம் காணாது
அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும் தெய்வ சந்நிதியில்
ஆன்ம ஈடேற்றம் பெற உங்கள்
41ஆவது பிறந்த நன்னாளில்
இறையாசி வேண்டி அஞ்சலிக்கின்றோம்.

129, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், ஐயா, அம்மா,
சகோதரங்கள்

(43705)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டத்தில் ஜனாதிபதி

சீனாவின் புத்தாண்டுக் கொண்டாட்டம் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலங்கைக்கான சீனத் தூதர் வூ ஜியாங்ஹோ வரவேற்றார். (ச)

கைதிகளின் அறிக்கையை உடன் சமர்ப்பியுங்கள்

ஜனாதிபதி வேண்டுகோள்

மரண தண்டனை விதிக்கப் பட்ட 400 கைதிகளின் அறிக் கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கோரியுள்ளார்.

என்னென்ன குற்றங்களுக்காக அவர்க ளுக்கு மரணதண் டனை விதிக் கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் வகைப் படுத் துமாறும் ஜனா திபதி வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையை தயாரித்து பரிந்துரைகளை செய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக் கப்பட்டுள்ளது என்று நீதிய மைச்சின் செயலர் கமலினி டி சில்வா தெரிவித்தார். (ச)

கடற்படைத் தளபதியை சந்தித்தார் ஆஸி. பிரதிநிதி

ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட்டின் விசேட பிரதிநிதி யான மேஜர் ஜெனரல் ஜிம் மொலொன் இலங்கை கடற் படைத் தளபதி ஜயனாத் கொலம் பேகவை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடடிக்கைகளை தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என்றும் மேஜர் ஜெனரல் ஜிம் நன்றி தெரிவித்துள்ளார். (ச)

முஸ்லிம் மக்களுக்கு தொடர்ந்து அழுத்தம்

ஐ.நாவில் முறைப்பாடு செய்ய மு.கா. தீர்மானம்

கொழும்பு,ஜன.20

இலங்கையில் முஸ்லிம் மக் களுக்கு எதிராக பிரயோகிக் கப்பட்டு வரும் அழுத்தங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முறைப்பாடு செய்ய உள்ளது.

இது குறித்து மு.காவின் சர்வதேச முஸ்லிம் இளைஞர் சபையின் தலைவர் தெரி விக்கையில்;

முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் அரசோ, பொறுப்பு வாய்ந்த தரப்பினரோ எவ்வித நடவடிக்கையும்எடுக்கவில்லை

இது தொடர்பில் கடந்த வாரம் கொழும்பில் பேச்சு நடத்தப்பட் டுள்ளது.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் சபையில் முறைப்பாடு செய் யத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

அரசியல்வாதிகள் அல்லாத முஸ்லிம் சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், வைத்தியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர் கள் உள்ளிட்டவர்கள் சர்வ தேச சமூகத்திடம் முஸ்லிம் மக் களின் பிரச்சினைகளை எடுத் துச் செல்ல உத்தேசித்துள் ளனர்-எனவும் அவர் தெரிவித் துள்ளார். (ச)

> முஸ்லிம் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் அரசோ, பொறுப்பு வாய்ந்த தரப்பினரோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை

பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து ஐ.நாவில் முறையீடு

சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு,ஜன.20

பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப் பில் முறைப்பாடு செய்யப்படும் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டமொன்றை நடத்த விடாது பொலிஸார் தடை ஏற்படுத்தினர். இந்த நட வடிக்கையானது ஜனநாயக விரோதமானது என்று அவர் கூறினார்.

பலபிட்டிய பிரதேசத்தில் பொதுக் கூட்டத்தை நடத்த விடாது பொலிஸார் இடையூறு செய் தனர்.

இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்யப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சம்பவம் தொடர்பில் நாட் டின் சகல தூதரகங்களுக்கும் அறிவிக்கப்படும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார். (ச)

பால்மாக்களை பதுக்கி வைத்து விலை அதிகரிப்புக்கு அழுத்தம்

கூறுகிறது நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு,ஜன.20

இலங்கையில் பால்மா விலை அதிகரிப்பு தொடர்பான பேச்சு இன்னும் வெற்றியளிக்க வில்லை. கடந்த பல வாரங்க ளாகவே பால்மாவுக்கு உள் ளூர் சந்தையில் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது.

கடைகளிலும் பல்பொருள் அங் காடிகளிலும் பால்மா அடுக்கி வைக்கும் ராக்கைகள் வெறிச் சோடிக் கிடக்கின்றன. மக்களும்

> கடைகளில் பால்மா அடுக்கி வைக்கும் ராக்கைகள் வெறிச் சோடிக் கிடப்பதுடன் மக்கள் பால்மா தேடி கடைகடையாக அலைகின்றனர்.

பால்மா தேடி கடைகடையாகத் திரிகின்றனர்.

இவ்வாறு இலங்கை நுகர் வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பால்மா நிறுவனங்கள் தொடர்ந்தும் பெருமளவு தொகை பால்மா கையிருப்புகளை பதுக்கி வைத் திருந்து விலை அதிகரிப்புக்காக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதை நிறுத்த வேண்டும் என்று அதிகார சபை வேண்டு கோள் விடுத்துள்ளது.

அரசு கேட்டுக்கொண்டதற்கு அமைய பால்மா நிறுவனங்கள் தங்களின் கையிருப்புகள் தொடர் பான தரவுகளை இன்னும் முழுமையாக அளிக்கவில்லை என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் சூமி மார்றிக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பால்மா நிறுவனங்கள் மிகவும் சூட்சுமமான முறையில் தங்க ளின் வேலைகளை முன்னெ டுத்துச் செல்கின்றன. சந்தை யில் பால்மா தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் தங்கள் விலை அதிகரிப்புக்கு எங்களை நிர்ப்பந்தப்படுத்தும் வேலை யில் அந்த நிறுவனங்கள் இறங்கியுள்ளன.

பால்மா தட்டுப்பாட்டை ஏற்ப டுத்தி அரசை அசௌகரியத் துக்கு உள்ளாக்காமல், தங்க ளிடமுள்ள கையிருப்புகளை திறந்த சந்தையில் விநியோ கித்து எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எல்லா நிறுவ னங்களிடமும் கோரிக்கை விடுக்கிறோம்.

சர்வதேச சந்தையில் விலை உயரமுன்னமே கொள்வனவு செய்யப்பட்ட 20 பால்மா கொள் கலன்களை திறந்த சந்தைக்கு விநியோகிக்காமல் நிறுவனங் கள் பால்மா தட்டுப்பாட்டை ஏற் படுத்தியுள்ளதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

விலை அதிகரிப்பு தொடர்பான முடிவு எப்போது எடுக்கப்படும், எப்போது பால்மா தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்படும் என்பது போன்ற கேள்விகளுக்கு உட னடியான பதில் எம்மிடம் இல்லை - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

திருமதி மீனாம்பிகை (பூம்பதி) முருகேசு

காரைநகர், அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாம்பிகை முருகேசு 17.01.2014 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இலட்சுமணன்(வேலன்) -நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், முருகேசு (பாபு) வின் அன்பு மனைவியும், யோகதாஸன் (யோகா D.S.I), கமலதாஸன் (டோகா), குகதாஸன், றஜிந்தினி (லண்டன்), அருள் தாஸன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சசிகலா, சுசிலா, பகீந்திரன் (லண்டன்) ஆகி யோரின் அன்பு மாமியும், அபிஷா, அபிஷாந், நிசாந், கிஸாயினி, கிஸாந், றிஸாயினி ஆகி யோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் புஷ்பம், தெய் வேந்திரம், தியாகராஜா, அற்புதம், பூங்கிளி, காலஞ்சென்ற பூங்கலை மற்றும் தேவராசா, பூவதி, பூமணி(குட்டி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஐயாத்துரை, சரஸ்வதி, சிவக் கொழுந்து, உருக்குமணி, சதாசிவம், கந்தசாமி(சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
அல்லின் வீதி,
காரைநகர்.
077 401 7041, 077 880 3630,
077 436 5349.

(43771)(3.6.4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

இராணுவ ரீதியான நகர்வுகளே உயர்பாதுகாப்பு வலயங்கள்

படைச் செறிவும் உயர் பாதுகாப்பு வலயங்களும்தான் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்பது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் சித்தாந்தம். போர் முடிவுக்கு வந்தாலும் பிரிவினைவாதச் சிந்தனை முடிவுக்கு வரவில்லை என்பதால் படைச் செறிவு அவசியம் என்று வலியுறுத்தி வருகிறார் கோத்தபாய. அதேசமயம், யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்று எதுவுமில்லை. மக்களைப் பாதுகாப்பதற்கான இராணுவ வலயங்களே உள்ளன என்று புது விளக்கம் கொடுத்துள்ளார் யாழ்.மாவட்ட புதிய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.

சமீபத்தில் வடக்கில் தேவையற்றவை என்று கருதப்பட்ட சில மினி முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. சில தனியார் வீடுகளையும் இராணுவத்தினர் மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைத்துள்ளனர். மேலும் சில வீடுகளில் இருந்து வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் மக்கள் அவர்களது சொந்த மண்ணிலிருந்து ஏதிலிகளாக வெளியேறக் காரணமான உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்து இயங்கத்தான் போகின்றன. மக்களின் அவலம் தொடரத்தான் போகிறது.

உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவம் வெளியேறி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறும் காலம் தற்போதைக்கு சாத்தியப்படப் போவதில்லை. போர் முடிவடைந்தபோது இது குறித்து சாதகமாக எதிர்பார்க்கப் பட்டது. வடமாகாணசபைத் தேர்தலின் பின்பும் எதிர்பார்ப்பு இருந்தது. இன்று இந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் கானல்நீராகி விட்டன. தொடர்ச்சியான முகாம் வாழ்க்கையால் மக்கள் விரக்தியுடனும் சலிப்புத் தன்மையுடனும் உள்ளனர்.

வடக்கில் படையினரை நிறுத்துவதும் தளங்களைப் பேணுவதும் அரசின் தனியுரிமை. அதில் எந்த வெளிநாடும் தலையிட முடியாது என்கிறது அரசு. ஓர் இறைமையுள்ள நாட்டுக்கு இத்தகைய தனியுரிமை சுதந்திரம் உள்ளது என்பது உண்மையே. ஆனால் ஒரு நாட்டின் இறைமை, சுதந்திரம் என்பவை இன்னொரு நாட்டின் கதவுகளைத் தட்டாத வரைதான் நிலைத்திருக்கும் என்பதை உலக நடப்புகள் நிரூபிக்கின்றன. பிரச்சினைகளை அரசு உள்நாட்டுக்குள் தீர்த்துக் கொள்ளத் தவறும்போது பிரச்சினைகள் வெளிநாடுகளின் கதவுகளைத் தட்ட ஆரம்பிக்கும். இலங்கையின் பிரச்சினை சர்வதேசத்தின் கையில் சென்றதுக்கு உள்நாட்டில் தீர்வு காணத் தவறியதுதான் காரணம்.

உயர் பாதுகாப்பு வலய காணி சுவீகரிப்பு விவகாரத்தை உள்நாட்டுப் பாதுகாப்பு என்றும் அதில் யாரும் தலையிட முடியாதென்றும் அரசு நியாயப்படுத்தினாலும் இந்த விவகாரம் ஆயிரக்கணக்கான மக்களின் அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடையது என்பதால் இதனை தேசத்தின் கவனத்திலிருந்து முற்றிலும் மறைத்துவிட முடியாது.

முப்பது வருட போரின்போது பல்லாயிரக்கணக்கானோர் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். போர் முடிவடைந்த பின்பும் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இன்னும் ஆயிரக்கணக்கானோர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் மட்டும் படையினர் தமது படைத் தளங்களைக் கட்டியெழுப்புவதற்காக 6,381 ஏக்கர் காணியைச் சுவீகரித்துள்ளனர். இது சுமார் 25 சதுர கி.மீ. பரப்பளவுள்ள வளமுள்ள நிலப்பரப்பு. இந்த மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களில் பெரிய முகாம்களை நிறுவுவதும் பாதுகாப்பு வலயங்களை உருவாக்குவதும் வளங்களைக் கையகப்படுத்துவதும் தொடர்கின்றன. பாதுகாப்பு வலயங்களில் பெரிய இராணுவக் குடியிருப்புகள். மக்கள் எதிர்த்தால் அவர்களுக்கு மரண அச்சுறுத்தல். இந்த மக்களின் பாதுகாப்பையும் அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும் உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பு.

போருக்குப் பின்னர் அரசியல் ரீதியான நல்லிணக்க முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினை எழுந்திருக்க முடியாது. பிரிவினைப் போராட்டம் பற்றிய அச்சம் அரசுக்கு ஏற்பட்டிருக்காது. அரசியல் ரீதியாக நல்லிணக்கம் காண்பதில் அரசு தவறி விட்டது. இராணுவ ரீதியான அதன் நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதையே உயர் பாதுகாப்பு வலயங்கள் சுட்டி நிற்கின்றன. அரசியல் ரீதியான தனது நல்லிணக்கத்தை அரசு வெளிக்காட்ட வேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினர் வெளியேறி மக்களை மீளவும் குடியமர்த்துவதன் மூலம் இதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கமுடியும்.

ஜனாதிபதி - பிரதமர் முரண்பாடு முற்றுகிறது

கட்சி மேலிடம் கவலை

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து கோகுலன்

நுவரெலியாவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது பிரதம மந்திரி டி.எம்.ஜெயரட்ண ஜனாதிபதியால் மட்டம் தட்டப்பட்டமை பற்றி பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

நுவரெலியா ஜனாதிபதி மாளிகையில் நடந்த நிகழ்வின் போது பௌத்த குருமார்களால் போயா தினத்தையொட்டி நிகழ்த்தப்பட்ட "பன" வைபவத்தையடுத்து வரவேற்பறையில் இருந்த சோபாவில் ஜனாதிபதி அமர்ந்திருந்தார். அங்கு வேறு பலரும் கதிரைகளில் அமர்ந்திருந்தார்கள். ஜனாதிபதியின் சோபாவின் மறுகரை காலியாகவே காணப்பட்டது. அந்த சமயத்தில்தான் பிரதம மந்திரி டி.எம். ஜெயரட்ண உள்ளே நுழைந்தார். சற்று முன்னர் தான் தமது மகன் அனுருத்தவுடன் நிகழ்வுக்கு பிரதமர் வந்திருந்தார். பன ஓதும் நிகழ்ச்சியின் போது அவர்கள் இருக்கவில்லை. ஜயரட்ண நேராகச் சென்று ஜனாதிபதி அமர்ந்திருந்த சோபாவின் காலியாக இருந்த மறு கரையில் அமர்ந்து கொண்டார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை. ஜனாதிபதி எழுந்து விட்டார். மத்திய மாகாண முதல் அமைச்சர் சரத் ஏக்கநாயக்காவை அழைத்தார். தூரத்தில் இருந்த அவரைக் கூப்பிட்டுத் தாம் இருந்த இடத்தில் அமரச் செய்தார். அதன் பின் வேறு கதிரையொன்றைத் தருவித்து சற்று தூரத்தில் போடச் செய்து அதில் அமர்ந்து கொண்டார். இது வெளிப் படையாகவே அவர் தமது பிரதம மந்திரியை மட்டம் தட்டும் நிகழ்வாகவே அமைந்தது. அதிர்ந்துபோன பிரதமர் ஜெயரட்ண வெளிறிப்போன முகத்துடன் அசைவின்றி அங்கேயே அமர்ந்திருந்தார். வேறு ஓர் இடத்தில் அமர்ந்திருந்த அவருடைய மகன் அனுருத்த தனித்துப் போய் எவருடனும் பேசாமலே இருக்கக் காணப்பட்டார்.

இ.தொ.காங்கிரஸும் மட்டும் சலுகை

நுவரெலியா ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அதன் எதிர்தரப்பைச் சேர்ந்தவரான சதாசிவமும் மாத்திரம் கலந்து கொண்டிருந்தது அரசியல் வட்டாரங்களில் கேள்வியை எழுப்பியிருந்தது. சதாசிவமும் ஜனாதிபதியின் தற்செயலான அழைப்பின் பேரில் வந்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் வி.ராதாகிருஷ்ணன், மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் மற்றும் பி.ராஜதுரை ஆகியவர்கள் வருகை தந்திராத குறிப்பிடக் கூடிய முக்கிய பிரமுகர்களாவர்.

நுவரெலிய நிகழ்வில் ஜனாதிபதி ராஜபக்ஷ பிரதமர் ஜெயரட்ணவை ஏன் அவ்வாறு புறக்கணித்தார் என்பதற்கு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தொரு சம்பவம் பதில் தருவதாய் இருக்கிறது. ஏற்கெனவே வெளியாகியுள்ள சில விடயங்களின் பின்னணியில் ஜாதிக ஹெல உறுமயவின் நான்கு பேர்கொண்ட குழுவொன்று ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசியிருந்தது.

இந்தப் பேச்சுக்களில் எவ்வாறான ஊடகங்களுக்கு வெளியிடுவதில்லை யென்று இரு தரப்பினரும் உறுதி செய்து கொண்டனர்.

ஏற்கெனவே ஊடகங்களில் இலங்கையின் சரித்திரத்தில் மிகப்பெரிய அளவிலான 241 கிலோகிராம் எடையுள்ள உள்ளூர் சந்தை விலையில் ரூபா 2.4 பில்லியன் பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்து கைப்பற்றப்பட்டிருப்பது இடம்பெற்றிருந்தது. இது செயற்கையான கிறீஸில் மறைக்கப்பட்டிருந்துள்ளது. ஒருகொள்கலனில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தக் கொள்கலன் பிரதம மந்திரியின் சார்பில் அவருடைய ஒருங்கிணைப்பு செயலாளர் கீர்த்தி சிறி வீரசிங்காவினால் எழுதப்பட்ட ஒரு கடிதம் மூலமாக தீர்வைக் குறைப்புடன் விடுக்கப்படவிருந்தது. இந்த கொள்கலனை இறக்குமதி செய்தவரான ஜமால் காலிம் என்ற பாகிஸ்தானிய குடிமகன் ஒரு போதை வஸ்து கடத்தல்காரர். முன்னரும் இவ்வாறான பல குற்றங்கள் புரிந்து சிறையில் இருந்தவர். கடைசியாக 4 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்தவர் என்பது வெளிப்பட்டிருந்தது. மேலும் இந்த விடயத்தில் பிரதம மந்திரி விசாரணைக்குட்படுத்தப்படவில்லை என்பதும் வெளியாகியிருந்தது. மேலும் தமது தந்தையாரின் சார்பில் அந்தக் கடிதத்தை எழுதும்படி தாமே உத்தரவு பிறப்பித்தார் என்பதை பிரதமரின் மகன் அனுருத்த ஒப்புக் கொண்டிருக்கிறார். இதில் சம்பந்தப்பட்டவரான இன்னொரு பாகிஸ்தானிய பிரஜையான சர்தார் அஹமத்கான் என்பவரை விசாரிப் பதற்காக போதைப் பொருள் தொடர்பாக சுங்கப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று பாகிஸ்தான் போகவிருக்கிறது. ஹெரோயின் கடத்தலுடன் தொடர்புடைய அகமத் கானை இன்னொரு கடத்தல் தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்கள்.

ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் கலந்துகொண்ட குழுவில் அதன் தலைவர் வண.ஓமல்பே சோபித்த தேரர், அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மேற்கு மாகாண சபை உறுப்பினர் உதயா கமன்பில மற்றும் அந்தக் கட்சியின் பேச்சாளர் நிசந்த வர்ணசிங்க ஆகியவர்கள் இருந்தார்கள்.

இவர்களுடனான சந்திப்பின் போது பிரதமரும் பிரசன்னமாக வேண்டும் என்று ஜனாதிபதி பணித்திருந்தார். அதன்படி பிரதமர் ஜெயரட்ணவும் வந்திருந்தார்.

பிரதம மந்திரியின் நடத்தையினை ஹெல உறுமய குழுவினர் கடுமையாகக் கண்டித்ததுடன் இந்த மாதிரி கூத்து நிலையில் அரசு தொடர்ந்து முன்னேற முடியாது என்றும் அவர்கள் எச்சரித்தனர்.

கம்பஹாவில் நடந்த கூட்ட மொன்றில் பிரதமர் ஜெயரட்ண வண.ஓமல்பே சோபித்த தேரர் குறித்து அவதூறான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். மஞ்சள் ஆடை அணிபவர்கள் பற்றி பிரதமர் அவதூறாக பேசினார் என்பதுடன் அவர் வண. ஓமல்பே சோபித்த தேரரையேஅவ்வாறுதூற்றியிருந்தார்என்றும் அவர்கள் அடித்துக் கூறினார்கள்.

பிரதமர் மன்னிப்பு கோர வேண்டும் என்று கூறி 75 பேருக்கு அதிகமான புத்த குருமார்கள் பெரும்பாலும் சிகல உறுமயவைச் சேர்ந்தவர்கள் பிரதம மந்திரியின் அலுவலகத்தின் முன் முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள். பிரதமரின் அலுவலர் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு கடிதங்களை அவர்களிடம் வழங்கினார். வணக்கத்துக்குரிய குருமார்கள் தாங்கள் எதுவும் அவமரியாதைக்குட்படுத்தப்பட்டதாக கருதுவார்களானால் அதற்காக பிரதமர் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்வதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மன்னிப்பு கேட்க மறுப்பு

ஜாதிக ஹெல உறுமயவின் குறிப்பாக வண.ஓமல்பே சோபித தேரரின் எதிர்ப்புகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி பிரதமருக்கு ஆலோசனை கூறியதுடன் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுமாறு பணித்தார். தமக்கு முன்னாலேயே அவ்வாறு செய்யுமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இருந்த போதிலும் பிரதமர் ஜெயரட்ண பிடிவாதமாக இருந்ததுடன் அவ்வாறு செய்யவும் மறுத்துவிட்டார். அதற்குப்பின் மௌனமாகவே இருந்து வந்தார். ஜனாதிபதியின் இந்த கோரிக்கை மறுக்கப்பட்டமை ஒரு குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்தாலும், அரசின் உயர்மட்டங்களில் ஆழமான கவலைகளைத் தோற்றுவித்துள்ளது. பிரதமர் தமது சொந்த கோதாவில் இவ்வாறு நடந்து கொள்கின்றாரா அல்லது ஆளும் கட்சியிலிருக்கும் ஒரு சிலரின் ஆலோசனைப்படி செயற்படுகின்றாரா என்ற வகையில் இப்போது கேள்வி எழுப்பப் படுகின்றது.

இப்போதைக்கு ஜனாதிபதி பிரதமர் தொடர்பாக அவசரப்பட்டு நடவடிக்கை எதனையும் எடுக்கமாட்டார் என்று அரசின் உயர்மட்ட தரப்பு ஒன்று கருத்து வெளியிட்டிருந்தது. இதற்கு முக்கிய காரணம் தெற்கு மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற விருப்பதே. இந்தத் தேர்தல்களுக்கான வேட்புமனுத் தாக்கல் ஜனவரி 30 ஆம் திகதி தொடங்கி பெப்ரவரி 6 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது. எதுவானாலும் தமது பணிப்புரையொன்று பிரதம மந்திரியினால் செயற்படுத்தப்படவில்லையென்பதை ஜனாதிபதி முழுமையாக மனதில் வைத்துக் கொண்டே உள்ளார் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பிரதமர் ஜெயரட்ண நெடுங்காலமாகவே ஒருவித எதிர்ப்போக்கினைக் கடைப்பிடித்து வந்துள்ளார். அது ஜனாதிபதியின் பணிப்புரையை ஏற்று பௌத்த குருமாரிடம் மன்னிப்புக்கோரமறுத்த போதுதான் வெளிப்படையாகியுள்ளது. ஹெல உறுமயவுக்கு எழுதிய கடிதத்திலும் கூட அவர் கவலைதான் தெரிவித்திருந்தார். மன்னிப்புக் கோரவில்லை.

ஜனாதிபதி கொழும்புக்கு வரும் வழியில் கேகாலைக்கு அருகில் மாணியம்கம ரஜமகா விகாரையைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

ஓர் ஒழுங்கான சமூகத்தை உருவாக்குவது அரசின் கடமை. எம்மால் முடிந்தையெல்லாம் நாம் செய்து வருகிறோம். எவரும் ஏதாகிலும் தவறு செய்தால் அவர் என்னதான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று ஜனாதிபதி அப்போது கூறினார். இதுவும் பிரதமர் ஜெயரட்ணவுக்கு எதிரான குறிப்பாக இருக்கலாம் என்று சில வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

> வேட்புமனுத் தாக்கல் ஜனவரி 30 ஆம் திகதி தொடங்கி பெப்ரவரி 6 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது. எதுவானாலும் தமது பணிப்புரையொன்று பிரதம மந்திரியினால் செயற்படுத்தப்படவில்லையென்பதை ஜனாதிபதி முழுமையாக மனதில் வைத்துக் கொண்டே உள்ளார் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆங்கிலக் கல்வியை அடிப்படையில் புகட்ட வேண்டும்

க.கனகராஜா

இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பார்கள். எந்தவொரு விடயத்தையும் அடிப்படையில் இருந்து செய்தால் அதனை இலகுவாகக் கற்கமுடியும்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் உயர்ந்த சாதனைகளை எட்டவில்லை. எனவே அடுத்த வருடங்களில் உயர்தர வகுப்பினருக்கு மேலதிக வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் பலரும் நினைக்கின்றார்கள். ஆட்சியாளர்கள் கூட தாம் ஆட்சி செய்த காலத்தில் வளர்ச்சி வீதம் காட்டி இருக்கின்றோம் என்பதில்தான் கவனம் செலுத்துகின்றார்களே தவிர எதிர்கால தூர நோக்கில் சிந்தித்து இலங்கையின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திக்கத் தவறுகின்றனர்.

ஒரு விளையாட்டு அணியானது தேசிய மட்டத்தில் சாதிக்க வேண்டுமாயின் அவர்கள் 11 ஆவது வயதில் இருந்து பயிற்றுவிக்கப்பட்டாலே அந்த அணி 19 வயதுக்கான போட்டியில் திறமையாகச் செயற்பட்டு வெற்றியை தமதாக்கிக் கொள்ள முடியும். அதேபோல்தான் அழகான உயர்ந்த வீடொன்றைக் கட்டவேண்டுமாயின் அதற்கான அத்திபாரத்தைச் சரியான முறையில் அமைக்க வேண்டும். அதேபோல் தான் மாணவர்களின் ஆரம்பக் கல்வி சரியாக அமைக்கப்பட்டால் அவர்களின் உயர் கல்வியும் இடையூறின்றித் தொடரும்.



வடமாகாணத்தில் பல மாணவர்கள் தமது தாய் மொழியாகிய தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ள போதும் சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழியில் தேர்ச்சியின் மையால் அவர்களின் உயர் கல்விக்கு அது பாதகத்தையே தருகின்றது. இதற்குக் காரணம் ஆரம்ப நிலைக் கல்வியில் ஆங்கில மொழியானது பூரணப்படுத்தப்படாமையே ஆகும்.

வடமாகாணத்தில் 957 பாடசாலைகள் உள்ளதாகவும், இதில் ஆங்கிலப் பாட ஆசிரியர்களாக சுமார் 650 ஆசிரியர்கள் உள்ளதாகவும் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுமார் 300 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் ஆங்கிலப் பாட ஆசிரியர்களின்றியே இயங்கி வருகின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட நகரப் புறப் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவானது இலகுவில் கிடைக்கின்றது எனக் கூறலாம். ஏனெனில் பெற்றோர்கள் பலர் குழந்தைகளை முன்பள்ளியில் சேர்க்கும் போதே தனியார் கல்வி நிலையங்களில் பிள்ளைகளைச் சேர்த்து ஆங்கில அறிவையும் வளர்க்கின்றன.

ஆனால் பின்தங்கிய கஷ்டப் பிரதேச மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியானது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு போன்ற கல்வி வலயங்களில் தரம் 1 முதல் 5 வரை இயங்கும் ஆரம்பப் பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆங்கிலப் பாட ஆசிரியர் பற்றாக் குறையாகவே இருக்கின்றார்கள்.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் பலருக்கு கருத்தரங்குகளும், செயல மர்வுகளும் ஆங்கில பாடம் சம்பந்தமாக நடத்தப்பட்டபோதும் அந்த ஆசிரியர்கள் ஆங்கிலப் பாடத்தை கற்பிப்பதற்குப் போதுமான புலமை உடையவர்களா என பரீட்சைகள் வைத்துப் பார்க்க கல்வி அமைச்சு தவறுகின்றது.

மேற்குலக நாடுகளில் ஆரம்பக் கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். பட்டதாரி ஆசிரியர்களை ஆரம்பப் பிரிவு கற்பிப்பதற்கே நியமனம் வழங்குகின்றார்கள். ஏனென்றால் அடித்தளம் சரியாக இடப்பட வேண்டும் என்பதால். ஆனால் வடமாகாணத்தில் கஷ்டப் பிரதேச ஆரம்பக் கல்வி மாணவர்கள் பலர் இடைநிலைக் கல்விக்கு வந்தே தமது ஆங்கில அறிவைப் பெறுகின்றனர்.

இதனால் வசதியான மாவட்ட மாணவர்களுடன் போட்டியிடுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மொழி என்பது ஒரு காலத்தில் மக்கள் தமது கருத்தைப் பிறருக்கு கூறுவதற்காக பயன்படுத்தக் கூடிய ஒலிக் கூட்டமாகவும் காணப்பட்டது. இது கலை, பண்பாடு போன்றவற்றின் வளர்ச்சியின் ஊன்று கோலாகவும் அமைந்தது. மொழி என்பதை ஒரு கருவி என்று கருதாது புரிந்துணர்வு திறன்களோடு இயற்கையாக இணைந்து பிரிக்க முடியாததாகவும் கருத வேண்டும். ஒரு மனிதனின் அறிவானது வளர்ச்சியடைய கூடவே மொழியும் வளர்ச்சி அடைந்து கொண்டே செல்கின்றது.

மொழி என்பதை ஒட்டு மொத்தமாக நோக்கினால் சிறப்பான நிர்வாக கட்டமைப்பைக் கொண்ட ஒரு குறியீட்டு அமைப்பாகும். மொழியும், அறிவும் குழந்தையின் மனவெழுச்சியில் பங்களிப்புச் செலுத்துகின்றன. எனவே குழந்தை தனது தாய் மொழியை சரிவரக் கற்றுக் கொண்டாலும் அதன் உயர் கல்விக்கு சர்வதேச மொழியாகிய ஆங்கிலமொழி அறிவும் கட்டாய தேவையாகவுள்ளது. இது ஆரம்பக் கல்வியில் குழந்தைக்கு கிடைக்கப் பெற்றால் அந்தக் குழந்தை பூரண ஆளுமை மிக்கவனாக மிளிர்வான் என்பதில் ஐயமில்லை.

வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் கூட அண்மையில் உரையாற்றும் போது ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

எனவே வடமாகாணத்தின் கல்வியில் மாற்றம் வர வேண்டுமானால் வட மாகாணத்தில் பதவி ஏற்கும் ஒவ்வொரு கல்வி அமைச்சர்களும் ஆரம்பக் கல்வியில் ஆங்கில பாடத்தை முன்னேற்றுவதற்கான பயிரை இட்டால் 13 வருடங்களின் பின்னர் நல்லதொரு அறுவடையைச் செய்து கல்வியில் உயர்ச்சியைக் காண முடியும்.

வடமாகாணத்தில் 957 பாடசாலைகள் உள்ளதாகவும், இதில் ஆங்கில பாட ஆசிரியர்களாக சுமார் 650 ஆசிரியர்கள் உள்ளதாகவும் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சுமார் 300 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் ஆங்கிலப் பாட ஆசிரியர்களின்றியே இயங்கி வருகின்றன. யாழ்.மாவட்டம், வவுனியா மாவட்ட நகரப் புறப் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில அறிவானது இலகுவில் கிடைக்கின்றது எனக் கூறலாம். ஏனெனில் பெற்றோர்கள் பலர் குழந்தைகள் முன்பள்ளியில் சேர்க்கும்போதே தனியார் கல்வி நிலையங்களில் சேர்த்து பிள்ளைகளின் ஆங்கில அறிவையும் வளர்க்கின்றனர்.

லயன்
அம்பலவாணர் துரைசிங்கம்

திட்டமிட்டுச் செயற்பட்டால் மனிதவளத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்

சம்பந்தப்பட்டவர்கள் கவனத்துக்கு

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கில மொழி கற்பிப்பதற்கான மனித வளத் தேவை என்பது அனைவருக்கும் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று. ஒன்றுமில்லாமல் இருப்பதை விடவும், சிறிதளவாவது இருப்பின் நன்மையடைய முடியும் என்ற பழமொழிக்கிணங்க, புத்திசாதுர்யமாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதன் மூலம் இயன்றளவு நன்மையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது சமூகத்தில் துடிப்பான, திறமையுள்ள, ஆற்றலுள்ள, புத்திக்கூர்மையான, எல்லாவற்றுக்கும் மேலாக ஆர்வமுள்ள பல இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழக / ஆசிரியர் கல்லூரி அனுமதி பெறமுடியாமல் உள்ளனர் என்பது கண்கூடு.

எனவே அவர்களில், பொருத்தமான விசேட பரீட்சையினை நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு குறுகிய கால முழுமையான பயிற்சியளித்த பின் உரிய தெரிவுப் பரீட்சை யில் சித்தி எய்தும் பட்சத்தில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் சேவையில் அமர்த்த முயற்சிக்கலாம். இதன் மூலம் இரண்டு வகையான நன்மைகள் கிடைக்கும்.

1) எல்லோருக்கும் தெரிந்த காரணங்களுக்காக மாணவர்கள் சிறுவயது தொடக்கமே ஆங்கில மொழியைக் கற்பது அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதுடன் அவர்களிடம் ஆர்வத்தினையும் ஏற்படுத்தமுடியும்.

2) இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கவும் முடியும்.

இந்த விடயத்தில் எழக்கூடிய பிரச்சினை எவ்வாறு தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்வதென்பதாகும். ஒரு பாடசாலையின் இரு கண்களெனக் கருதப்படுகின்ற பழைய மாணவர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் மனது வைத்துச் செயற்பட்டால் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வது சுலபமாக அமைந்துவிடும். அத்துடன் புலம் பெயர்ந்து வாழ்கின்றவர்களின் உதவியினையும் கோரலாம்.

மேற்கூறிய முன்மொழிவுகளின் பொருட்டு குறிப்பிட்ட சங்க உறுப்பினர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் அறிவூட்டல் நிச்சயமாகப் பயனளிக்கும். இந்த விடயத்தில் அடியேனும் எதனையும் எதிர் பார்க்காது இயன்றளவு ஒத்துழைப்பு வழங்க முடியுமென நம்புகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் எமது சமூகத்தில் உள்ள ஆங்கில மொழி சார்ந்தோர்களின் ஆக்கபூர்வமான, கருத்துக்களையும் உள்வாங்கி, முறையான திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மூலம் குறிக் கோளை அடைய முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

நாளை

தை-08 ஞாயிற்றுக்கிழமை | 21.01.2014

திதி: பஞ்சமி மா.06.36 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.11.42 வரை
சுபநேரம்: 11.05-12.35 வரை
இராகுகாலம்:03.35-05.05 வரை

மேடம்: தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

இடபம்: மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

மிதுனம்: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

கடகம்: நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து

சிங்கம்: தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். அதை பெரிது படுத்த வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

கன்னி: தேவையற்ற அலைச்சலுக்கு ஆள்படுவீர்கள். பணப்பற்றாக்குறை ஏற்படும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடி வந்து நீங்கும்.

துலாம்: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

விருச்சிகம்: துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் குறையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

தனுசு: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

மகரம்: சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் வழங்க வேண்டாம். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் அளவாகப் பழகுங்கள்.

கும்பம்: பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

மீனம்: ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும். விருந்தினர்களின் வருகையுண்டு.

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...

பரிணாமம்

ஆகாசமும் பிராணனும் தூலமாகத் தோற்றம் பெற்று மீண்டும் சூட்சுமமாகிப் பழைய நிலையை அடைவதைப் பற்றி இந்தியர்களின் கருத்தும் இந்தக் கால விஞ்ஞானக் கருத்தும் பெரு மளவுக்கு ஒத்திருக்கின்றன. விஞ்ஞானிகளும் யோகிகளும் பரிணாமத்தை உண்மை என் கிறார்கள். ஆனாலும் அதைப் பற்றி யோகிகள் சொல்லும் விளக்கமே சிறந்தது என்று எனக்குத் தோன்றுகின்றது. "ஓர் உயிரினம் இன்னோர் உயிரினமாக மாறுவது இயற்கையின் உள் நிறைவு அல்லது உள்மாற்றம்." உயிரினம் தாழ்ந்த நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிலைக்கு மாறிக்கொண்டே வருகிறது; இந்த ஏணியின் மிக உயர்ந்த படிதான் மனிதன்.

இதுவே அடிப்படையான கருத்து. இந்த இயற்கை உள் நிறைவைப் பதஞ்சலி முனிவர், குடியானவர்கள் வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்கு ஒப்பிடுகிறார். நமது கல்வியும் முன்னேற்றமும் பரிணாமத் தடைகளை விலக்கவே பயன்படுகின்றன. தடை விலகியவுடன் உள்ளே உள்ள தெய்வத் தன்மை தானே மலர்கிறது. இதனால் வாழ்க்கைப் போராட்டத்துக்கே இடமில்லாமல் போய்விடுகிறது. வாழ்க்கையின் துன்ப அனுபவங்கள் பரிணாம வழியை மறைக்கின்றன. இவற்றை முற்றிலும் மாற்றிவிட முடியும். பரிணாமத்துக்கு இவை தேவையில்லை. இவை இல்லாவிட்டாலும் நாம் முன்னேற முடியும். தங்களை வெளிப்படுத்திக் கொள்வது பொருள்களின் இயற்கையே ஆகும். பரிணாமம் உள்ளிருந்து தோன்றுவது; வெளியேயிருந்து அல்ல. ஒவ்வோர் ஆன்மாவும் பற்பல பிறவிகளில் கிடைத்த வாசனைகளின் (அனுபவங்களின்) மொத்தமே. இந்த அனுபவங்களுள் எவை ஏற்ற சூழ் நிலையைக் காண்கின்றனவோ, அவை தாமே வெளிப்படுகின்றன.

மறுடைப்பு நோயாளிகளின் குருதியில் வித்தியாசமான செல்கள்

மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிகளின் இரத்தத்தில் வித்தியாசமான செல்கள் அதாவது கலங்கள் மிதப்பதைத் தாம் கண்டு பிடித்துள்ளதாக அமெரிக்க ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

111 பேரிடம் நடத்தப்பட்ட சோதனைகளை மையமாகக் கொண்ட இந்த ஆய்வு அறிக்கை உயிரியல் பௌதீகம் குறித்த சஞ்சிகை ஒன்றில் வெளியாகியிருந்தது.

இது மாரடைப்பு நோயாளிகளுக்கும் நோயற்றவர்களுக்கும் இடையிலான வித்யா சத்தை காட்டக்கூடிய தாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒருவரது இரத்தத்தில் இந்த பிரத்தியேக செல்கள் இருக்கின்றனவா என்பதை அறியும் இந்த பரிசோதனையை வைத்து, ஒருவருக்கு மாரடைப்பு வரக்கூடுமா என்பதை முன்கூட்டியே அறிய முடியுமா என்றும் அவர்கள் தற்போது ஆராய்கிறார்கள்.

கலிபோர்னியாவின் ஸ்கிரிப்ஸ் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த இந்த ஆய்வாளர்கள் குழு, நோயாளிகளின் குருதிச் சுற்றோட்டத்தில் எண்டோதெலியல் கலங்கள் இருக்கிறதா என்பதை ஆராய்ந்தது.

மாரடைப்பு எப்படி உருவாகின்றது என்று பார்த்தால், குருதிக் குழாய்களில் உருவாகும் கொழுப்புப் படிமங்கள் வெடித்து இரத்த ஓட்டத்தில் கலக்கின்றன. அவை இதயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் இரத்த ஓட்டத்தை தடுத்து மாரடைப்பை உருவாக்குகின்றன.

இந்தச் செயற்பாட்டின் போது எண்டோதெலியல் செல்களும் இரத்தத்தில் வெளியிடப்படுகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

மாரடைப்பு வந்த பின்னர் 79 நோயாளிகளிடம் செய்யப்பட்ட சோதனைகள், நோயற்ற ஆரோக்கியமாக உள்ள 25 பேர் மற்றும் இரத்தக்குழாய் நோய்களுக்கு சிகிச்சை



பெறும் 7 பேருடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.

மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தத்தில் இந்த எண்டோதெலியல் செல்கள் காணப்படுகின்றன என்றும், அது ஆரோக்கியமானவர்களிடம் இல்லை என்றும் கூறுவதற்கான ஆதாரத்தை கண்டுபிடிக்கவே இந்த ஆய்வு நடத்தப் பட்டதாகவும் அந்த இலக்கை தாம் எட்டிவிட்டதாகவும் இந்த ஆய்வுக்குழுவைச் சேர்ந்த பேராசிரியர் பீட்டர் குன் தெரிவித்துள்ளார்.

மாரடைப்பு நோயின் ஆரம்ப கட்டத்தில் இருப்பவர்களை கண்டு பிடிக்கவும் தமது ஆய்வு உதவும் என்றும் அவர் கூறுகிறார்.

சுடோக்கு

எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

		4	8		9	6	3	
				5	3	2		4
			2		6		8	
	1	5				9	7	6
2								8
8	7	6				5	4	
	5		6		4			
6		1	3	7				
	9	2	1		5	7		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய சுடோக்கின் விடை

4	7	5	2	6	1	9	8	3
8	6	1	9	7	3	2	5	4
9	3	2	4	8	5	1	7	6
3	4	7	1	2	9	8	6	5
1	2	6	7	5	8	4	3	9
5	9	8	3	4	6	7	2	1
7	5	4	6	1	2	3	9	8
2	8	3	5	9	4	6	1	7
6	1	9	8	3	7	5	4	2

ஆண் நண்பர்களிடம் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக எல்லாவற்றுக்கும் கைகொடுப்பது, தொட்டுப் பேசுவது கூடாது. இது அவர்களுக்கு உங்கள் மேல் வேறு எண்ணம் வரக் காரணமாக அமையும்.

அலுவலகம் செல்லும் பெண்ணா?

எச்சரிக்கை அவசியம்

அனுஜன்

இன்றைய சூழலில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலை செய்வது என்பது தவிர்க்க இயலாதது. இப்படிப்பட்ட சூழலில் சக ஆண்களிடம் இருந்து பிரச்சினைகள் வராமல் இருக்கவேண்டுமெனில் அவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? பழக்கத்தின் எல்லை எதுவரை இருக்கலாம்?என்பது பற்றிச் சில பயனுள்ள ஆலோசனைகள்!

நம் உடைகள் எதிரிலிருப்பவரின் உணர்வுகளைத் தூண்டாமல் இருப்பது நல்லது. அதனால்தான் ஆள் பாதி ஆடைபாதி என்றார்கள்.நாகரிகமாக உடுத்தினாலும்கூட, நேர்த்தியாக உடுத்துங்கள்.

முக்கியமாக ஒன்றாக வேலை செய்யும் ஆண்களிடம் நம்முடைய சொந்த விடயங்களைப் பங்கு போடாதீர்கள். அங்கேதான் ஆரம்பிக்கிறது பல பிரச்சினைகள். சொந்தக் குடும்ப விடயங்களுக்கு உங்களுடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் ஆலோசனை கேட்காதீர்கள். இதனால் அவர்கள் உங்கள் மேல் அதிக அக்கறை எடுக்க முன் வருவார்கள்!

ஒன்றாக வேலை செய்தாலும் தனிப்பட்ட போன் நம்பர்களை யாருக்கும் கொடுக்காதீர்கள் . நம்பிக் கைக்குரிய நபர்களைத் தவிர.

சில நேரங்களில் உயர் அதிகாரிகளே தொல்லைகள் தருவார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் , பிரச்சினைகள் தீரும் வகையில் மிக ஜாக்கிரதையாகக் கையாளுங்கள். உயர் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்களின் பழிவாங்கும் படலம் உங்கள் வேலைகளில் குறை கண்டுபிடிப்பதில் ஆரம்பிக்கும். அதனால் முடிந்த வரை வேலைகளில் தவறு செய்யாதீர்கள்.

ஆண் நண்பர்களிடம் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக எல்லாவற்றுக்கும் கைகொடுப்பது, தொட்டுப் பேசுவது கூடாது. இது அவர்களுக்கு உங்கள் மேல் வேறு எண்ணம் வரக் காரணமாக அமையும்.

கடமையைச் சரிவரச் செய்பவர்கள் அனைவரும்

சாதனையாளர்கள்தான்

சு.சாரங்கி

சாதனை... இது வெறும் விருதுகளையும், பலராலும் அறியப்படும் பிரபலங்களாவதாலும், தனது துறையில் பெறும் வெற்றிகளாலும் மட்டும் நிர்ணயிக்கப் படுவதில்லை. சொல்லப்போனால், இந்த அவசர உலகில், தங்களுக்கான பொறுப்புகளை சரிவர நிவர்த்தி செய்யும் அனைத்து பெண்களுமே சாதனையாளர்கள்தான்.

பெண்களுக்கு இருக்கும் அதீத திறன் மற்றும் தைரியம் காரணமாகவே அவர்களை வீட்டுக்குள் பூட்டி வைத்திருந்ததோ பழைய சமூகம் என்று எண்ணத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு தற்போதைய கால கட்டத்தில் பெண்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. மிகப்பெரிய நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளில் பெண்கள் இடம்பெற்றிருப்பதும், பல நாடுகள் மற்றும் மாநிலங்களின் தலைமைகளை பெண்கள் ஏற்றிருப்பதும் இதற்கு சான்றுகள். அரசியல், சினிமா, கலை, விளை யாட்டு என்று பெண்கள் தடம்பதிக்காத துறைகளே இல்லை.

வீட்டை விட்டு வெளியே வந்து தங்களது திறமையை வெளிப்படுத்தும் பெண்கள் மட்டுமே சாதனையாளர்கள் அல்ல. ஒரு வீட்டில், குடும்பத் தலைவியாக இருந்து குடும்ப உறுப்பினர்களின் அச்சாணியாக செயல்படும் ஒவ்வொரு பெண்ணுமே சாதனை யாளர்தான்.

சிலர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு வீட்டில்தான் இருக்கிறேன். சும்மா தான் இருக்கிறேன் என்று பதில் சொல்வார்கள். அது அவர்களைப் பற்றி அவர்களே குறைவான மதிப் பிட்டிருப்பதன் அடையாளம். ஆனால், வீட்டில் இருக்கும் பெண்களின் வேலைகள் சொல்லி மாளாதவை.

எனவே, வீட்டில் இருப்போர் நிச்சயமாக பெருமை யோடு இல்லத்தரசியாக உள்ளேன் என்று சொல்லுங்கள். அதன் கஷ்டம் என்ன என்பது அனைவரும் அறிந்திருக்கும் விடயம்தான்.

ஒரு வீட்டில் ஒரு நாள் குடும்பத் தலைவி உடல் நலம் பாதித்து படுக்கையில் விழுந்தால், அந்த வீடே அலங்கோலமாகிவிடும். அனைவருமே தக்கு முக்காடிப்போவார்கள். அப்போதுதான், அந்த பெண்ணின் முக்கியத்துவம் தெரிய வரும். அதுதான், அவளது சாதனை. எவ்வாறு எந்த ஒரு இழப்பையும், இயலாமையையும் வெளிக்காட்டாமல் அனைவரின் தேவைகளையும் இனிதே, தேவையான நேரத்தில் பூர்த்தி செய்கிறாள் பெண். அதுபோலவே, வீட்டை இல்லமாக மாற்றும் திறனும் ஒரு பெண்ணுக்கே உரித்தானது.

இதற்கெல்லாம் விதி விலக்காக சில பெண்களும் குடும்பங்களில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், குடும்பத் துக்காக தங்களையே அர்ப்பணித்து வாழும் ஏராளமான பெண்கள் இருக்கும் வரை, இந்த உலகம் எனும் வண்டி எந்த சறுக்கலும் இல்லாமல் வேகமாக இயங்கிக் கொண்டுதான் இருக்கும்.

ஒரு வீட்டில் ஒரு நாள் குடும்பத் தலைவி உடல் நலம் பாதித்து படுக்கையில் விழுந்தால், அந்த வீடே அலங்கோலமாகிவிடும், அனைவருமே திக்கு முக்காடிப் போவார்கள். அப்போதுதான், அந்த பெண்ணின் முக்கியத்துவம் தெரிய வரும். அதுதான், அவ எது சாதனை. எவ்வாறு எந்த ஒரு இழப்பையும், இயலாமையையும் வெளிக்காட்டாமல் அனைவரின் தேவைகளையும் இனிதே, தேவை யான நேரத்தில் பூர்த்தி செய் கிறாள் பெண். அதுபோலவே, வீட்டை இல்லமாக மாற்றும் திறனும் ஒரு பெண்ணுக்கே உரித்தானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைக்கப்படாத கொழும்புத்துறை வீதி

கொழும்புத்துறை மேற்கு இலந்தைக் குளம் வீதிக்கு முன்பாக செல்லும் விதானையார் வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றி வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் மூடி கைவிடப் பட்ட நிலையில் காணப்படுகிறது.

இதனால் வீதியூடாக போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பல தடை வைகள் யாழ். மாநகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை வீதிப் புனரமைப்புக்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(வ-17)

வாரத்தில் இருநாள் ஆயுள்வேத மருத்துவ சேவை

வடமாகாண ஆயுள் வேத மாகாணப் பணிப்பாளர் வழங்கிய அனுமதியைத் தொடர்ந்து இன்று திங்கட்கிழமை முதல் இரு நாள்கள் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுள்வேத வைத்திய சேவை இடம்பெறும். இதுவரை காலமும் வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் மட்டும் இடம்பெற்று வந்த ஆயுள் வேத மருத்துவ சேவை இனிவரும் காலங்களில் வாரத்தில் திங்கட்கிழமைகளிலும் இடம்பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

(ஒ-50)

மின் விளக்கு இன்றி பயணிகள் அவலத்தில்

அல்வாய் மாலி சந்திப் பகுதியில் வீதி விளக்குகள் இன்மையால் இரவு வேளைகளிலும் அதிகாலை வேளைகளிலும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, வியாபாரிமூலை ஆகிய இடங்களுக்குப் பயணிக்கும் பெரியதொரு சந்தியாக மாலிசந்தி இருந்து வருகின்றது. இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் இந்தச் சந்தியில் இருந்து பஸ்களில் பயணிப்போரும், குறிப்பிட்ட இடங்களில் இருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் இந்தச் சந்தியில் இறங்கும் பயணிகளும் வீதி விளக்கு வெளிச்சம் இன்றி இருட்டில் தவிக்க வேண்டியுள்ளது. இது தவிர வதிரியில் உள்ள தனியார் உயர் கல்வி நிலையத்தில் உயர்தர பாடங்களைக் கற்று விட்டு குறிப்பிட்ட பகுதிகளுக்குச் செல்வதற்காக மாலை வேளைகளில் பஸ்ஸுக்காக காத்திருக்கும் மாணவர்களும் பெரும் சிரமங்களுடனேயே சந்தியில் காத்து நிற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மாலி சந்தியின் நான்கு பக்கங்களிலும் பிரகாசமான வீதி மின்விளக்கை ஏற்படுத்த கரவெட்டிப் பிரதேச சபை கவனத்தில் கொள்ளாதது குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்கள் பிரதிநிதிகள் இருந்தும் வீதிவிளக்குகளின் அத்தியாவசியத்தையும் பயணிகள் படும் சிரமங்களையும் புரியாமல் இருப்பது பெரும் கவலையைத் தருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மாலிசந்தி வதிரி வீதி, மாலி சந்தி நெல்லியடி வீதிகளில் வீதி விளக்குகள் இருந்தும் பல மாதங்களாக ஒளிராத நிலையில் இருக்கின்றன. இதன் காரணமாக சைக்கிளோட்டிகள், பாதசாரிகள் பெரிதும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர்.

(ந-173)

ஓராண்டு நினைவலைகள்

அமரர்
நல்லதம்பி இராசலிங்கம்
(MSc, FCMA, FCCA, MBIM, DPFM மூத்த விரிவுரையாளர்)

தீதி : தைத்திங்கள் தேய்பிறை சதுர்த்தி
(20.01.2014)

தோற்றம்
30.01.1933

மறைவு
30.01.2013

மண்ணில் தோன்றி புழுதியில் விளையாடி
துன்பமே வாழ்வாய் உலகில் உழன்று
முயற்சியே திருவினையாய் வாழ்வெனவென்று
தன் காலால் தானே உயர்படியில் ஏறி
பட்டங்கள் பதவிகள் பலதும் பெற்று
இலங்கை, மலேசியா, லண்டன் நகரங்களில்
விழவெள்ளியாய் பிரகாசித்து – அகவை
என்பதில் மண்ணில் உதித்த நாளில்
வாழ்வின் நிறைவதனை அடைந்த அப்பாவின்
நினைவலைகள் வருத்த அவரால் உயர்ந்த
குடும்பத்தினர் நாம் உறவினருடன் கூட
ஓராண்டு நிறைவில் இறையாய்
நினைத்து வணங்குகின்றோம்.

(43769)(7.6.3)

"குறிஞ்சி"
கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

10ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
சின்னத்தம்பி செல்லத்துரை
(மத்தொனி, கரவெட்டி மேற்கு, நோர்வே)

மலர்வு
17.08.1951

உதிர்வு
20.01.2004

கனவுகளே உங்கள் கல்லறை வாழ்வு
ஒரு தசாப்தம் ஓடி மறைந்ததுவே
தாய் மண்ணைக் காணவென தாகத்துடன் இங்குவந்து
மண்ணையே முத்தமிட்டு மரணத்தை அடைந்தீரோ
அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
எம்மைவிட்டகன்று ஒரு தசாப்தம் என்ன
ஆயிரம் தசாப்தம் வந்தாலும்
உங்கள் நினைவுடனே நாம் வாழ்வோம்.

(42461) (7.6.3)

மத்தொனி,
கரவெட்டி மேற்கு.
நோர்வே.

குடும்பத்தினர்.

28ஆம் ஆண்டு நினைவலைகள்

விழிப்பு
08.12.1913

உறக்கம்
20.07.1986

மனுவற்பின்னை நவரெத்தினம்
(Retd Tug.Master)

15/1, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(42439)(3.6.4)

6ஆம் ஆண்டு நினைவலைகள்

அப்பா,பப்பா!
காலச்சுவட்டில் ஒரு
காவலன் போல்
எங்களோடு இருந்த
உறவு கொண்டு
எல்லாமாக
இருந்தீர்கள்
நினைவுகள்
நெஞ்சிருக்கும் வரை
உங்கள்
ஆத்மாசாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

விழிப்பு
23.06.1949

உறக்கம்
20.01.2008

அந்தோனிப்பர்னாந்து செபமாலைமுத்து
(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ் பல்கலைக்கழகம்)

குடும்பத்தினர்.

நீங்கா நினைவில்

11ஆம் ஆண்டு

மலர்வு
27 . 04 . 1938

உதிர்வு
01 . 02 . 2002

17ஆம் ஆண்டு

அன்னை மடியில்
21 . 02 . 1977

அமரன் மடியில்
13 . 06 . 1996

அமரர் வெ.வேலு (கந்தையா)
(ஓய்வுபெற்ற மின்கம்பி இணைப்பாளர்)
திதி : 20.01.2014

செல்வன் வேலு சனகன்
(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள்
இருவரினதும் நினைவுகளோடு கலந்து வாழும்

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(43736)(7.6.3)

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சதாசிவம் தெட்சணாமூர்த்தி
(ஓய்வுபெற்ற முதலியார்)
திதி: சங்கடகரசதுர்த்தி

தோற்றம்
16★08★1947

மறைவு
30★01★2013

ஆண்டொன்று மறைந்தாலும்
ஆறாது எம்துயர்
கற்ற பெரும் செல்வத்தால்
பெற்ற பெரும் முதலிபதவி
சுற்றங்கள் குற்றம் காணாது
பற்றுடன் வாழ்ந்தீரே
வெற்றுவார்த்தைகள் போதாது
உற்ற துன்பம் சொல்லி அழ
தெட்சணாமூர்த்தி நாமம் கொண்டீர்
தெட்சணாமூர்த்தி பாதம் சேர
ஆத்மார்த்தமாய் பிரார்த்திக்கின்றோம்.

கணபதிசெட்டி லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

(42493)(3.6.4)

மனைவி,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahanam.org

மரண அறிவித்தல்

சபாரத்தினம் சிவபாதவிருதயர்
(இளைப்பாறிய ஆசிரியர்)



விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிட மாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சிவபாதவிருதயர் 18.01.2014 சனிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகௌரி, சிவகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பரமு சபாரத்தினம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை இரத்தினம்-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசி, புனிதவதி, சுந்தரமூர்த்தி, அருணந்தி, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.01.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 5 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (21.01.2014) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
0112 37165

(சி/10598)
(10.6.3)

சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடு தொடர்பாக விசனம்

வவுனியா மக்கள் தெரிவிக்கின்றனர்

வவுனியா,ஜன.20

வவுனியாவில் இயங்கிவரும் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் செயற்பாடு குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். வவுனியாவில் பொலிஸாரின் உதவியுடன் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டன.

ஆனால் கடந்த ஆண்டைப் பொறுத் தவரை திருட்டுச் சம்பவங்கள், கலாசார சீரழிவுகள் என்பன குறை வடைந்ததாகத் தெரியவில்லை. 2012 ஆம் ஆண்டை விடக் கடந்த ஆண்டு இத்தகைய சம்பவங் கள் அதிகரித்துள்ளன. ஆல யங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பஸ் நிலையங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்ததுடன் மதுப் பாவனையும் உயர்வடைந்த நிலையில் காணப்பட்டது. மேலும் சண்டைகள், சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட பல குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. சிவில் பாதுகாப்புக் குழுக்களிடம் குறிப் பிட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட போதி லும்பயன் எதுவும் கிடைக்கவில்லை. கிராமங்களில் வைக்கப்பட்ட முறைப் பாட்டுப் பெட்டிகளில் பொதுமக்கள் முறைப்பாடு தெரிவித்துக் கடிதங் களை இட்டுவந்த போதிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

சம்பிரதாயத்துக்காக மட்டுமே சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளனவா எனவும் மக்கள் கேள்வி கேட்க ஆரம்பித்துள்ளனர். எனவே இனியாவது சிவில் பாது காப்புக் குழுக்களை உரிய வகை யில் இயங்கச் செய்வதற்கான நட வடிக்கைகளை மேற்கொண்டு திருட்டுச் சம்பவங்கள், கலாசார சீரழிவுகள், கோஷ்டிச் சண்டை கள் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்து மாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.20

வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த இருவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஏ-9 வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காய மடைந்ததாகக் கூறப்பட்ட வவுனியா கனகராயன் குளத்தைச் சேர்ந்த நற்குணலிங்கம் சுதாகரன் (வயது- 28), செட்டிகுளம் தாமரைக் குளத்தைச் சேர்ந்த ஜே.பாலிகா (வயது-32) ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டவர்களாவர்.

இதேவேளை, வெள்ளியன்று காலை நஞ்சுத் திராவகம் அருந்தியதாக அனுமதிக்கப்பட்ட பளை இத்தாவிலைச் சேர்ந்த நடராஜா திருசரவண பவ நாதன் (வயது-48) என்ப வரும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளார். (வ-9)

மாடுகளை வெட்டுவதற்கு அனுமதி பெறப்படவேண்டும்

கூறுகிறார் துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர்

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இறைச்சிக் காக மாடுகள் வெட்டுவதற்கு துணுக்காய்ப் பிர தேச சபையின் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண் டும் என பிரதேச சபைத் தவிசாளர் வீ. இராசரத் தினம் தெரிவித் தார்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மாடு கள் அனுமதியற்ற முறையில் இறைச்சிக் காக வெட்டப்படும் சம் பவங்கள் அதிகரித்துக் காணப்படும் நிலை யில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்; துணுக் காயில் உள்ள கொல் க ள ங் க ளு க் கு த் தேவையான தண் ணீர் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கால் நடை வளர்ப்பு முக்கிய தொழிலாகக் காணப் படுகின்றது.

இந்த நிலையில் கால் நடைகள் சட்டரீதியற்ற வகையில் கொல்லப் படுவதை துணுக்காய் பிரதேச சபை அனு மதிக்காது - என்றார். (க-18)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
04 - 05 - 1950

விண்ணில்
11 - 02 - 2012



அமரர் கந்தையா தபேந்திரன்
(முன்னாள் நீதி உதவியாளர், பிரதேச செயலகம் - கரவெட்டி)

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தி இருக்கச் செயல்"
என்ற பொய்யா மொழியான் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே...
எங்கே போய்த் தேடுவோம் ஐயா...
உங்கள் கனிந்த முகத்தையும், மென் சிரிப்பையும்...

சாய் இல்லம்
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

உங்கள் கொள்கைகளை மனதிருத்தி உங்கள் வழியில் வாழும் உங்கள் குடும்பத்தினர்

அந்தியேட்டி அழைப்பு

அமரர் கந்தசாமி ஜெயரட்ணம் (பேபி)
(முன்னாள் சாரதி, உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.)



கடந்த 23.12.2013 இறைபதம் அடைந்த அமரர் கந்தசாமி ஜெயரட்ணம் அவர்களின் அந்தியேட்டி சபீண்டிகரண கிரியைகள் இன்று (20.01.2014) திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது கீரிமலை புனித தீர்த்தத்தில் கலக்கப்படும். அத்துடன் 22.01.2014 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி தெற்கு,
உடுப்பிட்டி. (43077) **குடும்பத்தினர்.**

கண்ணீர் அஞ்சலி

எமது குடும்ப நண்பன் **திரு.யோ. ஜெயக்குமார்** அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி காமாட்சி யோகேஸ்வரன்

(ஓய்வு நிலை ஆசிரியை யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ரஞ்சனாஸ் புடவையகம்.
நவீன சந்தை சாவகச்சேரி

31 ஆம் நாள் நினைவுகளுடன்....

பிறப்பு
1948 - 02 - 12

இறப்பு
2013 - 12 - 21

அமரர் செல்லையா பொன்னுத்துரை

நேற்று நீங்கள் பேசிய பொழுதுகள்,
சிரித்த பொழுதுகள் கனவாகிப் போனதே....
புன்னகை பூத்த உங்கள் வதனம்
மாய்ந்து மறைந்ததே....
நாள்கள் வருடங்களாயினும்
எம் நெஞ்சை விட்டு மறையாது
மறவாது உங்கள் நினைவுகள்

குடமியன்,
வரணி.

நினைவுகளின் மீட்டலில்
குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் அந்தோனிமுத்து றோசறி ஜெயநாயகி
(யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம், மல்லாகம்)

நீல வான் தனிலே மேகக் கூட்டம் படை சூழ
வெண்ணிற தாரகைகளிற்கிடையே - உலா வரும்
சந்திரனைப் போன்று தனிமையாய் என் கற்பனைகள் - கவிபாட
நிலையற்ற நினைவுகளுக்கு இடையே
துன்பம் எனும் கடலினிலே
துயர் அலைகளுக்கு மத்தியில் - உனை தேடி
துடுப்பற்ற தோணியாய் பயணிக்கிறது என் பயணம்
செல்வத்தில் எளிமையாகவும்
கோபத்தில் பொறுமையாகவும்
பதவியிலே பண்பாகவும்
பல்கலையும் கற்று – பதவியிலே செழித்து
கழன உழைப்புடனும் கடவுள் பக்தியுடனும்
நாவிலே இனிமையாகவும் சொல்லிலே சுவையாகவும்
குறைகளை நிறைவாக்கி கல்வியை முறையாக்கி
நெறிகளை பின்பற்றி வழி சமைத்தவளே
தன்னலமற்ற சேவை செய்து நித்தமும் உழைத்து
நாநிலம் போற்றும் நன் மக்களாய்
வியூகம் அமைத்தவளே
வேதனைகளை சாதனைகளாக்கி உலகம் போற்றும்
உத்தமியாய் ஏழேழு பிறப்பும் என்னுடன்
வளமாக தொடர்ந்து வாரீர்!

(47783)

குளமங்கால், மல்லாகம். **குடும்பத்தினர்.**

மரண அறிவித்தல்

திருமதி அன்னபூரணியம்மா செல்லத்துரை
(பரிமளம்)



ஊரிக்காடு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணியம்மா செல்லத்துரை நேற்று (19.01.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜ மனோகரி மற்றும் பாலசுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா) சிவயோகவல்லி, இராஜ மனோகரன் (ஜேர்மனி), தவக் குமாரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சண்முக ரட்ணம், சறோஜினிதேவி (ஆஸ்திரேலியா), தர்மலிங்கம், சந்திரா (ஜேர்மனி), யோகேஸ்வரன், பிரபாகரன் (ஜேர்மனி), மங்களேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் மகேஸ்வரி, மனோன்மணி, சிவலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், சோமசுந்தரம், பொன்னம்பலம், சோதிப்பிள்ளை, வாமதேவன் ஆகியோரின் மைத்துனியும், மஞ்சுளா, சுதாகரன், இளங்கோ, கோகுலபாலன், உதயகுமார், நிரஞ்சனா, சுலோசனா, வதனா, ராஜினி, தயானி, பிரபாலினி, சிந்துயன், கௌசிகன், சுரேந்தர், பிரசன்னா, கீர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2014) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு.
தொடர்பு : 077 552 6080

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓர்கன், மிருதங்க பயிற்சி வகுப்பு

தென்மராட்சி கலைமன்றத்தின் இசை வகுப்புகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகும்.

ஓர்கன் மற்றும் மிருதங்க பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப் படவுள்ளதால், ஆர்வமுள்ளவர்களை இணைந்து கொள்ளுமாறு மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-9)

சமய சந்நிதி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மணவாளக் கோலத் திருவிழாவும் நவோத்ர சகஸ்ர சங்காபிஷேகமும் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற வுள்ளது.

மாலை பூசைகள் பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று மாலை 6 மணிக்கு அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி வெளி வீதியுலா வருதல் இடம் பெறும். (ந)

♦♦♦

புலோலி, தேவரன் மகிழமரத்தடி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய மணவாளக் கோல தினம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ளது.அன்றையதினம்அம்பாளுக்கும், எனைய பரிவார மூர்த்திகளுக்கும் முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகமும், பூசையும் இடம்பெறும். (ந-173)

♦♦♦

சாவகச்சேரி டச்சு வீதி செருக்கல்பதி பிள்ளையார் ஆலய பாலஸ்தாபனம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

ஆலய புனரமைப்பு வேலைகள் மேற்கொள் ளப்படவுள்ளதால் அடியார்கள் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு ஆலய தர்மகர்த்தா கேட்டுள்ளார். (ந-9)

♦♦♦

ஒட்டுமடம் தூய செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடு கள் நாளை மறுதினம் புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தினமும் மாலை 4.30 மணிக்கு செபமாலை வழிபாட் டைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும். எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (ந-51)

புனரமைப்பின்றி கொழும்புத்துறை சென்.ஜோசப் வீதி

கொழும்புத்துறை வளன் புரம் பகுதிக்குச் செல்லும் சென்.ஜோசப் வீதியின் ஒரு பகுதி புனரமைப்புச் செய்யப் படாமையால் அந்தப் பகுதி மக்கள் பல அசௌ கரியங்களை எதிர்கொள் கின்றனர் என்று தெரி விக்கப்பட்டது.

நீண்ட காலமாக திருத் தம்செய்யப்படாதகுறித்த வீதியின் ஒரு பகுதி புதிதாக நிர்மாணிக்கப் பட்ட போதிலும் ஏற்க னவே அமைக்கப்பட்டு சேதமடைந்திருந்தசென். ஜோசப் வித்தியாலயத் துக்குப் புனித சூசையப் பர் ஆலய வீதிக்கும் இடைப்பட்டபகுதிபெரிய குழிகளுடன் திருத்தம் செய்யப்படாது காணப் படுகிறது.

இந்தப் பகுதி தாழ் வாக் காணப்படுவதால் மழை காலங்களில் வெள்ளம்தேங்கிநின்று போக்குவரத்து செய்ய முடியாது சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர். (ஒ-135)

நிர்வாக சபைத் தெரிவு

கைதடி வளர்மதி சன சமூக நிலையத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள்கடந்தவாரம் நிலையகேட்போர்கூடத் திலே நடைபெற்றது. இந்த ஆண்டுக்கான நிலையத்தின் தலை வராக சி.சிவலிங் கமும், செயலாளராக சி.கபிலனும், பொரு ளாளராக இ.ரூபனும் தெரிவு செய்யப்பட் டனர். அத்துடன் பதி னொரு பேர் கொண்ட நிர்வாக சபையும் பொதுச் சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது. (ந-288)

மரண அறிவித்தல்கள்

சேனாதிராஜா பார்வதிப்பிள்ளை
(சந்திரா)

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சேனாதிராஜா பார் வதிப்பிள்ளை (18.01.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரி யைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கச்சாய் வீதி, கொடிகாமம்.
T.P: 077 059 5019, 077 967 5113

தகவல்: குடும்பத்தினர்.
(43770)(3.6.4)

அருட்பணி ஜோசப் நவரட்ணம் அ.ம.தி.

மாதகலைப் பிறப்பிட மாகவும் மலேசியா, பிலிப் பைன்ஸ் ஆகிய நாடு களில் அருட்பணி ஆற்றிய வரும்மான அருட்பணி ஜோசப் நவரட்ணம்(O.M.I) அவர் கள் நேற்று (19.01.2014) ஞாயிற்றுக் கிழமை பிலிப் பைன்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர் களான S.பிரான்ஸிஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-S.P.C)- அன்னம்மா தம் பதியரின் அன்பு மகனும், திருமதி பாக்கியம் அழகையா (AUSTRALIA), காலஞ்சென்றவர்களான மாசிலாமணி, வேதநாயகம், இராசநாயகம், அருள்சோதி மற்றும் திருமதி ஜொய்சி அந்தோனிப்பிள்ளை (CANADA), திருமதி ஜசிந்தா அன்ரன் (CANADA) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருட்சகோதரி ஜொய்ஸ்மாறி (A.C-KANDY) இன் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பிலிப்பைன்ஸில் நடை பெறும்.

07, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். (43775)(3.6.4)

தகவல்: திருமதி A.R.வேதநாயகம்

மரண அறிவித்தல்

டாக்டர் அ.கணேசமூர்த்தி
(Retired Registered Medical Officer)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும், கொழும்பில் வசித்தவருமாகிய அருணாசலம் கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி) 18.01.2014 சனிக்கிழமை இறைவனடி அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - மனோன்மணி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற துரையப்பா (ஓய்வுபெற்ற மேலதிக மாவட்ட பதிவாளர்)- மனோன்மணி தம்பதியரின் மருமகனும், பாமதியின் அருமைக் கணவரும், சுரேன் (பொறியியலாளர்), ஜெகன் (Programme Officer - GIZ) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஜாவின் அன்பு மாமனாரும், ஆதிரையனின் பாட்டனாரும், தவரத்தினம், கமலாம்பிகை, ஞானம்பிகை, வேதமூர்த்தி (கனடா) ஆகியோரின் சகோதரரும், ரதிமதி - பாலசிங்கம் (கனடா), வான்மதி - சபாரத்தினம், கோகிலமதி - மயில்வாகனம் (லண்டன்), இந்துமதி - பாக்கியசோதி (ஆஸ்திரேலியா), சிவகுமார் - சுதனி (கனடா), ஸ்கந்தகுமார் - சிவனேஸ்வரி (லண்டன்), விஜயகுமார் - அருந்தா (லண்டன்) ஆகியோரின் மைத்துனர் மற்றும் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை, ஜயரத்ன மலர்ச்சாலையில் 19.01.2014 ஆம் திகதியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (20.01.2014) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுரேன் (மகன்) - 077 725 3730
ஜெகன் (மகன்)- 077 322 9140

54 - 3/2, Sinsapa Road,
Colombo - 06. (A10593)(12)(3.6)

வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
கந்தையா தங்கவடிவேல்

தோற்றம்
11.06.1953

மறைவு
23.12.2013

கடந்த 23.12.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா தங்கவடிவேல் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் மரணச்சடங்கிலும் பங்குபற் றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.01.2014) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (23.01.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணி யளவிலும் நடைபெற வுள்ளதாம் தாங்கள் தம் கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை தெற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
சுப்பையா சின்னத்துரை

கடந்த 21.12.2013 சனிக்கிழமை சிவதமடைந்த எமது குடும்பத்தலைவர் சுப்பையா சின்னத்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.01.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி
20.01.2014

பிறப்பு
28.01.1934

இறப்பு
20.01.2011

அமரர் வைத்தி சந்தியாபிள்ளை

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்" (யோவா 11:25)
நித்திய இளைப்பாற்றை அளித்தருளும் ஆண்டவரே!
முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் பிரகாசிக்கக் கடவது!

இவரின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இல.54/5, அன்னம்மாள் போரிஸ் லேன், பண்டிவன்தர்வு, கொழும்புத்துறை வீதி.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

மணி விழாக் காணும்

பிரதிக் கல்விப் பணிப்பாளரை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர் திரு
கோவிந்தசாமி செல்வராசா

எமது பாடசாலையில் 4 ஆண்டுகள்
கடமை புரிந்து போர்க் காலத்திலும்
எமது பாடசாலையை அழிவுறாது தொடர்ந்து
இயங்க அரும் பணியாற்றிய முன்னாள் அதிபரும்
கிளிநொச்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்
பணிப்பாளரும் (கல்வி நிர்வாகம்) ஆகிய
கோவிந்தசாமி செல்வராசா அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் அவரது பணி எமது மாவட்டத்துக்கு
தொடர்ந்தும் கிடைக்க வேண்டும் எனவும் அவர் தமது
குடும்பத்துடன் பல்லாண்டு காலம் இனிதே வாழ வேண்டும்
எனவும் உளமார வாழ்த்துகிறோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரி கழகம்,
கிளி/ வட்டக்கச்சி ம.வி. வட்டக்கச்சி.

(சி-11502)

பாராட்டி வாழ்த்துகிறோம்

பகீரதன் பார்த்தீபன்
BA(History)

செல்வராசா பிரதாப்
BA(Hons)

செல்வி கௌசிகா சோமசுந்தரம்
BA(Hons)

யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற
29ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றதை வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.

ஆலங்குஞாய்,
சண்டிலிப்பாய் வடக்கு கனகரமுக நிலையம்

(4377747(6))

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லாசானாய், நல்லதிபராய்,
கோட்டக்கல்வீப் பணீப்பாளராயும் –
கொடிய போர்க்காலத்தில்
பிரதிக் கல்வீப்பணீப்பாளராயும்
எம்முடன் நின்று உயர்வாய் உழைத்த

கோ.செல்வராசா
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி முகாமைத்துவம்)
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

அவர்களது சேவையைப் பாராட்டிப்
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.

(C/11063)(7.6.3)

பரீட்சையில் சித்தி பெற்றும் இதுவரை நியமனங்கள் இல்லை

அரச தினைக்கள அலுவலகங்களில் கடமைபுரியும் சிற்றூழியர்களை முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு தரம் உயர்த்துவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு இதுவரை பதவியுயர்வு நியமனக் கடிதம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. போட்டிப் பரீட்சையில் சித்திபெற்ற திறந்த போட்டியாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த வருட பிற்பகுதியில் வடமாகாண சபையினால் வழங்கப்பட்டது. எனினும் பரீட்சையில் சித்திபெற்று நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட சிற்றூழியர்களுக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

கிளிநொச்சி உதயநகரில் ஆடுகள் வழங்கும் நிகழ்வு

உலக உணவு நிறுவனத்தின் கிளிநொச்சி நிதிப் பங்களிப்புடன் ஆடுகளை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி உதயநகரில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த நிகழ்வு உதயநகர் கிழக்கு பொது மண்டபத்தில் கிராம அலுவலர் எஸ். சந்திரபாலன் தலைமையில் நடைபெற்றது. இதில் வட மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன்போது 13 குடும்பங்களுக்கு நல்லிண ஆடுகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி. அமல்ராஜ் உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் கிளிநொச்சி இணைப்பாளர் மருத்துவர் நரேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டு ஆடுகளை வழங்கினர். (க-18)

குருந்தம் பிரிவினால் பொங்கல் விழா

போதைக்கு அடிமையாகி மீள முடியாத நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை 'குருந்தம்' பிரிவில் சிகிச்சை பெறுபவர்களின் பொங்கல் விழா கடந்த வியாழக்கிழமை விடுதி முன்பாக இடம்பெற்றது. விடுதியில் சிகிச்சை பெற்று வெளியேறியவர்கள், சிகிச்சை பெறுவோர் ஆகியோரால் பொங்கல் செய்யப்பட்டது. நிகழ்வில் விடுதிப் பொறுப்பதிகாரி, பயிற்றுநர்கள், சிகிச்சை பெற்றோரின் குடும்பங்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-9)

நெஞ்சக் கதவினை கொஞ்சம்.....

செல்வ வேலாயுதம்

மிஞ்சியவை கரியும் கடதாசியும்

வீட்டுக்'கேற்' திறக்கும் ஓசையுடன் வீட்டுக்காரர் எனும் குரலும் இணைந்து ஒலிக்கிறது. வாசலில் மூன்று இளம் யுவதிகள். ஒருத்தியின் முகத்தில் எரிகாயத்தின் வடு. மூவரும் சகோதரிகளாம். இரண்டாமவள் பத்தாம் ஆண்டு மாணவி. இளையவள் படிப்பை விட்டுவிட்டாளாம். முள்ளிவாய்க்கால் பாடசாலை ஒன்றின் அருகில் எம் - 42 கிராம சேவையாளர் பிரிவில் வதிவிடம் என்றார்கள். ஆதாரப்படுத்தும் எதுவும் கையில் கிடையாது. நூறு ரூபாத்தாள் ஒன்றைக் கொடுத்த வீட்டுக்காரி, உங்கட விலாசத்தைத் தாங்கோ, அவரிட்டைச் சொல்லி படிக்கிற பிள்ளைக்கெண்டாலும் ஆர்மூலமாவது உதவி செய்யிறம். குமர்ப்பிள்ளையள் கண்ட கண்ட இடங்களுக்கும் தீரியாதேங்கோ என்றவர், வெடி வெடிச்சுக் கரியாக்கிற காசை உதுகளுக்குக் கொடுக்க மாட்டாங்கள் என்று முணுமுணுக்கிறார்.

பெண்மணி தெரிவித்தது இலவச ஆலோசனைதான். ஆனாலும் இறந்தகால அவல நிகழ்வுகள் இப்படி பச்சாதாபமாக வெளிப்பட்டிருக்கிறது. வந்தவர்கள் தெரிவித்தவை உண்மையோ பொய்யோ அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பின் மீதான அச்சத்தின் வெளிப்பாடுதான் இவ்வாறு சொல்ல வைத்தது. வெடி கொளுத்தி பண்டிகைகளைக் கொண்டாட வேண்டாம் என்பதல்ல. "தாய் தெருத் தெருவாகப் பிச்சை எடுத்துத் திரிய மகன் ஆடம்பரமாக அன்னதானம் கொடுத்தானாம்" என்ற நிலையில்தான் எம்மவர்கள். வந்தவர்களோ வாழ வேண்டியவர்கள். எங்களால் வாழ வைக்கப்பட வேண்டியவர்கள்.

பொங்கல் பண்டிகை என்னும் பேரால் யாழ்ப்பாணம் வெடியோ வெடியென்று விதம் விதமான வாணங்கள், வெடிகளால் அதிர்ந்தது. பொங்கலுக்கும் வெடி, செத்த வீட்டுக்கும் வெடி கொளுத்துகிறார்கள். இப்படி ஏன் மங்கலத்துக்கும் அமங்கலத்துக்கும் வெடி. இது அநேகம் பேர்களது மண்டையைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்வி. கோவில் திருவிழாக்கள், களியாட்ட விழாக்களில் வாண வேடிக்கைகள் முன்னர் நடைபெற்றன. அத்தனையும் நம்மவர்களது தயாரிப்புக்களே. காலத்தின் கண்ணாமூச்சி விளையாட்டு வாணங்களை மட்டுமல்ல, அத்துறை போன்றவர்களையும் மறைத்து விட்டது. வெடிவாங்கிய காசு வெளியாரின் மடிக்குப் போய்விட கரியும் கடதாசித் துகள்களும் தான் இங்கு மிச்சம்.

தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களை தொடர்ந்து எழுதுவேன்

தமிழகக் கவிஞர் யுகபாரதி உறுதியளித்தார்

அக்கராயன், ஜன.20

தமிழர்களின் மரபையும், கலாசாரத்தையும், பண்பாடுகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும் பாடல்களைத் தொடர்ந்து எழுதுவேன் இவ்வாறு தெரிவித்தார் தமிழகக் கவிஞர் யுகபாரதி.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உழவர் பெருவிழாவின் முக்கிய நிகழ்வான கவியரங்கில் தலைமையேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எத்தனையோ விவசாயப் பாடல்களைக் காற்றின் வாயிலாக மக்களிடம் சேர்ப்பித்துள்ளேன். அண்மையில் வெளிவந்த வெற்றிப் படமொன்றின் பாடல்களைக் கேட்டிருப்பீர்கள்.

எமது காலசாரத்தையும் பண்பாட்டையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கக் கூடிய பாடல்களை நான் மேலும் மக்களின் ஆசீர்வாதத்துடன் எழுதுவேன். இது எனது வாழ்நாளில் மறக்க முடியாதொரு நிகழ்வாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விழாவுக்கு வருவதற்கு முன்பாக அண்ணன் ஜங்கர நேசனிடம் இந்த விழா தொடர்பாக வினாக்களை எழுப்பினேன்.

பெருமளவு மக்கள் அங்கு வருவார்களா? கை தட்டுவார்களா? என்ற ஐயமும் என்னிடம் காணப்பட்டது. மக்கள் வருவார்கள் விழா சிறப்பாக அமையும் என்று அண்ணன் என்னிடம் தெரிவித்தார். சிறப்பாக இருக்கும் என்று கூறினாரே தவிர உண்மையில் இவ்வளவு பெருமளவு மக்கள் வருவார்கள் என்று கூறவில்லை. இனிவரும் காலங்களில் இந்த விழா மேலும் சிறப்பாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

தேவை

கோண்டாவில் கிழக்கில் அமையப் பெற்றுள்ள தாயகம் மருத்துவ மனைக்கு ஓய்வுபெற்ற மருத்துவ அதிகாரி (Retired Medical Officer)

தேவை.

தொடர்பு: 077 663 1021

(சி43779)(4.6.3)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மலிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

பார்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)

(சி/13577)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

முதுகல்விமாணி (MED) பட்டம் பெற்ற
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலாரஜினி கபிலன்
அவர்கள் மேலும் பல பட்டங்கள பெற்று
சிறந்து வாழ வாழ்த்துகிறோம்.
பாடசாலைச்சமூகம்
யா/ நாவன்மட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

கீளி/ பளை மத்திய கல்லூரி
பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சிவயோகினி உமாகாந்தன்
BA (Hons), Dip in Edu (Merit)
MA (Tamil) (2nd Upper)
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தில்
2014.01.10 இல் நடைபெற்ற
29 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணிப்பட்டம் பெற்ற
எமது ஆசிரியரை அகமகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச்சமூகம்
கீளி/ பளை மத்திய கல்லூரி

பாராட்டி வாழ்த்துகின்றோம்
10.01.2014 அன்று யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற 29 ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி (MA) பட்டம் பெற்ற எமது
பாடசாலை ஆசிரியர்
இராமச்சந்திரன் வினோதராஜ்
அவர்களைப்பாராட்டி வாழ்த்துவதுடன்
மென்மேலும் பல பட்டங்களும்
பதவிகளும் பெற்று கல்விப்புலத்தில்
உயர்வடைய வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

சேவை நலன் பாராட்டுவிழா
(19.01.2014)

திரு. இராசு
யோகநாதன்
(உப அதிபர் யா /அச்சுவேலி
சரஸ்வதி வித்தியாசாலை)
அகவை அறுபதில் விழாக்காணும்
அச்சுவேலி சரஸ்வதியின் உபதலைவர்
இருபதோடாறு ஆண்டுகள்
இனி தமர்ந்து
ஒழுக்கமுடன் உடற்பயிற்சியும்
ஒன்றாய் தீரட்டி
நல்லறிவுடன் கல்வியை நலமாய் ஊட்டிய
ஆசானின் அன்பான சேவையை நாம்
மனதாரப் பாராட்டுகிறோம்
வாழ்க நீடுழி வாழ்க
என்றும் வளமுடன் வாழ்கவே
அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள்
யா / அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

குற்றச் செயல்கள் தொடர்பில் 7,999 கடிதக் கோப்புக்கள்

இரசாயனப் பகுப்பாய்வுகள் திணைக்களத்தில் குவிவு

கொழும்பு,ஜன.20

இலங்கையில் இடம்பெற்றுள்ள பலதரப்பட்ட குற்றச்செயல் களுடன் சம்பந்தப்பட்டுள்ள 7,999 கோப் புக்கள் இரசாயனப் பகுப்பாய்வுகள் திணைக் களத்தில் குவிந்துள்ளன. அரச இரசாயனப் பகுப்பாய்வாள ரான சரத் குணதிலக்க வின் கருத் துக்கு அமைய, கடந்த ஜூலை மாதமளவில் இத்தகைய 18,320 கடிதக் கோப்புக்கள் அங்கு குவிந் துள்ளன.

அவற்றுள் 10,321 கடிதக் கோப்புக் களின் பகுப்பாய்வுச் செயற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன என்று இரசா யனப் பகுப்பாய்வாளர் தெரிவித்தார்.

எனினும் எதிர்காலத்தில் அரச இர சாயனப் பகுப்பாய்வுகள் திணைக் களத்தின் இரசாயனக் கூடங்களை நவீனமயப்படுத்துவதற்கு, திட்டமி டப்பட்டுள்ளது. அதன் மூலம் இவ் விதம் குவியும் கடிதக் கோப்புக் களின் தொகையைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்மூலம் தற்போது சிறைச் சாலைகளில் நிலவும் நெரிசலையும் குறைத்து விட முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

'எத்தனோல்' வியாபாரத்தை முடக்குவதற்கு நடவடிக்கை

சுங்கத் திணைக்களம் தகவல்

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொள்கலன்களில் எத்தனோல் மற்றும் போதைப் பவுடர் தொகைகளைக் கொண்டு வந்து திருட்டுத்தனமாக அவற்றைத் துறை முகத்திலிருந்து வெளியேறும் மோசடிச் செயற்பாடுகள் அதிக ரித்துள்ளன. அதனால் சுங்கப் புலனாய்வுப் பிரிவுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் ஜகத் விஜே வீர மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத் திணைக்களத்துக்குக் கிடைத்துள்ள சில இரகசியத் தகவல்களின் அடிப்படையில் மேலும் சில சந்தேகத்துக்கிடமான கொள்கலன்கள் சுங்கத் திணைக்களத்தின் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

எத்தனோல் போன்ற இரசாயனத் திரவங்களைத் தருவிக்கும் கொள் கலன்களின் உள்ளே இருக்கும் பரல்களைப் பரிசோ திக்கும் போது அவற் றுள் இருக்கும் இரசாயனங்களின் உண்மைத் தன்மையைப் பரிசோ திப்பதற்கான சாதனம் சுங்கத்திணைக் களத்துக்குத் தருவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பரிசோதனைச் செயற்பாட்டு முறைமைகள் நவீன மயப்படுத் தப்பட்டுள்ளதனால் கடந்த சில மாத காலத்தில் 12 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதிகொண்ட 'எத்த னோல்' அடங்கிய 'கொள்கலன்' களை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது. - என்றார். (ச-22)

முறைப்பாடு மூவாயிரம்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்று மீண்டும் நாடு திரும்பும் நோக்கில் மூவாயிரத்துக்கும் அதிகமான வர்களிட மிருந்து முறைப்பாடு கள் முன்வைக்கப்பட் டுள்ளன என்று வெளி நாட்டு வேலை வாய்ப் புப் பணியகம் தெரிவித் துள்ளது.

ஒப்பந்த காலப் பகு திக்குள் எவரும் நாடு திரும்பமுடியாது என்று பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாள ரும் ஊடகப் பேச்சா ளருமான மங்கல ரன் தெனிய தெரிவித்துள் ளார். மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்ப வர்களுக்கான ஒப் பந்த காலம் 2 வருடங் களாக இருப்பதுடன், இந்தக் காலப்பகுதி யில் ஒப்பந்தத்தை மீறி மீண்டும் நாடு திரும்ப முடியாது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித் துள்ளது.

இதுதொடர்பில் மக்கள் தெளிவடைய வேண் டும் என்று பணியகத் தின் பிரதிப் பொதுமுகா மையாளர் தெரிவித் துள்ளார். (ச)

ஜப்பானின் உதவியில் புதிதாக 37 பாலங்கள்

15,668 மில்லியன் ரூபா செலவில் அமைப்பு

கொழும்பு, ஜன.20

இந்த ஆண்டில் ஜப்பானிய அரசின் நிதி உதவி யின் கீழ் 15,668 மில்லியன் ரூபா செலவில் புதிதாக 37 பாலங்களை நிறுவும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கடல் சார் திட்டங்கள் அமைச்சர் நிர்மல கொத்தலாவலை தெரிவித்தார்.

அதற்கமைய குருநாகல், புத் தளம், மன்னார், கிளிநொச்சி, இரத்தினபுரி, காலி, மாத்தறை, மொனராகலை, களுத்துறை, கொழும்பு, யாழ்ப் பாணம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் இந் தப் புதிய பாலங்களை நிர்மாணிப்பதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

இந்தப் பாலங்களை நிர்மாணிக்கும் பணிகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவடையும். இந்தப் பாலங்களை நிர்மாணிக்க ஜப்பானிய அரசை விட வும் குவைத், சவூதி அரேபியா, பிரான்ஸ், பிரிட்டன், கொரியா ஆகிய நாடுகளும் உதவி களை வழங்கவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

நாய்க்குட்டி விற்பனைக்கு (DASCHUND)
45 நாள்கள் நிரம்பிய டாசோன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. PARYO ஊசி போடப்பட்டுள்ளது. கொக்குவில்
T.P : 077 5456126

வீடு விற்பனைக்கு
யா /கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அண் மித்த பகுதியில் ஒரு பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விலை 21 00000/= தரகர் தேவையில்லை. தொடர்பு :077 4212747

ஜேர்மன் வகுப்புக்கள்
காலம் 2 மாதம் ஒரே தடவையில் சித்தி
சித்தியடைந்த பின்பும் பணம் செலுத்தலாம்
A1 வினா விடை வகுப்பு 10 PAPERS X 2
கடிதம் எழுதும் வகுப்பு 75 LETTERS X 2
LEARNING BOX: FRENCH-GERMAN-DUTCH
APSC URUMPIRAI 0778361718

மரண அறிவித்தல்

திருமதி **யசிந்தா சிவகுமார்**

கொய்யாத்தோட்டம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கனடாவில் வாழ்ந்தவருமான திருமதி சிவகுமார் யசிந்தா கடந்த (07.01.2014) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பஸ்தியாம்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சிவராஜா தம்பதியரின் பாசமிகு மருமகளும் சிவகுமாரின் பாசமிகு மனைவியும் ஜெய்ஷன், ஜெஷான், ஜெனுஷிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவராஜேஸ்வரன் (றாதா, ஓய்வு பெற்ற சுகாதாரப்பிரிவு யாழ். மா. ந. ச), சிவபாலேஸ்வரி, சிவக்குமாரி, சிவராஜகுமார் (றமணன், சிமெந்து கூட்டு ஸ்தாபனம்), சிவயோகமலர் (சந்தியாலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி உப அதிபர் சுன்னாகம்), சிவராஜமலர், சிவயோகராஜா (T.O யாழ். மா.ந.ச.), சிவஜெயந்தி (ஜெயந்தி, யாழ். பல நோக்கு கூட்டுறவு சங்கப்பணியகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (14.01.2014) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவராஜா குடும்பம்

14/1 சிவபதி விதானை லேன் ஈச்சமோட்டை சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

திருமதி **சிவகாமியம்மா கந்தசாமி**

யாழ். தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயில டியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா, சிட்னியை வசிப்பிடமாவும் கொண்ட சிவகாமியம்மா கந்தசாமி கடந்த (17.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாச்சாமி ஐயர்- நவமணி அம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற குகன், கடம்பன் (கனடா), சுதிதேவி (ஜேர்மனி), ஓம்காரன் (சிட்னி), சித்திதேவி (ஜேர்மனி), குருபரன் (சிட்னி) ஆகியோரின் தாயாரும், வளர்மதி (கனடா), சுந்தரலிங்கம் (ஜேர்மனி), நந்தினி (சிட்னி), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), சந்திரவதனா (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமியாரும், துவாரகா, மயூரன் (கனடா), சரவணன், மயூரன், காயத்ரி (ஜேர்மனி), செந்தூரன், கௌசிகா (சிட்னி), ஆர்த்திகா (ஜேர்மனி), குகன், குமரன் (சிட்னி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.01.2014) புதன்கிழமை மு.ப. 9.15 மணிக்கு East Chaple Rookwood Cemetery, Hawthorne Ave, Rookwood NSW 2141, Sydney, Australia இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொ.பே:- ஓம்காரன் (மகன்) +61297635755
செல்லிடப் பேசி:- +61402516208
தகவல்:- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சி கடலேரிகளை ஆக்கிரமிக்கும் ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்கள்

தென்மராட்சி, ஜன.20

தென்மராட்சி பிரதேச கடலேரிக் கரைகளை ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்கள் பயன்படுத்துவதை உரிய அதிகாரிகள் தடுத்து நிறுத்து மாறும் அவ்வாறில்லையெனில் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் தென்மராட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் தெரிவித்தன.

கடலில் மீன்பிடிக்கத் தடையில்லாத போதிலும் ஒரு பிரதேசத் தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு பிரதேசத்தின் கடற்கரைகளைப் பயன்படுத்தவோ, வாடிகளை அமைக்கவோ கூடாது என்று நீரியல் வளத் துறையினரால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.பிரதேச கடற்றொழிலாளர்கள் கேரதீவு உள்ளிட்ட கடலில் மீன்பிடிப்பதுடன் கோவிலாக் கண்டி, மறவன்புலோ, கேரதீவு ஆகிய கடற்கரைகளில் படகுகளைத் தரிக்க விட்டு விற்பனையில் ஈடுபடுகின்றனர். அத்துடன் அந்தப் பகுதியில் வாடிகளை அமைத்து தங்கி வருகின்றனர்.

ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்களின் இவ்வாறான நடவடிக்கையினால் எமது பிரதேச கடற்றொழிலாளர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது.

ஏனைய பிரதேச கடற்றொழிலாளர்கள் தென்மராட்சி பிரதேச கடலேரிப் பகுதியில் படகுகளை தரிக்க விடுவதையும் கடல் உணவுகளை விற்பதையும், வாடி அமைப்பதையும் தடுக்குமாறு யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறைப் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளதாகவும் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

இராணுவத்தின்

யாற்றுகையிலேயே முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

வடக்கு - தெற்கு ஆக்ரோஷம் தணிகின்றது

வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் இதுவரை இருந்த மிகப் பரிதாபகரமான ஆத்திரமும் ஆக்ரோஷமும் அண்மைக் காலங்களில் சிறிதளவாவது தணிந்து வருவதை நான் காண்கின்றேன். அந்தப் பரிதாபகரமான நிலைமை அரசியல் காரணங்களால் ஏற்பட்டதென்பதை நான் கூறித்தான் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. சுயநல அரசியல் எமது மக்களை ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஆனால் அரசியலுக்கு அப்பால் சென்று, அந்தரிப்பவர்களை ஆதரிக்குமுகமாக- துணிச்சலுக்கு எடுத்துக்காட்டாக- நாட்டின் மனித ஒருமைத்துவத்தின் பிரதிபலிப்பாக- நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களின் சின்னமாக- இந்த முயற்சி கைகூடியுள்ளது.

முயன்று முன்னேற வேண்டும்

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்ற தமிழ் அன்னையின் வார்த்தைக்கு இலக்கணமாக, இந்த புற்று நோய் வைத்தியசாலைக்கு நிதி சேகரிப்பதற்காக நடைப் பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்களின் முயற்சி எமக்கும் எமது சிந்தனைகளுக்கும் வலுவூட்டுகின்றது. புதிதாக மக்கள் ஆதரவைப் பெற்று வந்துள்ள எமது வடக்கு மாகாணசபை அங்கத்தவர்கள் முயன்று முன்னேற இவர்களின் வழிகாட்டல் முன் மாதிரியாக அமைந்துள்ளது.

சிங்கள மக்களையும் பாதித்த போர்

போரானது தமிழ் குடும்பங்களை மட்டுமன்றி சிங்களக் குடும்பங்களையும் பாதித்தது என்பதை நேரடியாகக் கண்டவன் நான். கொழும்பில் மேல் நீதிமன்றில் எம்முடன் வேலை செய்த சிங்களப் பெண்மணி வேறு சில அலுவலர்களுடன் வந்து எம்முடன் மனநிறைவுடன் பேசிவிட்டு வெளிச் சென்றதும் அவருக்கு இழவுச் செய்தி காத்திருந்தது.

இராணுவத்தைச் சேர்ந்த அவரின் கணவர் மன்னாரில் போரில் மாண்டுவிட்டார். உடலைக் கொழும்புக்கு கொண்டு வர உதவினோம். அன்று அந்த மரணச் செய்தியை அறிய முன் சிரித்துப் பேசிய அந்தப் பெண்மணி தமது குழந்தைகளுடன் சேர்ந்து கதறிய நிலை இன்னமும் என் கண்முன்னே நிற்கின்றது.

கணவனை இழந்த தமிழ்ப் பெண்கள் பலரின் அழுகையையும் கவலையையும் கம்பலையும் மனம் விறைக்கக் கேட்டவன் நான். போர் அவலங்கள் மக்களுக்கு அப்பால், இனத்திற்கு அப்பால், அடையாளங்களுக்கு அப்பால் ஏற்பட்ட கொடூரமான பாதிப்பு.

அதிகாரப்பகிர்வை மக்கள் கோரியுள்ளார்கள்

வன்முறையை விலக்கி முன்னேறல், நாட்டைப் பிரிக்காது முன்னேறல், சமஷ்டி முறைமையை அனுசரித்து முன்னேறல் என்ற எமது தேர்தல் கொள்கையை பெருமளவான வடக்கு மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அதிலிருந்து அவர்களின் மனநிலையை ஜனாதிபதி புரிந்து கொண்டிருப்பார். ஆகவே வன்முறையைக் களைந்து, நாட்டைப் பிரிவினைக்கு உட் படுத்தாது, அதிகாரங்களைப் பகிர்ந்து கூட்டாக ஒரே நாட்டினுள் வாழ்க்கை நடத்த முன் வந்துள்ள எமது மக்களின் மனோ நிலைக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பார் என்று நாம் நம்பலாம்.

வடக்கு மக்களின் சுயகௌரவம்

எமது வடக்கு மாகாண மக்களின் உள்ளார்ந்த சுய கௌரவத்தைப் பாதிப்பதாகவே இங்கு காணப்படும் பெருவாரியான இராணுவப் பிரசன்னம் நோக்கப்படுகின்றது.

இங்கு குடிகொண்டுள்ள இராணுவத்தினரில் பெரும்பான்மையானவர்கள், இங்குள்ள மக்கள் பேசும் மொழியைப் பேசுவதில்லை. மதங்களைத் தழுவியவர்கள் அல்லர், அவர்களின் கலாசாரத்தில் ஊறியவர்கள் அல்லர், அவர்களின் ஊர்களைக் சேர்ந்தவர்கள் அல்லர்.

வடக்கில் ஒரு லட்சம் இராணுவம்

இங்கிருக்கும் இராணுவத்தினர் தொகைக்கு ஈடான தொகையினரான எமது தமிழ் பேசும் மக்கள் அவர்கள் சார்பில் என்னைப் பேசுமாறு கட்டளையிட்டே என்னை முதலமைச்சர் பதவியை வகிக்க அனுப்பியுள்ளார்கள். அவர்களின் கட்டளையை ஏற்றே இதை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்' என்றார் முதலமைச்சர். வடக்கில் ஒரு லட்சம் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர் என்பதை தனது விருப்பு வாக்குகளின் தொகையால் முதல்வர் சூட்சுமமாகத் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு

நாட்டின் பாதுகாப்புப் பேணப்பட வேண்டும். ஆனால் அதே நேரத்தில் வடக்கு வாழ் மக்களின் நல உரித்துக்கள், அவர்களின் பாதுகாப்பு, அவர்களின் சுயகௌரவம் ஆகியவையும் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். எங்கள் எதிர்பார்ப்புக்களுக்கு முரண்பட்டதாகத் தேசியப் பாதுகாப்பு அமையவேண்டுமென்பதல்ல. இரண்டுமே பேணப்படலாம் என்பது எமது கருத்து.

எமது மக்கள் சார்பாக உங்களிடம் நான் கேட்டுக் கொள்வது, இராணுவத்தினரின் தொகையில் குறைப்பு ஏற்படுத்துதலிலும் எமது மக்களின் வாழ்க்கையில் இராணுவ உள்ளீட்டைக் குறைப்பதிலும் கரிசனை காட்டி ராணுவக் குறைப்புக்கான கால வரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும். அரசியலுக்கு அப்பால் சென்று மனிதாபிமான முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே.

ஏன் பிறந்தேன் நான் ?

போரினால் பாதிக்கப்பட்ட பெண் ணொருவர் தனது காணியை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருப்பதைக் காண்கின்றார். அதே காணியைப் போர் வீரர்களோ அவர்களின் குடும்பத்தவரோ அல்லது அவர்களின் உற்றார் உறவினர்களோ வந்திருந்து பதப்படுத்தி அதில் வேளாண்மை செய்வதைப் பார்க்கின்றார். அதில் வரும் விளைபொருள்களை இராணுவத்தினர் சந்தைக்கு எடுத்துச் செல்வதையும் அந்தப் பெண் காண்கின்றார்.

அதே நேரம் தனக்கு இருக்க இடமில்லை, செய் தொழில் இல்லை, பாதுகாப்பு இல்லை என்பதை அவதானிக்கின்றார். அவரின் சுயகௌரவத்தின் நிலைஎய் எண்ணிப் பாருங்கள். 'ஏன் பிறந்தேன் நான் ?' என்று அவர் அங்கலாய்ப்பது ஏன் எமக்கு புரியவில்லை ? அவரின் சுயகௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதை நாங்கள் ஏன் விளங்கிக் கொள்ளாமல் இருக்கின்றோம் ? போர் எமது மக்களை களைப்படையச் செய்துள்ளது. பாதிப்புக்களுக்கு உள்ளாக்கியுள்ளது. போர் முடிந்து ஐந்து வருடங்களின் பின்னரும் இந்த நிலை தொடர வேண்டுமா ?

நாடு உக்கிரத்தை அனுபவிக்க நேரிடும்

எமது உடல்களைப் போன்றதே எமது நாடும். உடலின் ஒரு பகுதி உக்கிரமாகப் பாதிப்படைந்தால் உடலும் அவ்வாறு பாதிப்படைகின்றது. வலி நிவாரணிகள் போன்றவை ஒரு சில காலத்துக்குப் பாதிப்பின் உக்கிரத்தைக் குறைத்துவைத்திருக்கக் கூடும். ஆனால் காலாகாலத்தில் முழு உடலும் பாதிப்பின் உக்கிரத்தை அனுபவிக்க நேரிடும். - என்றார். (ஜ-5)

புதிய சிகிச்சை

670 கிலோ மீற்றர் நடைபயணம் மூலம் 300 மில்லியன் ரூபா நிதி திரட்டப்பட்டது. 'வாழ்க்கையை வாழ்வதற்கான பயணம்' என்ற தொனிப் பொருளில் பாதை என்னும் அமைப்பினால் இந்த நிதி திரட்டப்பட்டது. இதன் அமைப்பாளர்களான நாதன் சிவகணநாதன் மற்றும் சரிந்த உணம்புவ தலைமையில் நிதி திரட்டப்பட்டது.

இந்த நிதியில் தெல்லிப்பழை வைத்தியசாலையுடன் இணைந்த வளாகத்தில் புற்று நோய் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டது. 120 கட்டில்கள் கொண்ட தங்குமிட வசதி கொண்டதாக இந்தப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டது.

தாமதமாக வந்த ஜனாதிபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிகழ்வுக்கு முற்பகல் 10 மணிக்கு வருகை தருவார் என்று நிகழ்சி நிரலில் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் 45 நிமிடங்கள் தாமதமாகவே வந்து சேர்ந்தார். பலாலி விமான நிலையத்துக்கு விசேட விமானம் மூலம் வருகை தந்த அவர் அங்கிருந்து காங்கேசன்துறை வீதியூடாக தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்தார். ஜனாதிபதியை வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வரவேற்றார். தெல்லிப்பழை வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதன் பின்னர் புதிய சிகிச்சை நிலையத்துக்கான பெயர்ப் பலகையை ஜனாதிபதி திரைநீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து வைத்தியசாலைக் கட்டடத்தை ஜனாதிபதி மற்றும் வடக்கு முதலமைச்சர் இணைந்து திறந்து வைத்தனர்.

பரிசுப் பொருள்

வைத்தியசாலையைத் திறந்து வைத்த ஜனாதிபதி, விடுதிகளைச் சென்று பார்வையிட்டார். இதன்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பரிசுப்பொருள்களையும் வழங்கினார்.

அடிக்கல் நடப்பட்டது

இதன் பின்னர் புற்றுநோயைக் குணப்படுத்தும் அதிநவீன றேடியோ தெரபி சிகிச்சை நிலையத்துக்கான அடிக்கல்லை ஜனாதிபதி நடுவார் என்று தெரிவிக்கப்பட்டபோதும், ஜனாதிபதி வடக்கு முதலமைச்சரை அடிக்கல் நடுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு அமைவாக வடக்கு மாகாண முதலமைச்சரும் அதன் பின்னர் சுகாதார அமைச்சரும் அடிக்கல் நட்டனர்.

இதன் பின்னர் நிகழ்வுகள் யாவும் விசேடமாக அமைக்கப்பட்ட அரங்கினுள் இடம் பெற்றன. கிளிநொச்சி மகா தேவா ஆச்சிரம மாணவர்களால், ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ வருகை தருவதற்கு முன்பாகவே வரவேற்பு நடனம் நிகழ்த்தப்பட்டது. முதல் நிகழ்வாக நிதி சேகரிப் புத் தொடர்பான காணொலி காண்பிக்கப்பட்டது. அதன் பின்னர், நிதி சேகரிப்பில் ஈடுபட்ட நாதன் சிவகணநாதன் மற்றும் சரிந்த உணம்புவ ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

வெளியேறினார் ஜனாதிபதி

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் உரை முடிந்து அரங்கில் நடன நிகழ்வு நடந்து கொண்டிருந்த போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரங்கிலிருந்து திடீரென எழுந்து சென்றார். இதனால் சிறிது பரபரப்பு ஏற்பட்டது. அவர் மீளவும் மூன்று நிமிடங்களில் திரும்பி வந்தார்.

விருது வழங்கி கௌரவிப்பு

நிதி சேகரிப்பு தொடர்பான நடைபயணத்தில் முழுமையாகப் பங்கெடுத்த 12 பேருக்கு ஜனாதிபதியால் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து ஜனாதிபதி உரை இடம்பெற்றது. அதன் பின்னர் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

(ஜ-5)

தவறான

சொன்னாலும் இந்த நாட்டிலே யதார்த்தம் என்ன என் பதை மக்கள் ஏற்றுக்கொள் கின்றார்கள். நாட்டில் உள்ள சகல மக்களும் சமாதானத் துடனும் சந்தோசத்துடனும் வாழ வேண்டும்.

இராணுவம் முழு நாட்டிலும் வேண்டும்

கடந்த காலத்தில் இந்தப் பகுதிக்கு நீங்கள் வந்தீர்களோ தெரியவில்லை. அடிக்கு ஓர் இராணுவ முகாம் இருந்தது என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். அந்தக் காலத்தில் 60 ஆயிரம் தொடக்கம் 75 ஆயிரம் வரையில் இராணுவத்தினர் வடக்கில் நிலை கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அந்த முகாம்களின் எண்ணிக்கை பத்து அல்லது அதனைவிடக் குறைவாகவேவுள்ளன. அதே போன்று படைவீரர்களும் 12 ஆயிரம் பேர்தான் நிலை கொண்டுள்ளனர். இராணுவம் முழு நாட்டிலும் இருக்க வேண்டும்.

இனத்தை அடிமைப்படுத்த முடியாது

எந்தவொரு இனத்தாலும் இன்னொரு இனத்தை அடிபணிய வைக்க முடியாது. அடக்கி ஒடுக்கி வைக்க முடியாது. அப்படியான சூழ்நிலைக்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

நாம் இந்த உலகத்தில் மனிதர்களாகத்தான் பிறந்தோம். எமது உடம்பிலும் உங்கள் உடம்பிலும் சிவப்பு நிற இரத்தம் தான் ஓடுகின்றது. எல்லோருடைய இரத்தமும் ஒன்றுதான். புற்றுநோய் இனம் பார்த்து வருவதில்லை.

தேர்தலை நடத்தியது ஜனநாயக உரிமை

கடந்த 30 ஆண்டு காலப் போர் முடிந்த பின்னர் நாங்கள் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். இந்தப் பகுதிகளில் கண்ணிவெடியகற்றலை மேற்கொண்டுள்ளோம். 3 லட்சம் மக்களை மீளக்குடியமர்த்தியுள்ளோம். வீதி, மின்சாரம், புகையிரதம் உள்ளிட்ட வசதிகளைக் கிடைக்கச் செய்துள்ளோம். உள்ளூராட்சித் தேர்தல், வடக்கு மாகாணத் தேர்தல், பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட எல்லாவற்றையும் நடத்தி ஜனநாயக உரிமையநிலைநாட்டியுள்ளோம்.

நானும் அரசியல்வாதிதான்

நானும் அரசியல்வாதிதான். நானும் தொடர்ந்து பேசிக் கொண்டேயிருப்பேன். நீங்களும் உங்கள் மதிய உணவுக்கும் போக முடியாது. எனக்கு கொழும்பிலுள்ள கூட்டத்துக்கும் செல்ல முடியாது.

தமிழில் பேச்சு

இதன் பின்னர் சுமார் 5 நிமிடங்கள் தமிழ் மொழியில் ஜனாதிபதி உரையாற்றினார். இதன்போது, மஹரகமவில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று புதியதொரு வைத்திய சாலை இன்று இங்கு அமைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன் எங்களது அரசு வரவு - செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறைக்கு 157 பில்லியன் ஒதுக்கியதாகக் குறிப்பிட்டார்.

யார் என்ன சொன்னாலும் உங்கள் பகுதிக்கு இன்னமும் உதவிகள் செய்யத் தயாராக இருக்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டார். (உ-5)

காணாமற்

காக வடக்குக்கு நேரடிப் பயணத்தை மேற்கொண்டு, சாட்சியங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில், வடக்குப் பயணம் முடிவடைந்த பின்னர் ஆணைக் குழுவின் அடுத்தகட்டப் பணிகள் எவ்வாறு அமையும் என வினவிய போதே அதன் பேச்சாளர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அத்தோடு, இதுவரைக்கும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும், தமிழில் கிடைக்கும் - கிடைக்கப் பெற்றுவரும் முறைப்பாடுகளை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரித்தார்.

இதுவரைக்கும் வடக்கு, கிழக்கிலிருந்து 8 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தொடர்ச்சியாகக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி உரிய காலத்தில் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கமுடியாத காரணத்தினாலேயே இவ்வாறு இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதியின் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது. அத்துடன், இவ்வறிக்கை வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு நம்பகத் தன்மையுடையதாகக் காணப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-சி)

கவலைப் படுவதா

வைத்தியசாலையைத் திறந்து வைத்தபின்னர், வடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போதே சிரித்துக் கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார் ஜனாதிபதி.

விக்னேஸ்வரன் நீதியரசர் என்ற வகையில் எங்களின் கௌரவத்தைப் பெற்றிருந்த ஒருவர். எனவே அவர் இப்போது அரசியலுக்கு வந்து எல்லா மேடைகளையும் எங்களைப் போன்று சாதகமான முறையில் பயன்படுத்துகிறார் இதுபற்றி நான் சந்தோசப்படுவதா கவலைப்படுவதா என்று எனக்கே தெரியவில்லை - என்றார். (ஜ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணச் சமர் உதைபந்து தொடர் சம்பியனானது ஞானமுருகன்

யாழ்ப்பாணம், ஜன.20
விறுவிறுப்பாக இடம்பெற்ற யாழ்ப்பாணச் சமர் உதை பந்தாட்ட இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண் ணத்தை சுவீகரித்துக் கொண் டது மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்க ழகம்.
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழ கம் நடத்திய யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி யாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மின்னொளி யில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.
இறுதியாட்டத்துக்கு முன்ன தாக இடம்பெற்ற நட்பு ரீதி யான ஆட்டத்தில் ஊரெழு இரா ணுவ அணியை எதிர்த்து கர ணவாய் கொலின்ஸ் விளை யாட்டுக் கழக அணி மோதி யது.
இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல் களையும் பெறாதததை அடுத்து ஆட்டம் சமநிலை யில் முடிவடைந்தது.
அதன் பின்னர் ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்பின் மத்தி யில் இறுதியாட்டம் ஆரம்ப மானது. இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி யும், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி யும் களமிறங்கின. முதற் பாதி ஆட்டத்தில் இரு அணியின ரும் தத்தமது அணிக்கான கோலினைப் பெற வேண்டும் என்ற வேகத்துடன் களம் இறங்கியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது.
இரண்டு அணியினரும் கோல் பெறுவதற்காக பல முனைக ளிலும் முயற்சிகளை மேற் கொண்ட வண்ணம் இருந்த னர்.
இதன்போது ஞானமுருகன் அணிவீரன் தவறுபன்தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரி யான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலா வது கோலைப் பெற்றுக் கொண்டார்.
பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வீரர்கள் தமது அணிக்கான கோலைப் பெறு வதற்காக பல முனைகளிலும் முயற்சிகளை மேற்கொண் டனர். ஆனாலும் அவர்க ளின் முயற்சிகள் பயனளிக்க வில்லை.
முதற்பாதி ஆட்டம் இடைவே ளைக்காக நிறுத்தப்பட்ட போது ஞானமுருகன் விளை யாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை யில் இருந்தது. இரண்டாம்பாதி ஆட் டம் ஆரம்பமானபோது இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன.
ஒரு கட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வீரர்களின் ஆட்டத்தில் ஆதிக் கம் செலுத்தி எதிர் அணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.
ஞானமுருகன் அணியின் பின்கள வீரர்களின் முயற்சி யினால் பாடும்மீன் வீரர்க ளின் கோல் பெறும் முயற்சி கள் தடுத்து நிறுத்தப்பட்டன.
பதிலுக்கு ஞானமுருகன் அணி வீரர்களும் கோல் பெற பல முயற்சிகளை மேற்கொண் டனர். ஆனாலும் அவர்க ளால் கோல் எதையும் பெற முடியவில்லை.
இறுதியில் ஞானமுருகன் விளை யாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
இறுதியாட்டத்தில் சிறந்த வீர ராக ஞானமுருகன் அணி வீரர் தெரிவானார்.
தொடர் ஆட்ட நாயகனாக பாடும்மீன் அணி வீரர் திலீப் தெரிவானார். (ற-23)

> முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது ஞான முருகன் விளை யாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை யில் இருந்தது.

இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன.20
வவுனியா வைரவப்புளி யங்குளம் யங்ஸ்ரார் விளை யாட்டுக் கழகம் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாப கார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் வைர வப்புளியங்குளம் யங்ஸ் ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று திங்கட்கி முமை இடம்பெறும் ஆட்டத் தில் உதயதாரகை விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து அல் இக்பால் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

புதிய பாரதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன.20
அம்பாள்குளம் இளந் தென் றல் விளையாட்டுக் கழகம் பொங்கலை முன்னிட்டு நடத் தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி யாட்டத்தில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.
கடந்த புதன்கிழமை இளந் தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மலை யாளபுரம் புதிய பாரதி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து அம்பாள்குளம் இளந் தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.
5 செற்களைக் கொண்ட ஆட் டத்தில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செற் கணக் கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. (ற-23)

சதுரங்கத்தில் ஹாட்லிக் கல்லூரி சம்பியன்

மாங்குளம், ஜன.20
வடமராட்சி கல்வி வலயத்துக் குட்பட்ட பாடசாலைகளுக்கி டையிலான ஆண்களுக்கான சதுரங்கப் போட்டி நேற்று முன்தினம் யா/ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றது.
அதில் 15, 19 வயதுப் பிரிவுக ளில் ஹாட்லிக் கல்லூரி சம் பியனாகியுள்ளது.
15 வயது ஆண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை யா/ஹாட்லிக் கல்லூரியும், 2ஆம் இடத்தை யா/நெல்லியடி மத்திய கல்லூ ரியும், 3ஆம் இடத்தை யா/உடு ப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும், 3ஆம் இடத்தை யா/நெல்லியடி மத் திய கல்லூரியும் பெற்றன.
19 வயது ஆண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை யா/ஹாட்லிக் கல்லூரியும், 2ஆம் இடத்தை யா/நெல்லியடி மத்திய கல்லூ ரியும், 3ஆம் இடத்தை யா/உடு ப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல் லூரியும் பெற்றன. (ற-422)

சமநிலையில் முடிந்தது ஆட்டம்

குருநகர், ஜன.20
அகில இலங்கைப் பாடசாலை கள் கிரிக்கெட் சங்கத்தால் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் 19 வயதுப் பிரிவின் இரண்டாம் பிரிவில் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூ ரிக்கும் கொழும்பு கெயாரிக் கல்லூரிக்கும் இடையில் நடை பெற்ற கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடி வடைந்துள்ளது.
இந்தப் போட்டி கடந்த 6 ஆம் 7 ஆம் திகதிகளில் கொழும்பு கெயாரிக் கல்லூரியின் விளை யாட்டு மைதானத்தில் நடை பெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கெயாரிக் கல்லூரி அணி முதலாவது இனிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது.
பதி லுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி தமது முதலாவது இனிங்ஸில் சகல இலக்குக ளையும் இழந்து 209 ஓட்டங் களைப் பெற்றது.
கொழும்பு கெயாரிக் கல்லூரி அணியினர் தமது இரண்டா வது இனிங்ஸில் 4 இலக்கு களை இழந்து 234 ஓட்டங்க ளைப் பெற்று யாழ். சென்.பற் றிக்ஸ் கல்லூரி அணியை துடுப்பெடுத்தாட அழைத்த னர்.ஆட்ட நேர முடிவுவரை யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 4 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். (ற-51)

கிண்ணம் வென்றது யங்கம்பன்ஸ்

யாழ்ப்பாணம், ஜன.20
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகம் 2013 ஆம் ஆண்டு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கடந்த வெள்ளிக்கிழமை இமை யாணன் மத்திய விளையாட் டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ற-23)

வடமராட்சி வலய ஆண்கள் உதைபந்து நெல்லியடி, உடுப்பிட்டி பலப்பரீட்சை

பருத்தித்துறை, ஜன.20
வடமராட்சி கல்வி வலயத் துக்குட்பட்ட பாடசாலைகளுக் கிடையே நடத்தப்பட்டு வரும் 19 வயதுக்குட்பட்ட ஆண்க ளுக்கான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதியாட் டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியும், உடுப்பிட்டி அமெ ரிக்கன் மிஷன் கல்லூரியும் களமிறங்கவுள்ளன.
தொடரின் அரையிறுதியாட் டங்கள் நேற்று குஞ்சர் கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றன.
முதலாவது அரையிறுதியாட் டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல் லூரி அணி மோதியது.
முதற்பாதியாட்டம் இரு அணிக் கும் சவாலாக அமைந்தது. தேவரையாளி இந்துக் கல் லூரியின் அணியின் பக்கமே ஆட்டம் சாய்ந்திருந்தது. இத னால் ஆட்டம் தொடங்கிய சில நிமிடங்கள் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியா மல் நெல்லியடி மத்திய கல் லூரி அணியினர் திணறினர்.
8 ஆவது நிமிடத்தில் தேவரை யாளி இந்துக் கல்லூரி வீரர் ஜெயராஜ் முதலாவது கோலைப் போட தேவரையாளி இந்துக் கல்லூரி அணி உற்சாகமடைந் தது.
அதன் பின்னர் நெல்லியடி மத்திய கல்லூரி அணியினர் தம்மை சுதாகரித்து தமது பந்துப் பரிமாற்ற வியூகத்தை மாற்றி அமைத்தனர். அதன் பயனாக 13 ஆவது நிமிடத்தில் பேற்றுப் பிரதேசத்துக்குள் தேவரையாளி இந்துக் கல் லூரி அணி வீரரின் கையில் பந்துபட்டதால் நெல்லியடி மத்திய கல்லூரி அணிக்கு தண்டனை உதை கிடைத் தது. அதனைச் சரியாகப் பயன் படுத்திய அந்த அணி வீரர் டினோஜன் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமநிலை யாக்கினார்.
இடைவேளைக்கு முன்னர் 1:1 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் இருந்தன.
இடைவேளையின் பின்னர் நெல்லியடி மத்திய கல்லூரி அணியினர் ஆட்ட வியூகத்தை மாற்றியமைத்து களம் இறங் கினர். அதனால் பிற்பாதியாட்டம் நெல்லியடி பக்கமே சாய்ந்தது.
5 ஆவது நிமிடத்தில் நெல்லி யடி மத்திய கல்லூரி அணி வீரர் திலக்சன் ஒரு கோலைப் போட்டு தனது அணியை முன்னிலைப்படுத்தினார். அதன் பின்னர் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியினர் தமது ஆட்டத்தில் வேகத்தைக் காட்டினர். 13 ஆவது நிமிடத் தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரர் ஜெயராஜ் மிகச் சிறப்பான கோல் ஒன் றைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையை சமப்படுத் தினார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பின் உச்சக் கட் டத்தை எட்டியது. ஆனாலும் இரு அணிகளாலும் மேலதிக கோல் எதனையும் போட முடியவில்லை.
இறுதியில் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. அதில் நெல்லியடி மத்திய கல்லூரி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத் துக்குத் தகுதி பெற்றது.
மற்றைய அரையிறுதியாட் டத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது.
ஆட்டம் தொடங்கியதிலிருந்து உடுப்பிட்டிஅமெரிக்கன்மிஷன் கல்லூரி அணி ஆட்டத்தை தம்வசப்படுத்தி வைத்தனர். ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத் தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி வீரர் சாருஜன் முதலாவது கோலைப் போட்டார். இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித் தது அந்த அணி.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போதும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஹாட்லிக் கல்லூரி அணியினர் திணறினர். 9 ஆவது, 12 ஆவது நிமிடங்க ளில் உடுப்பிட்டி அணி வீரர் கள் நிதிதீபன், துஷ்யந்தன் ஆகியோர் அடுத்தடுத்து கோலைப் போட ஹாட்லிக் கல்லூரி அணியினர் நிலை குலைந்தனர்.
அதன் பின்னர் ஹாட்லிக் கல்லூரி அணியினர் பல் வேறு தடவை முயற்சித்த போதும் கோல் எதனையும் போடவில்லை.
இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ற-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெஸ்ஸியின் அதிரடியால் காலிறுதிக்கு பார்சிலோனா

கோபா ரெல் ரே உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதிக்கு பார்சிலோனா அணி முன்னேறியது.

ஸ்பெயினில் உள்ளூர் உதைபந்தாட்ட அணிகள் பங்கேற்கும் கோபா ரெல் ரே உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. மட்ரிட் நகரில் நடந்த காலிறுதிக்கு முந்தைய சுற்றின் 2ஆவது போட்டியில், பார்சிலோனா- கெடாபி அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி இரண்டு கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு கெடாபி அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில், பார்சிலோனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (த)

இந்தியாவை வீழ்த்தியது நியூசிலாந்து

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும் நியூஸிலாந்து அணிக்குமிடையிலான 05 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் நியூஸிலாந்து அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேப்பியரில் நேற்று இடம் பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 07 இலக்குகளை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது.

02இலக்குகளை இழந்து 32 ஓட்டங்களுடன் தடுமாறிய நியூஸிலாந்து அணிக்கு கேன் வில்லியம்சன், றொஸ் ரெய்லர் இருவரும் நல்ல இணைப்பாட்டத்தை வழங்கினர். இருவரும் 121 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 5ஆவது இலக்குக்காக கொரே அன்டர்சன், லூக் றொங்கி இருவரும் 37 பந்துகளில் 66 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.



துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக கேன் வில்லியம்சன் 88 பந்துகளில் 71 ஓட்டங்களையும் கொரே அன்டர்சன் 40 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும் றொஸ் ரெய்லர் 82 பந்துகளில் 55 ஓட்டங்களையும் லூக் றொங்கி 18 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பிரென்டன் மக்கலம் 25 பந்துகளில் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக மொஹமட் ஷமி 04 இலக்குகளையும் புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, ரவீந்திர ஜடேஜா மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

293 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 48.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்று, 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

15 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அவ் வணி, இரண்டாவது இலக்குக் காக 58 ஓட்டங்களைப் பகிர்ந்தி ருந்தது. ஆனால், அதன் பின் னர் 04 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களுடன் தடுமாறி யது. 5ஆவது இலக்குக்காக விராட் கோஹ்லி, மஹேந்திரசிங் டோனி இருவரும் 95 ஓட்டங் களைப் பகிர்ந்தபோதிலும், அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்குகள் வீழ்த்தப்பட்டிருந்தன. துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராட் கோஹ்லி 111 பந்துகளில் 123 ஓட்டங்களையும் மஹேந்திரசிங் டோனி 46 பந்துகளில் 40 ஓட்டங்களையும் ஷிகர் தவான் 23 பந்துகளில் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக மிற்சல் மக்லாங்கன் 4 இலக்குகளையும் கொரே அன்டர்சன் 2 இலக்குகளையும் ரிம் சௌதி, அடம் மில்ன், கேன் வில்லியம்சன் மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக கொரே அன்டர்சன் தெரிவானார். (400)

கம்பிர் இடம்பெறாதமை அதிர்ச்சி

உலக கிண்ணத் தொடருக் கான 20/20 உத்தேச அணி யில் கம்பீர், ஷேவாக் ஆ கி யோர் இடம்பெற வில்லை.

பங்களாதேஷில் 5ஆவது ஐ.சி.சி 20/20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை நடைபெறஇருக் கின்றது.

இத்தொட ருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியை இந்திய கிரிக் கெட் சபையின் தெரிவுக்குழு அறிவித்தது. இதில் ஷேவாக், கவுதம் கம்பிர் உள்ளீட்டோர் தெரிவு செய் யப்பட வில்லை.

இதுவரை 37 சர்வதேச 20/20 போட்டியில் விளையாடிய கம்பிர், 7 அரை சதம் உட்பட 932 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் இந்திய வீரரும், டெல்லி கிரிக்கெட் சங்கத்தின் தேர்வுக்குழு தலை வருமான சேட்டன் சவுகான் கூறுகையில், 20/20 தொடருக் கான உத்தேச அணியில் கம்பிருக்கு இடம் கிடைக்காதது அதிர்ச்சியும், ஆச்சரியமும் அளிக்கிறது. 20/20 போட்டியில் சிறப்பாக விளையாடி வரும் கம்பிர், அதிக ஓட்டங்கள் சேர்த்த இந்திய வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். ரஞ்சிக் கிண்ணத் தொடரிலும் இவரது செயற்பாடு மோச மாக இல்லை. இந்த நிலையில் இவரை தேர்வு செய்யாதது, தேர் வுக்குழு மீது வருத்தம் ஏற்படுத்துகிறது.

அடுத்து வரவுள்ள ஐ.பி.எல் தொடரில் கம்பிரின் செயற்பாடு சிறப்பான தாக இருக்கும்.

இம்முறை இவர் நிறைய ஓட்டங்கள் சேர்ப் பார் என நம்புகிறேன். உத்தேச அணியில் ரஜத் பாட்டியா, உன்முகத் சந்த் ஆகி யோ ருக்கு இடம் கிடைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள் ளார்.

முன்னாள் இந்திய வீரர் மற்றும் டில்லி அணி யின் அணித் தலைவருமான மதன் லால், உலகக் கிண்ண 20/20 தொடருக்கான இந்திய உத்தேச அணியில் கம்பிருக்கு இடம் கிடைக்காதது ஏமாற்றம் அளிக்கிறது என்றும், இவரை விட மோசமாக செயல்படும் நிறைய வீரர்கள் உத்தேச அணியில் இடம் பெற்றிருப்பது வேதனையான விடயம் எனவும் தெரிவித்துள்ளார். (த)

வேண்டாம் அரசியல்

அரசியலில் இணையும் எண்ணம் கிடையாது என இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். இதன் காரணமாக அவர் அரசியலில் இணைவார் என்ற சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் தோன்றிய தலை சிறந்த கிரிக்கெட் தலைவர்களில் ஒருவரான சௌரவ் கங்குலிக்கு, இந்தியாவின் எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி அரசியலில் இணைவதற்கான அழைப்பை வழங்கியதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தியாவின் லோக் சபா தேர்தலில் போட்டியிடவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியை அப்போது உறுதிப்படுத்தியிருந்த சௌரவ் கங்குலி, அது குறித்து முடிவெதனையும் எடுக்கவில்லை என அப்போது தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது கருத்துத் தெரிவித்துள்ள சௌரவ் கங்குலி, தான் அரசியலில் இணைந்து கொள்ளப்போவதில்லை எனவும் தான் ஒரு விளையாட்டோடு சம்பந்தப்பட்டவன் எனவும் தெரிவித்தார்.

இதை உறுதிபடக் கூறுவதாகக் குறிப்பிட்ட சௌரவ் கங்குலி, அரசியலில் இணையும் எண்ணமில்லை என்பதை உறுதிப் படுத்தினார்.

(த)

உலக 20/20 போட்டிக்கான இந்திய அணியின் 30 பேர்

பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக20/20 தொடருக்கான இந்தியாவின் 30 பேர் கொண்டதற்காலிகக் குழாம் அறிவிக் கப்பட்டுள்ளது.

மார்ச் 16 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இத்தொடருக்கான இந்தியாவின் 15 பேர் கொண்ட குழாம் இந்த 30 பேர் கொண்ட குழாமிலிருந்து தெரிவு செய்யப்படும். அறிவிக் கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட குழாமில் கௌதம் கம்பீர், யூசுப் பதான், இர்பான் பதான், முரளி விஜய் ஆகிய வீரர்க ளுக்கு வாய்ப்புக்கள் வழங்கப் படவில்லை. தவிர, செற்றேஸ்வர் புஜாராவும் சேர்க்கப்படவில்லை. சேர்க்கப்பட்டுள்ள வீரர்களில் ஹர்பஜன் சிங், சஞ்சு சம்சொன், ராஜத் பாத்தியா, கேதார் யாதவ், உன்முக்ட் சந், மந்தீப் சிங், பார்த்திவ் பட்டேல், சபாஷ் நதீம் ஆகிய வீரர்கள் அண்மைக்காலத்தில் இந்தியா சார்பாகப் பங்குபற்றாத வீரர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்தியாவின் ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமிலிருந்து நீக்கப்பட்டுள்ள சகலதுறை வீரர் யுவ்ராஜ் சிங்கிற்கு இக்குழாமில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள 30 பேர் கொண்ட குழாம்

ஷிகர் தவான், றோகித் சர்மா, விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, அஜின் கியா ரஹானே, அம்பத்தி ராயுடு, மஹேந்திரசிங் டோனி, டினேஷ் கார்த் திக், ரவீந்திர ஜடேஜா, இரவிச்சந்திரன் அஷ்வின், புவனேஷ்வர் குமார், மொஹமட் ஷமி, இஷாந்த் சர்மா, வினய் குமார், மோகித் சர்மா, கேதார் யாதவ், யுவ்ராஜ் சிங், அமித் மிஷ்ரா, ராஜத் பாத்தியா, சஞ்சு சம்சொன், ஈஷ்வர் பாண்டே, உமேஷ்யாதவ், உன் முக்ட் சந், மந்தீப் சிங், ஹர்பஜன் சிங், வருண் ஆரொன், சபாஷ் நதீம், பார்த்திவ் பட்டேல், கரண் சர்மா ஆகியோரே அடங்கு கின்றனர். (த)

சர்வதேச கிரிக்கெட் சபையைக் கட்டுப்படுத்த இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முயற்சி

சர்வதேச கிரிக்கெட் சபையை முழுமையாகக் கட்டுப்படுத்தும் புதிய பிரேரணை யொன்றை இந் திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை, ஆஸ்ரேலிய கிரிக்கெட் சபை ஆகியன தயாரித்து வருகின்றன.

இந்தப் பிரேரணை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுமாயின், இந்த 3 கிரிக்கெட் சபைகளும் சர்வதேச கிரிக்கெட்சபையைக் கட்டுப்படுத்தும் வழிவகை ஏற்படும்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர்வாகக் கட்டமைப்பை முழுமையாக மாற்றும் இந்தப் பிரேர ணையை சர்வதேச கிரிக்கெட் சபையின் நிதி, வர்த்தக விவ காரச் செயற்குழு தயாரித்துள்ளது. இந்த செயற்குழுவில் இங்கிலாந்து கிரிக் கெட் சபை, அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை ஆகியன முக்கியமான உறுப்பினர்களாகக் காணப் படுகின்றன.

இந்தப்பிரேரணையின் படிசர்வதேச கிரிக்கெட் சபையின் வருமானமானது, அச்சபைக்கு பிரதான வருமானத்தை வழங்கும் இந்த மூன்று கிரிக்கெட் சபைகளுக்கும் அதிகமானதாகப் பிரித்து வழங்கப் படும் என்பதோடு, ஏனைய கிரிக்கெட் சபைகளுக்கு தற்போது கிடைப்பதைவிட மிகக் குறைவான எவு வருமானமே கிடைக்கப்பெறும்.

அத்தோடு, சர்வதேச கிரிக்கெட் சபைக்கான நிறைவேற்று செயற் குழுவினை உருவாக்கவும் இந்தப் பிரேரணை முன் மொழிந்துள்ளது.

இந்தச் செயற்குழுவில் 4 உறுப்

International Cricket Council

பினர்கள் காணப்படுவார்கள் எனவும், அதில் மூன்று இடங்கள் இந்திய, இங்கிலாந்து, ஆஸ்ரேலிய கிரிக்கெட் சபைகளுக்கு நிரந்தரமானதாகவும் நான்கா வது இடம் சர்வதேச கிரிக்கெட் சபையின் செயற்குழுவால் வரு டத்திற்கொருமுறை மாற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் படும்.

புதிதாக உருவாக்கப்படும் சர்வதேச கிரிக்கெட் சபைக்கான நிறைவேற்று செயற்குழு, சர்வதேச கிரிக்கெட் சபை சார்ந்த யாப்பு, நிர்வாக, அபிவிருத்தி உட்பட அனைத்து விடயங்களுக்கும்பொறுப்பான தனித்த அமைப்பாகச் செயற்படும் என வும் அறிவிக்கப்படுகிறது.

இதனைத்தவிர, டெஸ்ட் போட்டிகளில் இரண்டு வகையான பிரிவு கள் உருவாக்கப்பட்டால், அவற்றில் ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவிற்கு தாழ்த் துதல், உயர்த்துதல் ஆகியன இந்திய இங்கிலாந்து ஆஸ்ரேலிய அணிகளுக்குப் பொருந்தாது எனவும் குறிப்பிடப்பட்டுள் ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை யின் வருமானத்துக்காக ஒரு முகமாக இது முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமநிலை நோக்கி நகரும் இலங்கை - பாக். டெஸ்ட்

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 16ம் திகதி டுபாயில் ஆரம்பமானது.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்ததோடு, இரண்டாவதுடெஸ்ட்டில்இலங்கை வெற்றியீட்டியிருந்தது.

இதன்படி இலங்கை மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என முன்னிலையில் இருக்க, தொடரை சமப்படுத்தவேண்டுமாயின் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் பாகிஸ்தான் வீரர்கள் களமிறங்கியுள்ளனர்.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இலங்கை சார்பில் டில்ருவன் பெரேரா 95 , அஞ்சலோ மத்தியூஸ் 91ஓட்டங்களையும்குமார் சங்கக்கார 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இதன்படி 9 இலக்குகளை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்ற நிலையில்,தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது இலங்கை அணி.

இதனையடுத்து துடுப்பெடுத்தாடகளமிறங்கிய பாகிஸ்தான் சார்பில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியஅஹமட்ஷெஷாத் 147 ஓட்டங்களை விளாசினார். பாகிஸ்தான் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 321 ஓட்டங்களைப பெற்றது மிஸ்பா உல் ஹக்63 ஓட்டங்களையும் கரும் மன்சூர் 52ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை சார்பில் சிறப்பாக பந்து வீசிய ரங்கன ஹேரத் 5 இலக்குகளை சாய்த்தார். அத்துடன் சமிந்த எரங்க 2 இலக்குகளையும் பெரேரா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள் இதனைத் தொடர்ந்து 157 ஓட்டங்களால் முன்னிலையில் நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை ஆட்ட நேரமுடிவில் 5 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. மஹேல ஜெயவர்த்தன 46 ஓட்டங்களையும் சில்வா 36 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். களத்தில் பிரசன்ன ஜெயவர்த்தன 6 ஓட்டங்களுடனும் மத்தியூஸ் 19ஓட்டங்களுடனும் உள்ளனர் .பந்து வீச்சில் அப் துல் ரகுமான் 2 இலக்குகளையும முகமட் தர்கா, சயிட் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். (400)

தொடரைக் கைப்பற்றியது ஆஸ்திரேலிய அணி



ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு5போட்டிகள்கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் பங்குபற்றி வரும் இங்கிலாந்து அணி அந்தத் தொடரை இழந்துள் ளது. 3ஆவது போட்டியில் தோல்வியடைந்தே அவ்வணி இத் தொடரை இழந்துள்ளது.

சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட அவ்வணி 8.4 பந்துப் பரிமாற்றங்களில் முதலாவது இலக்கை இழந்து 50 ஓட்டங்களைக் குவித்ததோடு, 2 இலக்குகளை இழந்து 91 ஓட்டங்களுடன் காணப்பட்டது. ஆனால் அதன் பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்தது. இறுதி 8 பந்து களில் 18 ஓட்டங்கள் குவிக்கப்பட்டு, அவ்வணி 243 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக இயன் மோர்கன் 58 பந்துகளில் 54 ஓட்டங்களையும், ரிம் பிரெஸ்னன் 29 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும், அலஸ்ரெயர் குக் 36 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக நேதன் கோர்ட்டர் நீல் 3 இலக்குகளையும், ஜேம்ஸ் பள்கினர், டானியல் கிறிஸ்ரியன் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஷேவி யர் டொகேர்ட்டி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

244 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 40 பந்துப்பரிமாற்றங் களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 43 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ் வணி, 2ஆவது இலக்குக்காக 78 ஓட்டங்களையும், 3வது விக்கெட்டுக்காக 51 ஓட்டங் களையும், 4 ஆவது இலக்குக் காகப் பிரிக்கப்படாத 72 ஓட்டங்களையும் பகிர்ந்திருந்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 70 பந்துகளில் 71 ஓட்டங்களையும், ஷோன் மார்ஷ் 89 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும், பிரட் ஹடின் 33 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 28 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக கிறிஸ் ஜோர்டான், பென் ஸ்ரோக்ஸ், ரவி போப்பாரா மூவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக டேவிட் வோணர் தெரிவுசெய்யப்பட்டார். (400)

வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

25 வருடங்களிற்கு மேலான அனுபவம் வாய்ந்த
வெற்றித்தேர்வு வளவாளர்களின் தயாரிப்பில்

ஆரம்ப வகுப்புகளில் படிநிலை அறிவு வளர

2014ஆம் ஆண்டிற்கான நாடளாவிய வெளியீடுகள் வெளிவருகின்றன.

வெற்றித்தேர்வு வினாப்பத்திரங்கள்

☞ தரம் 5 - 20 வெற்றித்தேர்வுகள் } தவணைக்கும் இலவச
☞ தரம் 4 - 15 வெற்றித்தேர்வுகள் } பாடவினாப்பத்திரங்கள்

☞ தரம் 1, தரம் 2, தரம் 3 பரீட்சை வழிகாட்டிகள்
பாடரீதியான வினாப்பத்திரங்களைக் கொண்ட 10 வெளியீடுகள்

☞ தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்.

☞ தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் வழிகாட்டி நூல்.

தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்ளவும்.
வினாப்பத்திரங்கள் நேரடியாக பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுகளுடன்
வெற்றித்தேர்வு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொடர்புகளுக்கு: 021 222 9016, 0775388471, 0773126807

வெளிவந்துவிட்டது!

வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின்
2014இற்கான புதிய பதிப்புக்கள்
தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு வினாவிடைத் தொகுப்பு
புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்
வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள்
புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்
நாடெங்கிலுமுள்ள வெற்றித்தேர்வு முகவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
தவறாமல் வாங்கிப் பயனடையுங்கள்.
பாடசாலைகள் விசேட விலைக்கழிவுடன் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
நாடுமுழுவதும் : 021 222 9016
0775388471, 0773126807

சாதனை படைத்தார் மஹேல ஜயவர்த்தன

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 11,000 ஓட்டங்களைக் கடந்த முதல் இலங்கை வீரர் என்ற பெருமையை மஹேல ஜயவர்த்தன பெற்றுள்ளார். பாகிஸ்தான் அணியுடன் இடம்பெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போதே மஹேல இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். (400)

பொருளியல் உதயன்
(30வரு சேவையைக் கடந்த ஆசிரியர் சேவையில்)
Economics Hall
ஆசிரியர் சந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2014 13ஆம் ஆண்டு பாடத்திட்டம் ஆரம்பம்
பணமும் வங்கியும் ஆரம்பம்
சனி, ஞாயிறு (10.00a.m) (41007) (7.6.3)

ஆங்கில வகுப்பு
தரம் 2 O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் வேலை செய்பவர்களுக்கு
ENGLISH SPOKEN WITH GRAMMAR
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு : M. Rajan
077 228 6054, 077 606 5495 (42489) (7.6.3)

டோனி புதிய சாதனை

இந்திய அணியின் அணித்தலைவர் டோனி புதிய சாதனை படைத்துள்ளார்.

நியூசிலாந்தில் நேற்று நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியிலேயே இச்சாதனை படைத்துள்ளார்.

அதாவது, 300 ஆட்டமிழப்பை (கேட்ச் மற்றும் ஸ்டமிங்) செய்த முதல் இந்திய விக்கெட் கீப்பர் என்ற சாதனையை பெற்றார்.

அவர் ரோஸ் டெய்லர், மேக்குல்லம் ஆகியோர் அடித்த பந்துகளை பிடி எடுத்தார்

238 ஒருநாள் போட்டியில் விளையாடி 301 ஆட்டமிழப்பை செய்து(கேட்ச் 222+ ஸ்டமிங் 79) உலக அளவில் 4ஆவது இடத்தில் உள்ளார்.

கில்கிறிஸ்ட்(472) முதலிடத்திலும், சங்ககரா(443) 2ஆவது இடத்திலும், மார்க் பவுச்சர்(425) 3ஆவது இடத்திலும் உள்ளனர். (400)

மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும்
சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
4½ டிராக்டர் 19,000/=
தொடர்பு: கண்ணா, 077 759 0792
(43774)(4.6.3)

வெளிவந்துவிட்டது
A/L 2014, 2015 மாணவர்களுக்கான
பௌதீக இரசாயனம்
கணிப்புக்களும் பயிற்சிகளும் (விடைகளுடன்)
ஆசிரியர்: க. வாணிமுகுந்தன் BSc,Dip.in.Ed,MSc
தொடர்பு:077 717 2715
குடாநாட்டின் அனைத்துப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (43755)(3.6.4)
பிரதான விநியோகஸ்தர்கள்: நூலகர்கள் புத்தகசாலை -கொழும்பு, அன்னை புத்தகசாலை -யாழ்ப்பாணம்

ஓம் நமசிவாய ஆன்மீக பவனி 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
(C/11084)(7.6.3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.